மகாத்மா காந்தி

நினைவு மாலை (இரண்டாம் பதிப்பு)

ஸ்ரீமதி
எஸ். அம்புஜம்மாள்

பதிப்பாசிரியர்
பி. ஸ்ரீ





தினமணி வெளியீடு

அணா 12

சா. நாராயண[illegible]

தினமணி வெளியீடு : 1 பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

மகாத்மா காந்தி நினைவு மாலை

(புதிய பதிப்பு)

எஸ். அம்புஜம்மாள்

ஸ்ரீ திரு. வி. க. முன்னுரையுடன்



"இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

தினமணி காரியாலயம்
100, மவுண்டு ரோடு
சென்னை
1944

 [விலை அணா 12

முதல் பதிப்பு 1944
இரண்டாம் பதிப்பு 1944

தினமணி வெளியீடு

இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்பேட்டை, சென்னை

திரு. கி. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை

திரு. ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்

திரு. கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியர்,
ப்ரெஸிடென்ஸி காலேஜ், சென்னை

திரு. டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை

திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவெர்ஸிடி

திரு. ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா

திரு ஏ. வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், பிரகதி பிக்சர்ஸ்,
சென்னை

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் தலைவர்,
சென்னை யூனிவெர்ஸிடி

பொருள் அடக்கம்

பதிப்புரை

'தினமணி' முதல் வெளியீடாகிய இந்தப் புஸ்தகத்தின் பிரதிகளெல்லாம் விற்பனையாகி, இந்த இரண்டாம் பதிப்பு இவ்வளவு விரைவில் தயாராவதிலிருந்து, தமிழ் நாடு இந்த நூலை எத்தகைய ஆவலோடு வரவேற்றிருக்கவேண்டும் என்பதை வாசகர்கள் ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம்.

இந்த மாலையிலுள்ள சிற்சில மலர்கள் முதல் முதல் 'தமிழ் மலரி'லும் 'கல்கி'யிலும் மலர்ச்சி பெற்றுத் தமிழ் வாசகர்களின் ஹிருதயத்தைக் கவர்ந்தன. அந்த மலர்களோடு வேறு பல நினைவு மலர்களையும் சேர்த்து ஸ்ரீ அம்புஜம்மாள் ஒரு புது மாலையாகவே தொடுத்துக் கொடுத்தது தான் முதலாவது பதிப்பு. அதன் அழகையும் பரிமளத்தையும் உடனே அறிந்து மகிழ்ந்தது தமிழ் நாடு. புதுமைத் தமிழ் இலக்கியத்தில் ஒரு புதுவழி என்று அறிஞர்களும் ரஸிகர்களும் ஒரு முகமாய்ப் பாராட்டினார்கள். அந்தப் புஸ்தகம் இந்த இரண்டாவது பதிப்பில் திருந்திய ஒரு புது வடிவம் பெற்றிருக்கிறது. முதல் பதிப்பில் இல்லாத சில விசேஷ நினைவு மலர்களும் இந்த மாலையில் இடம் பெற்றிருக்கின்றன. மகாத்மா இந்த ஆசிரியருக்கு எழுதியிருந்த கடிதங்களில் இருபத்தைந்து புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சில புதிய படங்களும் இணைக்கப்பெற்றிருக்கின்றன. முதல் பதிப்பில் இல்லாத சில தேதி விவரங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

'மகாத்மாவின் ஸ்வீகார புத்ரி' என்று சொல்லப்பட்ட இந்த ஆசிரியர் தமது ஹிருதயத்திலிருந்து மலர்ச்சி பெற்ற நினைவு மலர்களையும், வாடாத அன்பு-

மலர்களையும் கொண்டு தொடுத்த இந்த நினைவு மாலை இப்போது ஒரு புத்தப் புதிய அழகும் ஒளியும் மணமும் பெற்று வருகிறது. இந்தியாவின் தனிப்பெருந் தலைவரான மகாத்மாவுக்குத் தமிழன்னை சூட்டும் மாலையென்றே தமிழ் மக்கள் அனைவரும் இந்த முயற்சியைப் போற்றுவார்கள் என்பது திண்ணம்.

சென்னை,
12–12–'44.

பி. ஸ்ரீ.
பதிப்பாசிரியர்
"தினமணி வெளியீடு".

முன்னுரை

ஆண்மை பெண்மை என்பன பிறப்பில் அமைவனவா? அல்லது பண்பில் அமைவனவா? இதைப்பற்றிய ஆராய்ச்சி ஈண்டு நிகழ்த்த வேண்டுவதில்லை. இரண்டும் பண்பில் அமைவன என்பது அறிஞர்தம் உள்ளக் கிடக்கை.

காந்தி அடிகள் ஆண்மை உடையவரா? பெண்மை உடையவரா! பெண்மை உடையவர் என்னும் நுட்பம் அவரது வாழ்க்கையில் நனி விளங்குகிறது.

பெண்மை பெரிதும் யாண்டு விளங்கும்? அஃது ஈர நெஞ்சில் விளங்குவது இயல்பு.

ஈர அன்பினர், யாதும் குறைவிலார்
வீரம் என்னல் விளம்பும் தகையதோ?

—சேக்கிழார்.

ஈர நெஞ்சினின்றும் பிறப்பது வீரம். வீரம் பெண்மைக் கூறு.

காந்தி அடிகள் வீரம் அஹிம்ஸா தர்மத்தை அடிப் படையாகக் கொண்டு அரும்பி மலர்ந்து காய்த்துக் கனிந்து நிற்றல் உலகறிந்த தொன்று. அவ்வீரம் பலரை வீர ராக்கியது.

காந்தி அடிகளின் நோக்கால் வீரராகியவருள் ஒருவர் திருமதி எஸ். அம்புஜம்மாள் அவர்கள். அம்புஜம்மாள், பாரத நாட்டு வீரருள் ஒருவராகிய எஸ். ஸ்ரீநிவாஸையங் காரின் அருந்தவப் புதல்வியார். அவ்வம்மையாரின் வீரம், அஹிம்ஸா தர்மப் போரில் அவரை ஈடுபடுத்தி, வாகை மாலை அணிவித்தது நாட்டுக்குத் தெரியும்.

திருமதி அம்புஜம்மாளின் வீரம் பெண்மையினின்றும் பிறந்தது. இவ் வீரத்தை ஓம்பியது காந்தியம். காந்தியத்தால் தாம் பெற்ற பேற்றை அம்மையார் இந் நூல் வாயிலாக வெளியிட்டுள்ளார். இதனினும் சிறந்த நன்றி வேறொன்று உண்டுகொல்?

இந் நூல், பெண்மைக்கு ஓர் உறையுள்; வீரத்துக்கு ஒரு வைப்பு; காந்தியத்துக்கு ஓர் ஊற்று. இவ் விழுமிய நூலைத் தமிழ் நாட்டுக்கு உதவிய சகோதரியாருக்கு எனது வாழ்த்து உரியதாக.

தமிழ் நாடு இந் நூலை அன்புடன் ஏற்குமென்று சொல்லவும் வேண்டுமோ?

தமிழ் வாழ்க; காந்தியம் வெல்க.

இராயப்பேட்டை,
26–5–'44

திரு. வி. க.

"தின மணி" வெளியீடு : 4

"போலந்து பின்லந்து"

[ஜெனிவா ஸர்வதேச சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் காரியதரிசிகளில் ஒருவராய்ப் பல ஆண்டுகள் வேலை பார்த்து வந்த தி. எஸ். ராமானுஜம் எம். ஏ. 'பாரத மணி' யில் எழுதிய மதிப்புரை.]

124 பக்கங்கள் அடங்கிய அழகிய தோற்றமுள்ள புத்தகம் இது. வெளிப்பார்வைக்கு ஒத்த உட்சிறப்பும் பெற்றது. இருள் விளக்கும் கைவிளக்கென்றே இதைக் கருதலாம். கனம் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியார் இதற்கு மனக் கனலைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யும் முன்னுரை யொன்றை எழுதி யுள்ளா ரென்பதாலேயே இப்புத்தகத்தின் மதிப்பு புலப்படுகிறது. போலந்து, பின் லந்து, இவ்விரு நாடுகளும் தற்காலச் சண்டை ஆரம்பிக்கு முன் சுயராஜ்யம் பெற்றிருந்தன; மிருக பலம் வாய்ந்த பெரிய ராஜ்யங்களால் ஆக்ரமிக்கப்பட்டன; ஜனநாயகத் துக்குப் பாடுபடுவதாகச் சொல்லும் நேசக் கட்சி யுதவி யால் இவ்விரு தேசங்களும் வெகு சீக்கிரம் இழந்த சுதந் திரத்தை மீண்டும் அடையலாம். ஆனால் ருஷ்யாவின் உத்தரவில் இம்முடிவு தொக்கு நிற்கிறது. இங்கிலாந்தும் அமெரிக்காவும் தலையிட்டு நியாயம் வழங்குவதற்குத் துளிகூடச் சமய சந்தர்ப்பம் அளிக்காமலே ருஷியா மேன் மேலும் பல காரியங்களை நடத்தி வருவதால், இவ்யுத்தம் முடிந்தும் ஜனநாயகக் கொடி ஏற்றப்படுமா என்ற ஐயம் நமக்கு வருவது சகஜமே. இந்தியா விஷயமாய் இங்கி லாந்து இதுவரையும் கையாண்டு வரும் முறைகளும் அச் சந்தேகத்தை அதிகரிக்கும் போலும். நேசக் கட்சியில் சேர்ந்து தோளுக்குத் தோளாக நின்று சண்டை செய்யும் தேசங்களுக்கு, யுத்தம் முடிந்த பிறகாயினும் பூர்ண சுதந்திரம் கிடைக்குமா என்ற கேள்விக்குச் சரியான விடையளிக்க வேண்டுமானல், இப்புத்தகத்திலுள்ள சரித்திர விவரங்கள் மிகவும் இன்றியமையாதன. பல

ராஜ்ய நோக்கங்கள் ஒன்றோடொன்று எவ்விதம் முரண்பட்டு நிற்கின்றன என்று அறிந்த பிறகல்லவோ, யுத்த முடிவில் நியாயம் எவ்வாறு வழங்க வேண்டும், சீர்திருத்த ஏற்பாடுகள் எங்ஙனம் தொகுக்கப்பட வேண்டும் என்ற ஞானம் உண்டாகும். சரித்திர விஷயங்களை விளக்குவதற்கான பல படங்களும் வரையப்பட்டுள்ளன.

ஸ்ரீ. த. கிருஷ்ணமூர்த்தி மயிலாப்பூரில் 'ரனடே புத்தகசாலை'யைப் பல வருஷங்களாய் மேற்பார்வையிட்டு வருகிறார். அவர் முயற்சியால் அயல்நாட்டு விஷயங்கள் மேற்கண்ட புத்தக சாலையில் பூர்ணமாகச் சேகரிக்கப் பட்டுள்ளன.

மேலும், அயல்நாட்டுப் பிரதிநிதிகளுடன் இந் நூலாசிரியர் நேரில் பழகியும் கடித மூலமாய் உறவு கொண்டும் இருப்பதால், அவருடைய அயல்நாட்டு ஞானம் ஏட்டுச் சுரைக்காயாகாது.

எளிய தமிழில் விவரமொன்றையும் விடாது திரட்டிச் சுய அபிப்பிராயத்தைக் கலவாது உள்ளதை உள்ளபடி அமைத்து ஜனநாயகப் பெருமையையும் அதற்காக எடுத்த போராட்டத்தையும் இவர் இவ்வாறு விளக்கிக் காட்டியதற்குத் தமிழுலகம் மிகவும் கடமைப் பட்டதென்பது நமது துணிபு.

அயல்நாட்டுப் பிரச்னைகளில் அக்கரை ஏற்பட நமது நாடும் முன்னேற வேண்டுமென்ற ஆர்வமும், அதை நிறைவேற்றவல்ல ஞானமும் நமக்குப் பிறக்கும். இப்பெரும் ரகசியத்தை நன்குணர்ந்து இந்திய மறுமலர்ச்சிக்குத் திருப்பணி செய்ய முன்வருவதே தற்காலம் நமது அன்னை கொண்டாடக் கூடிய சேவை. "பி. ஸ்ரீ" என்று புகழ் பெற்ற பதிப்பாசிரியரின் உதவி பெற்று மேற்கண்ட சேவையில் ஈடுபட்டிருக்கும் "தின மணி" பத்திரிகாலயம் நீடூழி வாழ்க.

விலை அணு **12**

மகாத்மா காந்தி

நினைவு மாலை

1. முதல் சந்திப்பு

விசித்திர விருந்து

வெந்த மணிலாக்கொட்டை, தேங்காய் வழுக்கல், ஆப்பிள் ஆரஞ்சு முதலிய பழங்கள், திராட்சை பேரீச்சம் பழம் போன்ற உலர்ந்த பழங்கள், பாதம் பருப்பு முதலிய பருப்பு வகைகள், நீர்மோர், இளநீர், பானகம் — இவை இந்த நாகரிக யுகத்திலே எங்கேயாவது ஒரு தோட்ட விருந்துக்கு ஏற்ற தின்பண்டங்கள் ஆகுமா? ஆனால் அன்று மாலை — என்னவோ — இவைதான் எங்கள் வீட்டிலே தயாரிக்கப்பட்டன. ஜிலேபி, பூந்தி, பேடா, கல்கத்தா சந்தேஷ், காப்பி, டீ, ஐஸ்க்ரீம் — இவைகளை நம்பி வந்த விருந்தினர்கள், மேஜைமீது வெள்ளிக் கோப்பைகளிலும் தட்டுகளிலும் மேலே சொன்ன பொருள்களே நிரம்பி யிருந்ததைக் கண்டு மலைத்துப் போயிருப்பார்கள்.

இன்று மகாத்மா காந்தியின் ஆகார நியமத்தை அறியாதவர் இல்லை. இவர் உண்ணும் உணவு வகைகளைத் 'தூய உணவு' என்றுகூட மதிக்கிறார்கள். இவரை உணவு-முறையில் பின்பற்ற முயல்கிறவர்களும் உண்டு. ஆனால், அன்று — 1915 ஏப்ரல் 20-ந் தேதி — எல்லோருக்கும் அது ஒரு விசித்திரக் காட்சியாகத்தான் இருந்தது.

முக்கிய விருந்தாளியான காந்தியும் ஒரு விசித்திர புருஷராகவே பலருக்கும் தென்பட்டார். குஜராத்தித் தலைப்பாகையும் வெள்ளைக் குர்த்தாவும் வேஷ்டியும்

1—1

அணிந்து ஓர் ஏழையான, படித்த, வடநாட்டுக் குடியானவன்போல் காணப்பட்டார். இவரைப் பார்த்ததும் "விருந்தினருக்கு ஏற்ற விருந்துதான்!" என்று சிலர் எண்ணியிருக்கவும் கூடும்.

தென் ஆப்பிரிக்காவும் காந்தியடிகளும்

"காராம்பசுவின் வெண்மையான பால் குணமுள்ளது எனப் பாராட்டி யாவரும் பருகுகின்றனர்" என்று ஓரிடத்தில் துளஸிதாஸர் சொல்லுகிறார். தோல் கறுப்பானாலும், அதன் பால் வெள்ளைப் பசுவின் பால்போல வெண்மையாகத்தானே இருக்கிறது? அதற்குக் குணமும் விசேஷமாக இருந்தால் பாராட்ட வேண்டியதுதானே? ஆனால் தங்களைப்போல் கறுப்பு மனிதர்களுக்கும் ஆத்மா உண்டென்றுகூட வெள்ளையர் நம்பி நடப்பதாகத் தெரியவில்லையே! சில குண விசேஷங்களில் கறுப்பர் தங்களுக்கும் மேலானவர்களாயிருக்கலாம் என்பதை எப்படி ஒப்புக்கொள்வார்கள்? நாய் பூனைகளில் கறுப்பு வெளுப்பு என்ற நிறபேதத்தை வைத்து அவர்கள் உயர்வு தாழ்வு கற்பிக்கிறார்களா? எனினும் மிருகங்களிடம் காட்டாத நிறத் துவேஷத்தையும் மனித வர்க்கத்தினிடம் காட்டுகிறார்களே!

சுயநலத்தின் காரணமாக எழுந்த இந்த விபரீத மனப்பான்மையின் விளைவாகத் தென் ஆப்பிரிக்காவில் நம்மவர் படும் துயரங்களும் அவமானங்களும் கொஞ்சநஞ்சமல்ல. இன்றுங்கூட — ஆம், மகத்தான லட்சியங்களுக்காகப் போராடுவதாய்ப் பறையடித்துக் கொண்டிருக்கும் இந்த மகாயுத்த காலத்திலும்கூட—நிலைமை இவ்வளவு மோசமாயிருந்தால், பல ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்திருக்க வேண்டும்? அந்தப் படுமோசமான நிலைமையை நாம் உள்ளபடி உணரும்படியும், அது ஓரளவு மாறும்படியும் செய்தவர் மகாத்மா காந்திதான்.

1893-ம் வருஷம் மே மாதம் இறுதியில் முதல் முதல் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவுக்குப் போனார். நேட்டாலில் ஒரு இந்திய வியாபாரியின் ஸ்தாபனத்திற்குத்

தொழில் முறையில் ஆலோசனை சொல்லும் பாரிஸ்டராகப் போனார். பாரிஸ்டரானாலும் 'கூலி பாரிஸ்டர்' என்றே கருதப்பட்டாராம், — இந்தியர்களை யெல்லாம் கூலிகள் என்று கருதிய வெள்ளையர்களால். நிறத் திமிர்கொண்ட அந்த வர்க்கத்தினரிடமிருந்து, 'கூலி பாரிஸ்டரு'க்குத் தகுந்த 'கூலிகளும்' கிடைத்தன!

டர்பன் போகும் மார்க்கத்திலே நடுவிலுள்ள ஒரு ஸ்டேஷனில், இவர் பலவந்தமாக ஓர் இரவில் ரயில் வண்டியிலிருந்து இறக்கப்பட்டார், — முதல் வகுப்பிலே பிரயாணம் செய்யக் கறுப்பருக்கு உரிமையில்லை என்ற காரணத்தால். மற்றோரிடத்திலே கோச்சு வண்டியில் வெள்ளையருக்குச் சரி சமானமாக உட்கார்ந்தாரென்று ஒரு கொழுத்த டச்சுப் பிரயாணி இவருக்கு ஒரு பலத்த 'பூசை' கொடுத்தானும். ஜொஹானெஸ்பர்க்கில் க்ராண்டு நாஷனல் ஹோட்டலில் இவர் தங்குவதற்கும் இடம் கிடையாது என்று துரத்திவிட்டார்கள். ப்ரிடோரியாவிலே 'பேவ்மெண்டில்' (நடைப் பாதையில்) வெள்ளையர்கள் தான் நடமாடலாம்: காந்தியடிகள் அந்தப் பாதை வழியாக நடந்து போனாரென்று இவரை ஒரு காவற்காரன் உதைத்துவிட்டான்.

இப்படியெல்லாம் தென் ஆப்பிரிக்கா போய்ச்சேர்ந்த சில தினங்களுக்குள்ளேயே, காந்திஜி கறுப்பர்கள் அங்கே அனுபவித்த துன்ப வகைகளைச் சொந்த அனுபவமாகவே தெரிந்துகொண்டு விட்டார்.

பாரிஸ்டர் காந்தி, தொழில் புரிவதைவிட்டு இந்தியர்களின் உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கினாரென்பதும், காந்தி தம்பதிகள் சிறைவாசம் செய்ய நேர்ந்ததென்பதும் சரித்திரப் பிரசித்தமான செய்தி. அந்தப் போராட்டத்தில் அங்கேயிருந்த தமிழர்கள் இவருக்கு அருந்துணையாக இருந்தார்கள். அந்தத் தமிழர்கள் வீரம் வாய்ந்தவர்களென்று இவரே பாராட்டி யிருக்கிறார். பழைய தமிழர்களைப்போல் அவர்களை வீர புருஷர்களாகவும் வீரப் பெண்களாகவும் ஆக்கிய பெருமை மகாத்மாவைச் சேர்ந்ததுதான்.

கதவின் இடுக்கு வழியே

எனவே, காந்தியடிகள் தாய்நாட்டுக்குத் திரும்பியதும் தமிழர்கள் இவருக்குக் குதூகலமான வரவேற்பு அளித்ததில் அதிசயம் இல்லை. காந்தி தம்பதிகளின் வரவேற்புக்காகவே எங்கள் வீட்டிலும் அன்று அந்தத் தோட்ட விருந்து.


நானும் என் தாயாரும் பின்புற ஹாலில் இருந்தோம். கதவின் இடுக்கு வழியே நான் காந்தியைப் பார்க்க முயன்றேன். அதிலும் சங்கோசம். குரல் மட்டும் கேட்டது காதுக்கு; தரிசனம் கிட்டவில்லை.

அன்னையின் தோற்றம்

தூய வெள்ளைப் பாவாடையும் தாவணியும் அணிந்திருந்த ஓர் உருவம் எங்களை நாடி உள்ளே வந்தது. சிறிய மெலிந்த உருவம். உலக அனுபவத்திலே கனிந்த முகம்; தாயன்பு சொட்டும் களையான முகம். ஏக்கம் தேங்கிய கண்கள்; உள்ளன்பு ஒளி வீசிய கண்கள். நீண்ட கைவைத்த வெள்ளை அங்கி ஒன்றைப் போட்டுக்கொண்டிருந்தார். கைகளில் ஒரு ஜதை இரும்புக் காப்பு: வேறு அலங்காரமோ, ஆபரணமோ கிடையாது. ஏழைக் குடியானவருடைய நாகரிக மனைவிபோலவே காணப்பட்டார். அவரே கஸ்தூரிபா காந்தி.


அந்த எளிய தோற்றத்தின் உயர்வு அப்பொழுது எனக்கு விளங்கவில்லை. அந்தஸ்து, அலங்காரம், படிப்பு இவைகளைப் பற்றிய பெருமிதம் குமுறிக்கொண்டிருக்கும் உள்ளத்திலே அதற்கெல்லாம் இடம் ஏது?

ஸ்ரீமதி காந்தி என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். நான் சிறுமி: வயது சுமார் பதினைந்து. எனினும் என் உடல் பூராவும் சுமந்திருந்த அத்தனை வைர நகைகளையும் பார்த்து, அவர் இரக்கம் கொண்டே சிறு நகை செய்ததுபோலப் பட்டது எனக்கு. உடனே அவற்றைக் கழற்றி வீசி எறிய வேணுமென்ற ஓர் ஆத்திரம்,—அந்தப் படாடோபமே அவலட்சணம் என்ற ஓர் உணர்ச்சி,—என்



மகாத்மா தங்கிய பழைய அம்ஜத்பாக்

(பக்கம் 12)



சென்ட்ரல் ஸ்டேஷன் முதல் வி. பி.ஹால்வரை—ஒரே ஜனத்திரள் (பக்கம் 13)

மனத்தில் ஒரு கணம் தோன்றி மறைய, பழையபடி பெரு மிதத்துடன் உட்கார்ந்திருந்தேன். அவரோ என் தாயா ரோடு அன்புடன் சகஜமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்.

மறுநாள் மாலை (ஏப்ரல் 21-ந் தேதி) ஸ்ரீமதி காந்தி மட்டும் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவரை என் தாயார் தம்முடன் மயிலாப்பூரிலிருந்த 'லேடீஸ் ரிக்ரியேஷன் க்ளப்'புக்கு அழைத்துச் சென்றார். சென்று, அங்கே அவரை வரவேற்கக் காத்திருந்த சீமாட்டிகள் பலருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். நானும் பொம்மைபோலச் சிங்காரித்துக்கொண்டு கூடப் போயிருந்தேன்.

காந்தி தம்பதிகள்

அதே மாலை விக்டோரியா பப்ளிக் ஹாலில் (வி. பி. ஹாலில்) தமிழ் நாட்டின் தேசபக்த வீரஸிம்மமாகிய ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரின் தலைமையிலே ஒரு கூட்டத்தில் காந்திஜி பேசினார். ஸ்ரீமதி காந்தியை அக் கூட்டத்திற்கு அழைத்துப் போவது எங்கள் கடமை ஆயிற்று. நாங்கள் மூவரும் காரில் ஏறிக்கொண்டு கூட் டத்திற்குப் போனோம். அந்த நாளிலும் காந்தி யென்றால் கூட்டம்தான். ஸென்ட்ரல் ஸ்டேஷன் முதல் வி. பி. ஹால் வரை எள்ளுப்போட்டால் எள்ளு விழாது. எங்கும் ஒரே ஜனத்திரள் — கொந்தளிக்கும் சமுத்திரம் போலே. கார் விடுவது கஷ்டமாகிவிட்டது. நாங்கள் இம்மாதிரிக் கூட்டங்களை முன்பின் பார்த்ததில்லை. பயந்தே போனோம். காரை விட்டு இறங்கக் கால் எழவில்லை. அந்த ஜன சமுத்திரத்திலே எப்படி நடந்து போவது?

ஒரு வாலிபர் கஸ்தூரிபாவை உள்ளே அழைத்துப் போவதாகச் சொன்னார். உடனே கஸ்தூரிபாவும் காரை விட்டு இறங்கிச் சற்றும் தயங்காமல் அவர் பின்னே சென்று, பெருங் கூட்டத்தினிடையே மறைந்துவிட்டார். முன் பின் தெரியாத அந்த வாலிபருக்குப் பின்னே ஸ்ரீமதி காந்தியைப் போகவிட்டு வீடு திரும்பிவிட்டோம். எங்கள் பயங்காளித்தனத்தை அப்போது உணர்ந்தோமில்லை. ஆனால் "அந்தச் சிறிய மெலிந்த உருவத்தை அந்தப்

788

பெரிய கூட்டம் என்ன செய்துவிடுமோ ?" என்ற நடுக்கம் மட்டும் உள்ளுக்குள்ளே என்னை வாட்டிற்று.

"என்ன மனுஷ்யன் இந்தக் காந்தி! தன் மனைவியை இப் பெருங் கூட்டத்திலே ஒண்டியாக வரும்படி விட்டுப் போய்விட்டாரே! இவருக்குத்தான் என்ன வன் னெஞ்சமோ?" என்று மனத்திற்குள் காந்திமஹான் மீது கோபம் மூண்டது.

"இந்தியப் பெண்களும் அச்சமின்றி வெளியே போகக்கூடும்; தம்மைக் காத்துக்கொள்ளக் கூடும்; தேசத்திற்காகப் பல துறைகளிலும் பணி செய்யவும், சிறை செல்லவும் கூடும்" என்ற படிப்பினையை என்னைப் போன்றவர்களுக்கும் புகட்ட, அத்தகைய பயிற்சியைத் தம் மனைவிக்கு மகாத்மா அளித்துவந்தார்—என்பது நான் பின்னுடி அறிந்துகொண்ட விஷயம்.

1930-ம் ஆண்டு சென்னையில் 'ஸ்திரீகள் சுதேசிச் சங்கம்' என்ற ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி அதைச் சார்ந்த தேச ஸேவிகைகளாகி, சுதேசிப் பிரசாரம், அன்னியத் துணிக் கடை மறியல் முதலியன செய்துவந்தோம். அக்காலத்தில் எத்தனையோ பெருங் கூட்டங்களினிடையே செல்லவும், போலீஸார் முன்னிலையிலும் துணிந்து ஊர்வலங்கள் நடத்தவும் தைரியம் உண்டாகிவிட்டது, எனக்கும் என்னைப்போல் வீட்டைவிட்டு வெளியே வராமலிருந்த பல சகோதரிகளுக்கும்! அப்படி ஒரு காலமும் வந்து, நாங்களும் தைரியசாலிகளாகக் காட்சி அளித்ததற்கு ஒரு முக்கிய காரணம், அன்று அந்தப் பெருங் கூட்டத்தி னிடையே அன்னை கஸ்தூரிபா தைரியமாகச் சென்ற தோற்றம் தானே ?

ஒரு சமயம் பேஸின்ப்ரிட்ஜ் ஸ்டேஷனுக்குச் சென்று மகாத்மாவை வரவேற்றோம். கூட்டம் அசாத்தியமாகி விட்டது. எப்படியோ வாலண்டியர்கள் சூழ்ந்து கை கோத்துக்கொண்டு மகாத்மாவை மட்டும் பத்திரமாகக் காருக்கு அழைத்துக்கொண்டு போய் விட்டார்கள். கஸ்தூரிபா பின் தங்கிவிட்டார். கூட்டத்தில் அகப்

பட்டுக்கொண்டு மிகவும் சிரமப்பட்டார். நல்ல வேளை : நாங்கள் அவரைத் தேடிப்பிடித்துச் சென்று, சூழ்ந்து கொண்டோம். அவரைக் காருக்குக் கொண்டுவந்து சேர்க்க அரை மணிக்கு மேலாகிவிட்டது. அன்று எனக்கும் என்னுடன் இருந்த சகோதரிகளுக்கும் உண்டான பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் கங்குகரை உண்டோ ?

2. சென்ற மகாயுத்தத்திற்குப் பின்

சென்ற மகாயுத்தத்தில் (1914–1918) காந்திஜி அரசாங்கத்தாரோடு ஒத்துழைத்தார். அஹிம்ஸா தர்ம வாதியாக இருந்தும், போருக்குக்கூட ஆளும் பணமும் சேர்த்து உதவினார். அதன் பலனாக இந்தியாவுக்கு விரைவில் சுய ஆட்சி சித்திக்கும் என்று எதிர் பார்த்தார். ஆனால் அதற்கு மாறாக அரசாங்கத்தார், 1917-ம் ஆண்டின் இறுதியில் 'ரௌலட் கமிட்டி' என்ற ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார்கள். சதிகாரர்களை அடக்க வேண்டும் என்ற வியாஜத்தால் 'ரௌலட் சட்டம்' பிறந்தது. 1919-ல் 'புரட்சிக்காரர்கள்' என்று வாலிபர்கள் பலர் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டார்கள்.

அராஜக இயக்கத்தைச் சமாளிப்பதற்குக் கொண்டு வந்த 'ரௌலட் சட்டம்' நிரபராதிகளான தேசபக்தர்களையும் பாதிக்கும்படி யிருந்ததால், அந்தக் கொடிய அடக்குமுறைச் சட்டத்தை ஸாத்விக முறையில் ஒழிக்க வேண்டுமென்று காந்திஜி முயற்சி செய்தார்.

1919-ஏப்பரல் 13-ல் பஞ்சாபிலே 'ஜாலியன்வாலா பாக் படுகொலை' என்ற பயங்கரமான சம்பவம் நிகழ்ந்தது. அதன் விளைவாக, காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தைத் தோற்றுவித்தார். அப்பால் சிறைவாஸம் முதலிய பல துன்பங்களுக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் ஆளானார்கள். இத்தகைய சம்பவங்களை ஒட்டி எத்தனை மாறுதல்கள் பலர் வாழ்க்கையிலும், பலர் வீடுகளிலும் !

பட்டம் பதவிகள் துறக்கப்பட்டன. எங்கும் காந்தி குல்லா, கதர் மயம், அன்னிய ஆடைகளின் தகனம் இவையெல்லாம் எங்கள் வீட்டிலும் நடைபெற்றன. இந்த விஷயத்தில் என் தகப்பனுரை நல்ல அதிர்ஷ்டசாலி என்றே சொல்லவேண்டும். என்னுடைய தாயாரின் சம்மதம் அவருக்கு உடனே கிடைத்துவிட்டது. நாங்கள் எல்லோருமே அவருடன் ஒத்துழைக்கலானேம்.

வீட்டிலிருந்த வைர நகைகள் இரும்புப் பெட்டியில் புதைந்துபோயின. வெளியே உலாவியவை முத்து, தங்க நகைகளே. எங்கள் ட்ராயிங் ரூம் சுவரை மகாத்மாவின் பெரிய உருவப் படம் ஒன்று அலங்கரித்தது.

குட்டைக் கால்களும், வளைந்து உயர்ந்த மூக்கும், நீண்டு நிற்கும் அகன்ற காதுகளும் சாதாரணமாக ஒருவரை ஸௌந்தர்ய புருஷராகக் காட்டக்கூடியவைகளா? 'அலி' சகோதரர்கள்போல் பெயருக்கும் புகழுக்கும் ஏற்ற ஆறடி உயரமுள்ள ஆஜானுபாகு இல்லையே மகாத்மா? ஆத்மாவினல் பெரியவரே யன்றி, ஆகிருதியில் சிறியவர்தானே! எனினும், தினம் ஒருமுறை கைகுவித்து வணங்கும்படிச் செய்துவிட்டது இவருடைய உருவப் படம். உடல் முழுதும் வெள்ளைக் கதர் போர்த்துக் கையில் கீதையுடன் நின்றிருந்த அந்தத் தூய தோற்றம் — அந்த முகத்திலே திகழ்ந்த புன்சிரிப்பு—ஆஹா, இவைகளுக்குத் தான் எவ்வளவு ஆகர்ஷண சக்தி!

3. வைக்கம் சென்றபோது

1925-ஆம் மார்ச்சு-ஏப்ரலில் திருவாங்கூர் ராஜ்யத்திலே வைக்கம் என்ற ஸ்தலம் திடீரென்று அகில இந்தியப் பிரசித்தி பெற்றுவிட்டது. அங்கே மகாதேவர் கோவிலைச் சுற்றியுள்ள ரஸ்தாவில் ஹரிஜனங்கள் (அதாவது, ஸவர்ணர்கள் அல்லாத இந்துக்கள்) நடமாடக் கூடாதென்று தடுக்கப்பட்டிருந்தார்கள். ஆனல் அந்த ரஸ்தாக்களைக் கிறிஸ்தவர்களும் முஸல்மான்களும்கூட

உபயோகித்து வந்தார்கள். இந்த நிலையில் 'தீண்டத் தகாதவர்கள்' என்று ஒதுக்கப்பட்டிருந்தவர்களும் அத்தகைய ரஸ்தாக்களில் செல்லவேண்டும் என்பதற்காக, 'வைக்கம் ஸத்யாக்ரஹம்' நடைபெற்றது.

மகாத்மா வைக்கம் போகச் சென்னை வந்து எங்கள் வீட்டிலே தங்கினார். முதல் தடவை வாசலிலே நிறுத்தி உபசரித்து அனுப்பிவிட்ட மஹானை உட்புற ஹாலுக்கு அழைத்துக் கதர்த் திண்டு மெத்தையில் வீற்றிருக்கச் செய்து பூஜித்து விருந்தோம்பிக் களித்தோம்.

அன்று வந்த காந்தி வேறு; இன்று வந்த காந்தி வேறு. தென் ஆப்பிரிக்க இயக்கத்தின் பயனாகத் தேச மக்கள் கண்முன் இவர் அப்பொழுது ஒரு சிறந்த சமூக ஊழியராக மட்டும் விளங்கினார். பிறகு தாய்நாட்டுச் சேவை இவரை ஒரு லட்சிய புருஷராக்கிவிட்டது. பாரத தேவிக்குத்தான் இப்போது எத்தனை வீரப் புதல்வர்கள்! இவர்கள் எல்லாம் மகாத்மா கண்டெடுக்கும்வரை எங்கே மறைந்திருந்தார்கள்?

இந்திய தேசத்தை ஒரு பூந்தோட்டமாக்கி அதிலே தேசபக்தி, சமூகப்பற்று ஆகிய பூஞ்செடிகளைப் பயிர் செய்ய, அவற்றிலே பூத்த பூக்கள், கனிந்த கனிகள் என லாம் அந்தத் தொண்டர் குழாத்தை. மகாத்மா காந்திதான் அந்தத் தோட்டக்காரர்,—அந்தப் பூந்தோட்டத்தின் தலைவர். இவருடைய பூங்குடலை 'எங் இந்தியா.'

இது மட்டுமா? நம் நாட்டிலே விளையாத அன்னிய நாட்டுப் புஷ்பங்களையுமல்லவா இங்கே பூக்கும்படி செய்துவிட்டார் மகாத்மா? மீராபென் போன்ற சகோதர சகோதரிகளை அறியாதார் யார்?

தேசியப் போரை நடத்தும் தீர தளபதியாகி வந்த மகாத்மாவைத் தரிசிக்க நம் நாட்டு மக்கள் லட்சக்கணக்கிலே ஒருவரை ஒருவர் நெட்டித் தள்ளிக் கொண்டு வந்தார்கள் என்றால், அதில் என்ன ஆச்சரியம்! இவருடைய முகத்திலே அப்படி ஓர் அபூர்வ தேஜஸ்

திகழ்ந்தது! அந்தக் கூர்மையான கண்கள் கருணை - ஊற்றுக்களாக மிளிர்ந்தன.


எங்கள் வீட்டிலும் இவரைத் தரிசிக்கத் திரள் திரளாக ஜனங்கள் வந்து குவிந்த வண்ணமாயிருந்தனர். தேர்த் திருநாள் பட்ட பாடுதான். வந்தவர்களில் பிரமுகர்களும் பலர் இருந்தனர்.

செல்வர், பிரபலஸ்தர் பலர் காத்துக்கிடக்க, எவ்வளவு அன்புடனும் ஆர்வத்துடனும் உரையாடினார் மகாத்மா, ஒவ்வொரு எளிய தேசத் தொண்டரோடும்!


இவருடைய பேச்சுத் திறன், ஆழ்ந்த கருத்தமைந்த கேள்விகள், ஹாஸ்யம் நிறைந்த — ஏன்? குறும்புத்தனமான—வாக்கியங்கள், அந்தக் கனிந்த-மிளிர்ந்த-பார்வை, இடையிடையே ஹிருதயத்திலிருந்து பொங்கி வெளிப்பட்ட களிநகை, இவை யாவும் ஏழை பணக்காரர் என்ற நினைப்பின்றி, அறிஞர் அறிவீனர் என்ற பாகுபாடின்றி, சொந்த நாட்டார் பிறநாட்டார் என்ற பேத புத்தியின்றி, எல்லோரையும் அப்படியே வசிகரித்துவிட்டன.

அச்சமயம் சென்னை நகரசபைத் தலைவராக இருந்தவர் கான்பஹதூர் ஊஸ்மான் ஸாஹிப். அவர் தலைமையில் நகர சபையார் மகாத்மாவுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். அந்தக் கார்பொரேஷன் கூட்டத்திற்கு நானும் போயிருந்தேன். அந்த உபசாரப் பத்திரத்திற்குப் பதிலளிக்கையில் மகாத்மா யாதொரு ஆவேசமும் இல்லாமல் மிகவும் அமைதியாக, நிதானமாக, தாழ்ந்த குரலில், ஒவ்வொரு வார்த்தையும் தெளிவுபடப் பேசினார். அந்த வார்த்தைகள் ஹிருதயத்தின் ஆழத்திலிருந்து எழுந்தன என்று தோன்றியது.

பிறகு திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு மாபெருங் கூட்டத்திலே காந்தியடிகள் பேசினார். வீட்டிலே வந்த விருந்தினர்களை உபசரிக்கும் மும்முரத்திலே நான் இந்தப் பிரசங்க விருந்தை இழந்துவிட்டேன்!




திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு மாபெருங் கூட்டத்திலே காந்தியடிகள் பேசினர் (பக்கம் 18)




கடற்கரைப் பிரசங்க மேடையில் ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸையங்காருடன் காந்தியடிகள் வீற்றிருப்பது

(பக்கம் 18)



சென்னை நகரசபைத் தலைவராக இருந்த கான்பகதூர் (இப்போது ஸர்) மகமது ஊஸ்மான் ஸாஹிப் மகாத்மாவை வரவேற்கிறார்

(பக்கம் 18)



தமக்குக் கிடைத்த வரவேற்புப் பத்திரத்தையும்
ஏலம் போடுகிறார் தேனாம்பேட்டையில் (பக்கம் 20)

வளையலைக் கொடுப்பாயா?

எங்கள் வீட்டிலே ஒரு பக்தர் தம் சிறு பெண்ணுடன் வந்திருந்தார், மகாத்மாவைப் பார்க்க. காந்திஜி அக் குழந்தையைப் பிரியத்துடன் தம் மடிமீது இருத்திக் கொண்டார். குழந்தைக்கு வயது ஆறு இருக்கும். கையில் இரண்டு ஜதைத் தங்க வளையல்கள் மட்டும் பூட்டியிருந்தன. மெள்ள அதன் கைபிடித்து அழகு பார்ப்பதுபோலப் பார்த்தார்.

"எனக்கு ஒண்ணு வேணும்: கொடுப்பாயா?" என்று மெள்ள கேட்டார், குழந்தையைப் பார்த்துப் புன் முறுவல் பூத்தவராய். "ஓ" என்று வந்தது தங்கு தடையின்றிப் பதில், அக்குழந்தை வாயிலிருந்து. "உன் வளையல்களைக் கழற்றிக் கொடுப்பாயா எனக்கு?" என்றார் மீண்டும், பிச்சை யெடுப்பதிலே பலே பேர்வழியான இவர். குழந்தை சற்றுத் தயங்கிற்று; திரும்பத் திரும்பத் தகப்பனாரைப் பார்த்தது.

தகப்பனார் திகைத்துப்போனார். "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே!" என்று சுற்றியிருந்தோர் சிலர் அவரை நோக்கிக் குறுநகை புரிந்தனர். எனினும் அவர் சட்டென்று சமாளித்துக்கொண்டு, "பாப்பா! காந்தித் தாத்தாவுக்கு உன் வளையல்களைக் கொடம்மா!" என்று சொல்லிவிட்டார்.

உடனே குழந்தையின் கையைப் பிடித்து வளையல் களைக் கழற்ற முயன்றார் இந்தத் தாத்தா. வெகுநேரம் முயன்றும் முடியவில்லை. அவைகளைக் கழற்றும் அந்த முயற்சியில் குழந்தையின் கைதான் வலிக்குமென்று தோன்றியது. ஆனாலும் அந்தக் குழந்தையின் முகம் சற்றும் சுணங்கவில்லை. கைக்கெட்டியது வாய்க்கு எட்ட வில்லையா? ஆனால் இவரா விடுகிறவர்? "கொண்டு வாருங்கள் கத்தரிக்கோலை!" என்றார்.

இந்தக் காட்சி சுமார் அரைமணி நேரமாக நடந்தது. தூரத்தில் சில பெண்களுடன் நானும் இந்தக் காட்சி யைப் பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு அந்தக்

குழந்தையின் மீதே இரக்கம் உண்டாயிற்று. மகாத்மா மீது சற்றுக் கோபந்தான். நகைப் பைத்தியம் அன்றும் என்னை விட்டு நீங்கினபாடில்லை.

என் கழுத்தில் எனக்கு மிகவும் பிரியமான ஒரு முத்தாரம் இருந்தது. (வைர நகைகள்தான் அணியக் கூடாதே!) விரைவில் உள்ளே சென்றேன். அதையும் கழற்றிப் பெட்டியில் பத்திரமாய் வைத்துப் பூட்டிவிட்டு வெளிவந்தேன். மகாத்மாவின் கண்ணில் அது பட்டு, அதையும் கேட்டுவிட்டாரானால்?

நம் தேசத்துப் பெண்களுக்கு நகைப் பைத்தியம் கொஞ்சமா? அதை ஓரளவு குறையும்படி செய்தவர் மகாத்மா ஒருவர்தான். பெண்கள் மனத்திலிருந்து அந்தப் பைத்தியம் ஒருவாறு நீங்கவும், பொது நிதிகளுக்கு அவர்கள் உதவவும், மகாத்மா கையாண்டு வந்த வைத்திய முறையை அப்போது நான் கொண்டாடா விட்டாலும் இப்பொழுது மனப்பூர்வமாய்க் கொண்டாடத்தான் செய்கிறேன்.

புடவைகளை ஏலம் போடுதல்

தமக்குக் கிடைத்த நகைகளை மகாத்மா ஏலம் கூறும் விதமே ஓர் அற்புதக் காட்சியாக இருக்கும். இவரை அந்தத் தொழிலில் வெல்ல எவராலும் — எந்த மார்வாடியாலும் — இயலாது.

என் தாயாருக்குப் பலவீனமான சரீரம். எப்பொழுதும் நோயுற்று வருந்துவார். அவரால் முரட்டுக் கதர் கட்டிக் கொள்ள முடியவில்லை. இச்செய்தி மகாத்மாவுக்குத் தெரிந்தது. உடனே இரண்டு பெட்டிகள் நிறையக் கதர் பம்பாயிலிருந்து தருவித்தார். அதை வியாபாரம் செய்ய பநச்சா என்ற பார்ஸி சகோதரரையும் வரவழைத்தார்.

மெல்லிய ரகத்தில் நேர்த்தியாகப் பூவேலை செய்த கதர்ப் புடவைகள் பல, அப்பெட்டியில் இருந்தன. ரூபாய் முப்பதிலிருந்து அறுபத்தைந்து, எழுபது வரை விலையுள்ள சேலைகள். அவைகளில் நாலைந்தை என் தாயா

ரிடம் தந்தார் மகாத்மா. மற்றவைகளை விற்றுக் கொடுக்கும்படி *ஸ்ரீமதி ஜானம்மாளுக்கும் எனக்கும் கட்டளை.

இவர் கட்டளையையும் மீற முடியுமோ? அத்தனையும் விற்றுக் கொடுத்தார் ஜானம்மாள். பருச்சாவை ஒரு மாதம் எங்கள் வீட்டிலேயே தங்கிச் சென்னையைக் கதர் மயமாக்கி விட்டுத் திரும்பும்படி ஏவிச் சென்றார். மகாத்மா மகாத்மாவாக மட்டுமில்லை; பேர்போன வியாபாரியாகவும் விளங்கினர். அன்று!

"இந்திய மாதா"

"இந்திய மாதா" என்று சொன்னதும் தேசபக்தர்களுக்கு எவ்வளவு பக்தியுணர்ச்சி உண்டாகிறது! இத்தகைய அருமைப் பெயருடன் ஒரு புஸ்தகம் எழுதப்பட்டால், அது சாதாரணமாய் ஒரு தேபக்த நூலாக இருக்கக்கூடுமல்லவா? எனினும் "இந்திய மாதா" (Mother India) என்ற பரிசுத்தமான பெயருடன் தேசத் துரோகிகள் போற்றக்கூடிய ஒரு புஸ்தகம் எழுதப்பட்டதென்றால், அது எவ்வளவு அதிசயமான சம்பவம்!

அப்பேர்ப்பட்ட ஒரு புஸ்தகம் மிஸ் காதெரைன் மேயோ என்ற ஒரு அமெரிக்க ஸ்திரீயினுல் எழுதப்பட்டது. இந்தியர்களுடைய குற்றங் குறைகளையெல்லாம், நாடெங்கும் பரபரப்பாக ஓடித்திரிந்து தேடித் துருவி எடுத்து, துவேஷ மனப்பான்மையுடன் தொகுத்துக் காட்டிய புஸ்தகம் அது.

அந்தப் புஸ்தகத்தினுல் இந்தியர்களுக்கு ஏற்பட்ட இதயப் புண் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. "இந்தியர்கள் சுயராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்கள்" என்று பிரசாரம் செய்வதற்காக எழுதப்பட்ட அந்தப் புஸ்தகத்திற்கு எத்தனையோ மறுப்புக்களும் கண்டனங்களும் தோன்றின!

---

*ஸ்ரீமதி ஜானம்மாள் ஸர். வி. பாஷ்யம் ஐயங்காரின் கடைசிப் புதல்வி; தேச ஸேவை செய்து என்னுடன் சிறை சென்றவர்.

மகாத்மாவோ ஒரே சொற்றொடரில் எவ்வளவு பொருத்தமாக விமர்சனம் செய்துவிட்டார்! "சாக்கடை இன்ஸ்பெக்டரின் யாதாஸ்து" என்ற அந்தத் தொடர் இன்னும் நம்மவர் ஞாபகத்தில் இருக்கத்தான் செய்கிறது!

மகாத்மா அந்தப் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார்,—"யங் இந்தியா"வில் தமது அபிப்பிராயத்தை வெளியிடுவதற்காக. "மிஸ். மேயோவின் புஸ்தகம் எப்படி யிருக்கிறது?" என்று ஏதோ துணிச்சலாய்ப் பேச்சுவாக்கில் கேட்டுவிட்டேன்.

என்னை நோக்கி, "நீ இதைப் படித்திருக்கிறாயா?" என்று கேட்டார். "இல்லை" என்றேன். "இந்த ராத்திரிக்குள் இதை முழுதும் படித்து முடித்த பிறகு என்னிடம் வா" என்றார். அப்படியே செய்துவிட்டு இவர் முன்னே போய் நின்றேன்.

"உன் அபிப்பிராயம் என்ன? இந்திய ஸ்திரீகளைக் குறித்து மிஸ். மேயோ எழுதியிருப்பதைப் பற்றி நீ என்ன சொல்லுகிறாய்?" என்று என்னையே மடக்கிக் கேட்டார். என்ன செய்வது? இவரோ என் பதிலை எதிர்பார்த்திருந்தார்.

"பெரும்பாலும் அபத்தக் களஞ்சியம். எனினும் சில உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்தியப் பெண்களில் படித்தவர் சிலரே. அதிலும் தேச ஸேவையிலோ, ஸமூக ஸேவையிலோ ஊக்கம் உள்ளவர் வெகு சொற்பம். குடும்ப வாழ்க்கையில்தானே முற்றும் ஈடுபட்டிருக்கிறார்கள்?" என்றேன் தயங்கிக்கொண்டே.

"அப்படியானால், அந்தக் குறையைத் தீர்ப்பது உன்னைப்போன்ற படித்த பெண்களின் கடமை அல்லவா? உன் சகோதரிகள் அறியாமையில் ஆழ்ந்து கிடப்பதை நீ சும்மா பார்த்துக்கொண்டிருக்கலாமா?" என்றார்.

மேயோவின் புஸ்தகம் ஏற்கெனவே என் மனஸைக் கிளறிவிட்டிருந்தது. சுடச்சுட மகாத்மா வார்த்தையும்

சேரவே, "நாமும் ஸமூக ஸேவை செய்ய வேண்டியது அவசியம்" என்ற எண்ணம் என் உள்ளத்தில் உருக் கொள்ளலாயிற்று.

அந்த மூன்று தினங்கள்

திங்கட்கிழமை மகாத்மாவின் மௌன தினம். மாலைப் பொழுதில் மாடி அறையிலே வீற்றிருந்து மௌனமாக "யங் இந்தியா"வுக்குக் கட்டுரைகள் எழுதிக்கொண் டிருந்தார்.

இவருக்குப் பாட்டுப் பிடிக்கும் என்று அங்கிருந்த சிலர் என்னை வீணை வாசிக்கச் சொன்னார்கள். நானும் சில பாட்டுக்களை வீணையில் வாசித்தேன். வாசித்துக் கொண்டிருக்கும் பொழுதே மகாத்மாவிடமிருந்து ஒரு துண்டுச்சீட்டு வந்தது. ஆச்சரியத்துடன் பிரித்துப் பார்த் தேன். "உன் சங்கீதத்தைக் கேளாமல் நான் வேறு காரியமாக இருக்கிறேன் என்று நீ எண்ணிக் கொண் டிருக்கலாம். ஆனால் காரியத்தோடு காரியமாய் உன் பாட்டையும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்!" என்று இவர் எழுதியிருந்ததைப் படிக்கவும் எனக்கு வெட்கமாய்ப் போய்விட்டது.

அதற்கு ஏற்றாற்போல் மஹாதேவதேசாய் என்னைப் பார்த்து, "நீ பாடிய பாட்டுக்களின் பொருளாவது, கருத் தாவது உனக்கு விளங்குகிறதா?" என்று கேட்டு விட்டார். நான் பாடிக்கொண்டிருந்தவை தியாகராஜர் கிருதிகளும், தீக்ஷிதர் கிருதிகளும். அர்த்தமாவது, விளங்குகிறதாவது எனக்கு, அந்தக் காலத்திலே!

மகாத்மா எங்கள் வீட்டில் தங்கிய அந்த மூன்று நாளும் பொழுது கழிந்த விதம் தெரியவில்லை. "காந்தி என்ன என்ன செய்கிறார்? இவருக்கு என்ன என்ன தேவை? இவரை யார் யார் பார்க்க வருகிறார்? இவர் என்ன பேசுகிறார்? எங்கெங்கே போகிறார்? எப்படிச் சிரிக்கிறார்?"—இவையே எங்கள் பேச்சும் நினைப்பும் காரியமுமாக இருந்தன.

இவர் சென்னையை விட்டுப்போனதும், எங்களுக்கு ஒன்றும் செய்யத் தோன்றாமல் போய்விட்டது; எல்லாம் சூனியமாகத் தோன்றிற்று! வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தோம். இவர் தங்கிய இடம், உபயோகித்த சாமான்கள்—எல்லாம் புனிதமாய்க் காணப்பட்டன. சொல்ல முடியாத இன்பங் கலந்த ஒரு துன்ப உணர்ச்சி—ஒரு மஹானைத் தரிசித்துப் பிரிந்ததின் பயன்—எங்கள் உள்ளத்திலே உண்டாயிற்று. நாங்கள் பழைய நிலைக்கு வரச் சில தினங்கள் சென்றன.

4. அன்னையை அறிந்தது

1927-ஆம் நவம்பரில் இலங்கைக்குப் பயணமாகி மகாத்மா சென்னைக்கு வந்தபோது அன்னை கஸ்தூரிபாவும் கூட விஜயம் செய்திருந்தார். இந்தத் தடவை "கஸ்தூரிபாவுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்ததே!" என்று அடங்கா மகிழ்ச்சி கொண்டேன்.

உணவு தயாரிக்கும் அன்னை

மகாத்மாவின் உணவு தயாரிப்பது முதலிய அலுவல்கள் கஸ்தூரிபாவுக்குச் சதா இருந்து கொண்டிருக்கும். அவருக்கு உதவியாக இருந்து மகாத்மாவுக்கு ஸேவை செய்யும் பாக்கியம் கிடைத்தது ஜானம்மாளுக்கும் எனக்கும்.

உப்பில்லாமல் சமைத்த கீரை, ரொட்டி, நன்றாய்க் காய்ச்சி வடிகட்டின ஆட்டுப்பால், தேன், பழத் தினுசில் ஒன்று—இவைதான் மகாத்மா காந்தியின் தினசரி ஆகாரம்.

கஸ்தூரிபா வெகு ஜாக்கிரதையுடன் சுத்தமாய், சரியான சமயத்திற்கு, இவைகளை யெல்லாம் தயாரித்து வைப்பார். ஆனால் எங்கள் அறியாமையினாலும், காந்தி மீது எங்களுக்கிருந்த அன்பினாலும், சில பிசகுகள்

நேர்ந்துவிடுவதுண்டு. பழவகை ஒன்று அதிகம் வைத்து விட்டாலும் சரி; அல்லது உணவின் அளவு தினசரி உள்ளதற்குச் சற்றுக் கூடவேயிருந்து விட்டாலும் சரி,— மகாத்மாவுக்குக் கொஞ்சமும் பிடிக்காது.

மகாத்மா ஒருவரை உரக்கக் கண்டித்துக் கூறியதை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள்—அவருடன் இருந்து வந்த மகாதேவ்கூட. எனவே, எங்களால் பிசகு நேரும் போது இவர் மனைவியைக் கூர்ந்து பார்த்து. 'இதை எடுத்து விடு' என்று வெகு நிதானமாகத்தான் சொல்லுவார். ஆனால் அந்தச் சொல்லே, அந்தப் பார்வையே, போதும்— 'ஏன் இப்படிச் செய்துவிட்டோம்?' என்றாகிவிடும் எங்களுக்கு. கொஞ்சமும் முகம் கோணாமல் குற்றம் எல்லாம் தாமே சுமந்து அப்படியே மௌனம் சாதிப்பார் கஸ்தூரிபா. அவரைப் பார்த்து எங்கள் உள்ளம் உருகிப்போகும்.

அன்னையின் குணாதிசயம்

கஸ்தூரிபாவுக்குத் தம் பிள்ளை பேரன் பேத்தி முதலானவர்களிடம் அதிகப் பிரேமை. அவர்களுடைய இளமைச் சேஷ்டைகளைப்பற்றி எங்களுடன் சதா பேசிக் கொண்டிருப்பார். எங்களுடைய குடும்ப விஷயங்களைத் தெரிந்து கொள்வதிலும் அவருக்கு ஆர்வம் உண்டு.

பழைய காலத்துப் பெண்களைப்போல் தெய்வ பக்தியும் பதிபக்தியும் பூண்டவர். நம்முடைய சில நல்ல ஆசார அநுஷ்டானங்களை வெகுவாய்ப் போற்றுவார். கோயிலுக்குப் போய் ஸ்வாமி தரிசனம் செய்வதில் அதிகப் பற்றுடையவர். ஆனால் மகாத்மாவுக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை: ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் இல்லாதவரையில், அந்த ஆலயங்களுக்குத் தாமும் போவதில்லையென்றிருந்தார். எனவே, இவரைப் பின் பற்றி அன்னை கஸ்தூரிபாவும் ஆலய தரிசனத்தை விட்டிருந்தார்.

மிகப் பொறுமையுள்ளவர் கஸ்தூரிபா. காரியமே கண்ணாயிருப்பவர். எங்களிடமெல்லாம் அன்புள்ள

அன்னையாகவே ஒழுகினார். எங்களுக்குச் சமையல் முதலிய காரியங்கள் தெரியாமலிருப்பதைப் பார்த்து இரங்கினார். பெண்களுக்கு வீட்டு வேலை தெரிய வேண்டியது அவசியமென்று வற்புறுத்தினார்.

ஆயினும், தாம் இளமையில் கல்வி கற்றுக் கொள்ளாமல் போனதற்காக மிகவும் வருந்தினார். ஒழிந்த வேளைகளில் ஆங்கிலமும் ஹிந்தியும் பேசவும் படிக்கவும் கற்று வருவதாயும், ஆனால் கற்பது ஞாபகத்தில் நிற்பதில்லையென்றும் சொல்லி வருத்தப்பட்டார்.

அன்னையின் பண்பாடு

கஸ்தூரிபாவைப்பற்றித் தெரியவேண்டிய அளவிற்கு நம்மில் பலருக்கும் தெரியாது. மகாத்மாவைப் பற்றி நன்குகத் தெரிந்தவர்களுக்கும், அவருடைய வாழ்க்கைத் துணைவியைக் குறித்து விசேஷமாக ஒன்றும் தெரிந்திருக்க முடியாது. அன்னையின் ஆடம்பரமற்ற வாழ்க்கை இதற்கு ஒரு காரணம்; தற்காலக் கல்விப் பயிற்சியில் இவர் முன்னணியில் நிற்காதது மற்றொரு காரணம்.

ஆனால் அவரது அறிவுப் பயிற்சியிலே ஏதாவது குறைவிருந்தால் அதைத் தம்முடைய குணாதிசயத்தைக் கொண்டு நிறை செய்து கொண்டார். தம்முடைய ஹிருதயப் பண்பாட்டைக் கொண்டு கல்வியறிவில்லாக் குறையைப் பூர்த்திசெய்து கொண்டார். பண்பாட்டின் (culture) முக்கிய அம்சமான ஹிருதயப் பண்புதான் கஸ்தூரிபாவிடம் எவ்வளவு செழித்துக் காணப்பட்டது!

அறிவுப் பயிற்சியைக் கலாசாலைகளில் அடையலாம். வீட்டிலேயே புஸ்தகங்கள் மூலமாகவும், உபாத்தியாயர் மூலமாகவும் எத்தனையோ விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம். ஆனால் ஹிருதயப் பண்பை அப்படி அடைய முடியுமா? இதை வாழ்க்கை - அனுபவங்களின் மூலமாகத் தானே அடையமுடியும்? தாம்பத்ய வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் தானே அடையமுடியும்? நம்

முடைய சமூகம் இருக்கிற நிலைமையிலே, இந்நாளில் ஏட்டுப் படிப்பைத்தான் நம்மால் அடையமுடிகிறது.

ஆனால் கஸ்தூரிபா காந்தி அடைந்திருந்த அந்த ஹிருதயப் பண்பை அடைவது சிரமமான காரியம்தான். தனி வாழ்வு, குடும்ப வாழ்வு, உற்றார் உறவினர்களின் பழக்கங்கள், கோவில், இந்நாளில் சங்கம், க்ளப்— இவற்றால் ஓரளவு ஹிருதயப் பண்பை அடைய முடிகிறது. ஆனாலும் கஸ்தூரிபா காந்தி அடைந்த மாதிரி அந்தப் பரந்த — உயர்ந்த — பண்பை அடைய முடியாது.

வாழ்க்கையிலே குறுக்கிடும் இடையூறுகளைக் கண்டு மனச் சோர்வடையாமல் ஈடுகொடுத்துப் பிறர் மனம் நோகாதபடி கைங்கரிய ரூபமான தூயவாழ்வு வாழ்கிற வர்களுக்கு விசேஷமாய் அனுபவ சித்தமாகக் கிடைக்கக் கூடிய பண்பாடல்லவா அன்னையின் ஹிருதயப் பண்பு?

உலகப் பணி மூலமாகவும், உலகம் போற்றும் ஒரு மஹானின் தர்ம பத்தினி என்ற வாய்ப்பின் மூலமாகவும் கிடைக்கக் கூடிய அருமையான அந்தப் பண்பாடு, சாதாரண ஸ்திரீகள் பெறக்கூடியதாகுமா?

புதிய நாகரிக முறைப்படி படாடோபமாகவும் சாமர்த்தியமாகவும் நடந்துகொள்ளும் வகை அறியாதவராகை யால், அவர் தம்முடைய அருமையான குணங்களையும் ஹிருதயப் பண்பாட்டையும் உலகத்தார் அறியாத வண்ணம் மறைத்துவந்தார்.

உலகிலே மகாத்மா தம்முடைய அபார ஆற்றலால், ஒரு சூரியன்போல் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசித்துவந்தார் என்றால், இவரது வாழ்க்கைத் துணைவி அந்தச் சூரிய னுடைய தீவிர கிரணங்களை உள்வாங்கித் தண்மை யாக்கிப் பிரதிபலிக்கும் சந்திரன்போல் துலங்கினர் என லாம்.

கல்வித் துறையில் சிறந்தோங்கும் பல ஸ்திரீ ரத்தினங்கள் நமது நாட்டிலே இருந்தபோதிலும், பாரத நாட்டைச் சேர்ந்த பெண்மணிகளுக்குள்ளே தலைசிறந்தி

விளங்கியவர், — நக்ஷத்திரக் கூட்டத்திற்கு மத்தியில் சந்திரன்போலத் துலங்கியவர் — கஸ்தூரிபா என்றால், அது மிகையாகுமா ?

சீதை, சாவித்திரி, தமயந்தி போன்ற ஸதி மணிகளின் பரம்பரையிலே வந்த அம்மை ஸௌபாக்யவதி கஸ்தூரிபா காந்தி.

5. தர்ம சங்கடம்

இடையே பல ஆண்டுகள் ; பல மாறுதல்கள். மகாத்மாவுக்கும் தகப்பனாருக்கும் இடையே அபிப்பிராய பேதம் தோன்றிவிட்டது, காங்கிரஸ் திட்டம் குறித்து. இந்த அபிப்பிராய பேதம் நாளடைவில் மகத்தான அபிப்பிராய பேதமாகிவிட்டது.

கல்கத்தாவிலே நடந்த விசேஷக் காங்கிரஸுக்குப் பிறகு என் தந்தையார் காங்கிரஸிலிருந்து விலகிவிட்டார்; தேசிய வாழ்க்கையிலிருந்தே முழுதும் விலகிவிட்டார்.

* * *

1930-ல் தேசம் எங்கும் காந்தியடிகளின் "உப்பு ஸத்தியாக்கிரகம்" பரவிக்கொண்டிருந்தது. என்னால் சும்மா இருக்க முடியவில்லை. ஆனாலும் தகப்பனாரைக் காட்டிலும் புத்திசாலி என்ற எண்ணமோ, தைரியசாலி என்ற எண்ணமோ எனக்கு இல்லை. இந்த நிலை மிகவும் தர்ம சங்கடமாக இருந்தது.

தகப்பனாரின் அபிப்பிராயத்தை மாற்ற முயன்றேன். எவ்வளவோ விவகாரித்துப் பார்த்தும் அவரை அசைக்க முடியவில்லை. விவகாரத்திற்குப் பதில் - விவகாரங்கள் தங்கு தடையின்றி வந்துகொண்டிருந்தன.

இந்த இயக்கத்தில் நான் சேர அவரது அனுமதியையாவது பெற முயன்றேன். அந்த முயற்சியும் வீணாயிற்று. அவருடைய ஆணித்தரமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் விழித்தேன்.

முடிவில், ஸ்ரீமதி காந்தி அன்னியத் துணிக் கடைகளில் மறியல் செய்து சிறை சென்றதைக் கேள்விப்பட்டு, நானும் தகப்பனாரின் சம்மதம் பெறாமலே அந்த இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறைசெல்லத் துணிந்தேன்.

இது தகப்பனாருக்குத் தெரிந்துவிட்டது. ஒரு நாள் அழைத்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பெரிய உபந்யாஸம் செய்தார்:

“கதர் வேலை, ஹரிஜன முன்னேற்றம் இவை எது வேணுமானாலும் நீ செய்; நான் தடுக்கவில்லை. இவையெல்லாம் நல்ல வேலைகள் தான். ஆனால் இவைகளினால் நமக்குச் சுயராஜ்யம் கிடைத்துவிடும் என்று நினைக்காதே. சரியான அரசியல் வேலைத் திட்டத்தினால்தான் நமக்குச் சுயராஜ்யம் கிடைக்கும். அரசியலோ அழுக்குப் பிடித்த விளையாட்டு! ஆண் பிள்ளைகளாகிய நாங்களே அதில் எவ்வளவோ அலுத்துச் சலித்துப் போகிறோம். ஸ்திரீகள் இதில் கலந்துகொள்வது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. சிலருக்கு ஜெயிலுக்குப் போவதே ஒரு பைத்தியமாகி விடுகிறது. ஜெயிலுக்குப் போகிறதால் மட்டும் சுயராஜ்யம் கிடைத்துவிடப் போகிறதா? நீ ஜெயிலுக்குப் போவது எனக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லை.”

இப்படியெல்லாம் கண்டிப்பாய்க் கூறிவிட்டு எழுந்து போய்விட்டார். அப்போது தேசம் இருந்த நிலையில், எனக்கு இருந்த ஆத்திரத்தில், இவருடைய வார்த்தை காதில் ஏறப்போகிறதா? அன்பே என்னை அடக்காத போது, புத்திமதியா அடக்கப் போகிறது? 1932 ஜனவரி 19-ல் சிறை சென்றேன். சிறை சென்றே ஒருவாறு மன நிம்மதி பெற்றேன்.



6. ஹரிஜன யாத்திரையில்

1933—நவம்பர்: "ஹரிஜன யாத்திரை"யில் ஈடுபட்டு மகாத்மா மீண்டும் சென்னைக்கு வந்தார். "ஹரிஜன யாத்திரை" என்றால், சமூக-மத சம்பந்தமாக ஹரிஜனங்களுக்குள்ள குறைகளைப் போக்குவதற்குப் பிரசாரம் செய்துகொண்டே மகாத்மா தேசமெங்கும் செய்து வந்த யாத்திரைதான்.

அந்த யாத்திரையில் ஒரு சமயம் சென்னையில் கோடம்பாக்கம் ஹரிஜனக் கைத்தொழிற் கல்விச்சாலையில் தங்கியிருந்தார். நான் அங்கே போய் இவரைத் தரிசித்தேன்.

என்னுடைய மன நிலையை உணர்ந்து என்னிடம் மிக்க அனுதாபம் காட்டினார்.

"உன் தகப்பனார் விலகிக்கொண்டதால், போற்றக் கூடிய ஒரு தலைவரைக் காங்கிரஸ் இழந்துவிட்டது. அவரை மறுபடியும் காங்கிரஸில் சேரும்படி செய்வதால், நாட்டுக்குப் பெருத்த லாபம் உண்டாகும். உன்னால் அது செய்ய முடியாதா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "அவர் மிகவும் பிடிவாதக்காரர். நான் முயன்று பார்த்தேன்; முடியவில்லை. என்மீது அவருக்கு அதிகமான கோபம். சரியாய்க்கூடப் பேசுவதில்லை" என்றேன்.

"நான் வந்து பேசிப் பார்க்கிறேன்; உன் பொருட்டு நானே வருகிறேன்" என்றார் காந்தியடிகள். அப்படியே அன்று மாலை ஆறு மணிக்கு எங்கள் வீட்டுக்கு வந்தார்.

அன்று மகாத்மா தனியாகவே வந்தார். எங்கள் வீட்டிலும் என் தந்தை, தாயாரோடு வீட்டுக் குழந்தைகளையும் என்னையும் தவிர, அன்னியர் ஒருவரும் இல்லை.

என் தந்தை 'ட்ராயிங் ரூம்' ஹாலில் காந்தியை வரவேற்றுப் பேசினார். இருவரும் மிக்க அன்போடு க்ஷேம லாபங்களைப் பேசிக்கொண்டனர்.

அரசியல் விஷயமாகப் பேச்சுக் கிளம்பியதும், பழைய படி தம் நீண்ட வாதத்தைத் தொடங்கிவிட்டார் தகப்பனர். வெகுநேரம் காந்தியடிகள் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தார். என்ன சொல்லியும் அவரைத் திருப்ப முடியவில்லை மகாத்மாவினலும்.

எனக்கோ வருத்தம் தாங்க முடியவில்லை. ஒரு ஏழைக்காக ஒரு கடுமையான நீதிபதி முன்பு ஓர் அரசனே நேரில் வந்து பரிந்து வாதாடுவதுபோலத் தோன்றியது அப்போது.

பிறகு மகாத்மா காந்தி, "உன் தகப்பனரின் அபிப் பிராயம் இவ்விதம் இருக்கும்போது, நீ அரசியல் விஷயங் களில் பிரவேசித்து அவரை விரோதித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லையே!" என்ருர். "உன்னல் இயன்ற சமூக சேவை செய்து வா. கதர்த் தொண்டு, ஹரிஜன ஸேவை இவைகளை விடாமல் செய்துவந்தால் போதும்!" என்று எனக்குப் புத்திமதி கூறி வருத்தத் தோடு திரும்பிப் போய்விட்டார்.

7. என் "ஹிந்தி" யாத்திரையில்

1934-ஷ ஏப்ரல் மாதக் கடைசி. நான் ஹிந்தி யாத்திரை-கோஷ்டியில் சேர்ந்து வட நாட்டுக்குப் போயிருந்தேன். டெல்லி, தேஹராதூன், ஹரித்வார், கான்பூர், லாகூர், அலஹாபாத், காசி முதலிய இடங்களுக்குப் போய் விட்டு, பூகம்பம் ஏற்பட்டிருந்த பீஹார் மாகாணத்தின் தலைநகரான பாட்னவுக்கும் போனேன். அச்சமயம் மகாத்மா அங்கே இருந்தார்.

அவர் ஸ்ரீ ஜமன்லால் பஜாஜின் பங்களா ஒன்றில் தங்கி யிருந்தார். இவரைத் தரிசித்துவிட்டுக் கல்கத்தாவுக்குத் திரும்ப வேணுமென்று ரயில் ஏறினேம். நாங்கள் புறப் பட்ட வண்டியிலே மகாத்மாவும், வழியிலுள்ள ஒரு சிறு ஊருக்குப் புறப்பட்டார்.

இவர் இறங்கவேண்டிய ஸ்டேஷனுக்கு இரவு 1–30 மணிக்குத்தான் போய்ச் சேரமுடியும். அதுவரை இவருடன் இருப்போம் என்று எண்ணி, இவர் தம் பரிவாரத்துடன் ஏறியிருந்த மூன்றும் வகுப்புக் கம்பார்ட்மென்டில் ஏறிக்கொள்ள அனுமதி கேட்டேன்.

அதற்கு இவர், "இங்கே இந்த வண்டியில் எவருக்கும் படுக்க இடமில்லை. நீ படுத்துத் தூங்க வேணுமென்றால், வேறு வண்டியைத்தான் தேடிப் போகவேணும்" என்றார்.

"உங்களுடன் சிறிது பொழுதாவது இருக்கவேணுமென்றுதான் வந்தேன். நான் படுத்துத் தூங்க விரும்பவில்லை" என்று பதில் சொன்னேன். உடனே தம் பக்கத்தில் உட்காருவதற்கு எனக்கு இடம் ஒழித்துக் கொடுத்தார்.

மகாதேவ தேஸாய், மீரா பேன், பியாரே லால், பிரபாவதி முதலானவர்கள் எல்லாரும் ஸ்டேஷன் வரும்வரை உட்கார்ந்து கொண்டே வந்தார்கள். மகாத்மாவுக்கு மட்டும் சற்றுக் கால் நீட்டிப் படுக்க இடம் ஒழித்துக் கொடுத்தோம்.

இரவு 1–30 மணிக்கு இவர் இறங்கவேண்டிய ஸ்டேஷன் வந்தது. அதற்கு முன்பே இரண்டு மூன்று ஸ்டேஷன்கள் தொடங்கி, "பிளாட்பார"ங்களில் பெரிய் ஆர்ப்பாட்டமாக இருந்து வந்தது. இவர் ஹரிஜன யாத்திரை போய்வந்த சமயமாகையால், ஸனாதனிகள் அதிகமாய் ஆத்திரம் அடைந்திருந்தார்கள்.

குறித்த ஸ்டேஷனில் கறுப்புக் கொடி - ஆர்பாட்டம் பலத்துவிட்டது. நாங்கள் மகாத்மாவிடம், "இந்த ஸ்டேஷனில் இறங்க வேண்டாம், அடுத்த ஸ்டேஷனில் இறங்கலாமே!" என்று சொல்லிப் பார்த்தோம்.

மகாத்மா கேட்கவில்லை. வண்டி நின்றதும் நிற்காததுமாய் அந்த நள்ளிரவில் மையிருட்டில், கூக்குரலிடும் அந்தக் கறுப்புக் கொடி - ஆசாமிகளின் கோஷ்டி மத்தியிலே குதித்து மறைந்து போனார். தமக்குப் பின்னால் ஸ்திரீகள் எவரும் வரக்கூடாதென்றும், அவர்கள்

அடுத்த ஸ்டேஷனில்தான் இறங்கவேணுமென்றும் கடுங் கட்டளையிட்டுப் போய்விட்டார்.

"இவரைத் திரும்பியும் உயிருடன் காணப்போகிருேமா ?" என்றுகூட எண்ணிவிட்டோம். அந்த இரவிலே அவ்வளவு அச்சத்துடன், அந்த ஓடும் வண்டியிலே, மனமில்லாமலே, ஓடிப்போனேம் நாங்கள், இவரை அங்கே விட்டு விட்டு.

சென்னை வந்து சேர்ந்ததும், மேலே சொன்ன ஸ்டேஷனில் பெரிய கலாட்டா ஏற்பட்டதென்றும், கல்லடிகூட இருந்ததென்றும் பேப்பரில் படித்தோம், படிக்கவும், காந்தி மஹான் அன்று பிழைத்தது தெய்வாதீனம் என்று தோன்றியது.

இந்த என் ஹிந்தி யாத்திரையிலும் மகாத்மா காந்தியின் நினைவுகளே என் உள்ளத்தில் முக்கிய ஸ்தானம் பெற்றுவிட்டன. டெல்லி, தெஹராதூன், ஹரித்வார், காசி, பிரயாகை முதலான சரித்திரப் பிரசித்தமும் புராணப் பிரசித்தமுமான ஸ்தலங்களிலே நான் கண்ட காட்சிகளைக் காட்டிலும், அந்த நள்ளிரவிலே—அந்த மையிருட்டிலே — மகாத்மா குதித்து, விரோத மனேபாவமும் மதா வேசமும் கொண்டிருந்த அந்த ஜனக் கடலில் மறைந்து போனுரே, அந்தக் காட்சி என் உள்ளத்தை அப்படியே உருக்கிவிட்டது. அத்தகைய வீரம், போர் வீரத்தையும் பேடித்தனம் என்று சொல்லும்படியாக, அவ்வளவு உயரத்திலே ஜொலிக்கும் ஒரு நக்ஷத்திரம்போல் மிளிர்ந்து, நமது தற்கால வாழ்க்கையாகிய காரிருளிலும் வழி காட்டுகிறதல்லவா?



8. பம்பாய்க் காங்கிரஸ்

1934-ஆு அக்டோபர் மாதம் 20-ந்தேதி பம்பாயில் காங்கிரஸ் ஆரம்பமாயிற்று. தேச ஸேவிகைகள் என்ற நிலையில், ஸ்ரீமதி ஜானம்மாள், * கோதை நாயகியம்மாள் – இவர்களுடன் நானும் அந்தக் காங்கிரஸுக்குப் போயிருந்தேன். இதுதான் நான் பார்த்த முதல் காங்கிரஸ்.

நாலு நாளைக்கு முன்னமே போய்விட்டோம். பம்பாய் "ஓர்லி" கடற்கரையில் பிரம்மாண்டமான ஒரு புதிய நகரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

நாங்கள் தங்குவதற்காக ஓலைக் கீற்றால் முடைந்த தட்டி - அறைகள் கொடுத்திருந்தார்கள். படுக்க நாடாக் கட்டில். ஸ்நானம், போஜனம் இவற்றுக்கெல்லாம் தனி இடங்கள். டெலிகேட் டிக்கட்டு மூன்று ரூபாயும், அறை வாடகை ஆறு ரூபாயும், போஜன சாலைக்கு வேறு கட்டணமும் கொடுத்தோம். பணம் வைத்துக்கொள்ள பாங்கு, ஆஸ்பத்திரி, தபால் - தந்தி ஆபீசுகள் முதலியனவும் காங்கிரஸ் நகருக்குள்ளேயே அமைக்கப்பட்டிருந்தன.

ஸ்ரீமதி கமலாதேவி, சோபியா ஸோம்ஜி இவர்களின் தலைமையில் இந்துஸ்தான் ஸேவாதள ஸ்திரீ - வாலண்டியர்கள் எங்கள் சௌகரியங்களை யெல்லாம் வெகு நன்றாய்க் கவனித்துக்கொண்டனர்.

காங்கிரஸ் - பொதுக் கூட்டங்கள் பிரம்மாண்டமான ஒரு மைதானத்திலே நடைபெற்றன. டெலிகேட்டுகள் உட்கார, மைதானத்தை மாகாண வாரியாகப் பிரித்து வசதி செய்திருந்தார்கள். எங்கும் ஒலி பரப்புக் கருவிகள், மத்தியில் துவஜ ஸ்தம்பம். தலைவரும் மற்றப் பிரமுகர்களும் ஏறிநின்று பேசுவதற்கு உயரமான படிக்கட்டு மேடை (tower).

---

* 'ஜகன் மோகினி' ஆசிரியை; எங்களுடன் சிறைவாஸம் செய்தவர்.

அந்தக் காங்கிரஸின் தலைவர் பாபு ராஜேந்திர பிரஸாத். சற்றேறக்குறைய எல்லா மாகாணத் தலைவர்களும் அந்தக் காங்கிரஸுக்கு வந்திருந்தனர்.

காந்தியின் முகாமும், தலைவர் முகாமும் காங்கிரஸ் நகரின் மத்தியில் பலத்த காவல் சூழ அமைக்கப்பட்டிருந்தன. அவற்றை அடைய வேண்டுமானால், ஆறு வாசல்களைத் தாண்டித் தாண்டிச் செல்லவேண்டும். அதற்குத் தனி அனுமதிச்சீட்டு வேண்டும். அபேத வாதக் கட்சியினர் பலத்த ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாய் வதந்தி உலாவியதால், அவ்வளவு பந்தோபஸ்து.

அந்த நிலையில் எந்நேரமும் காந்தியின் அருகிலே இருக்கவேண்டி இரண்டு அனுமதிச் சீட்டுகளை நாங்கள் கேட்டுப் பெற்றுக்கொண்டோம்.

அங்கே பெரிய, பெரிய தலைவர்கள் மிக்க கம்பீரமாக வருவார்கள்; காந்தியைக் கண்டவுடன் அடங்கி விடுவார்கள். வணக்கமாகச் சமீபித்து இவர் அபிப்பிராயத்தைக் கேட்டுக்கொண்டு போவார்கள்.

காங்கிரஸ் - கூட்டங்களில் மகாத்மா பிரசன்னமாக இல்லாவிட்டால், மற்றப் பெரிய தலைவர்கள் பிரசன்னமாயிருந்தும் அந்தக் கூட்டம் சோபை அற்றே போகும். எனவே, மகாத்மா நூல் நூற்பது, உண்பது முதலிய காரியங்களைக்கூடக் காங்கிரஸ் மத்தியிலே இருந்து கொண்டு செய்யவேண்டியிருந்தது.

அந்தக் காங்கிரஸ் - நகரில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுடைய பேச்சிலும் நினைவிலும் முடிசூடா மன்னராக மகாத்மா காந்தி ஒருவர்தான் குடிபுகுந்திருந்தார்.

எனினும் பழைய மகாத்மாவாகத்தான் இருந்தார், என்னைப் போன்றவர்களுக்கு. எவ்வளவு அன்புடன் எங்களை நோக்கிப் பேசி வரவேற்றார்!

இந்தக் காங்கிரஸின் விசேஷம் காங்கிரஸை விட்டு மகாத்மா காந்தி வெளியேறியதுதான். இதற்குக் காரணம், ‘சமாதானமும் நியாயமும் பொருந்திய முறைகளில்’ சுய ஆட்சியை அடையவேண்டும் என்பதற்குப் பதில் ‘ஸத்தியமும் அஹிம்ஸையும் தழுவிய முறையில்......’ என்று மகாத்மா கொண்டுவந்த திருத்தத்தை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஒப்புக்கொள்ளாததுதான். ஆனால் நான் சம்பந்தப்பட்ட வரையில் மகாத்மாவை மேலும் நன்றாகத் தெரிந்துகொள்வதற்கு ஒரு சந்தர்ப்பமாக உதவியது பம்பாய்க் காங்கிரஸூம். இன்றும் அந்தக் காங்கிரஸை நினைத்துப் பார்க்கும்போது, சிக்கலான அரசியல்-பிரச்னைகளைக் குறித்த விவகாரங்களாவது, மகாத்மாவுக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்குமிடையே ஏற்பட்ட கருத்து-வேற்றுமையாவது என் நினைவிற்கு வரவில்லை. அந்த ஹிருதயத்திலே என்னைப்போன்றவர்கள் விஷயத்திலும் எவ்வளவோ கருணையும் அன்பும் ததும்பிக்கொண்டிருந்தன!— என்பதுதான் இப்போது தெளிவாக ஞாபகத்தில் இருக்கிறது. இதை நான் ஒருபோதும் மறக்க முடியாது.

9. வர்தா ஆச்ரம நினைவுகள்

பம்பாய்க் காங்கிரஸிலிருந்து திரும்பியதும் எப்படியோ முரண்டுசெய்து 1934-நவம்பர் 2-ந்தேதி வர்தாவுக்குச் சென்றேன். காந்தி ஆச்ரமத்தில் கொஞ்சகாலமாவது வசிக்கவேணுமென்ற ஆவல் வெகு காலமாக எனக்கு உண்டு. அதைப் பூர்த்தி செய்ய இப்போதுதான் வசதி கிடைத்தது.

தகப்பனாரே கூடவந்து என்னை ஆச்ரமத்தில் விட்டுச் சென்றார். திரும்பிப் போகும்போது அவருக்குக் கண்ணீர் வந்துவிட்டது. அன்றுதான் மகாத்மாவும் நானும், என் மீது தகப்பனாருக்கு இருந்த அன்பின் ஆழத்தை உணர்ந்து கொண்டோம்.

“நீங்கள் கவலைப் படவேண்டாம். உங்கள் அம்புஜம் இங்கே சில நாள் இருக்கட்டும். இவளை நான் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன். எனக்கு அநேக ஸ்வீகார புத்திரிகள் உண்டு. அவர்களைப்போல் இவளும் ஒருத்தி என்று எண்ணிக்கொள்ளுங்கள். இன்னும் ஒரு மாதத்தில் அனுப்பிவிடுகிறேன். நீங்கள் அதிருப்திப்படும்படி ஒரு நாளும் நடந்து கொள்ளமாட்டாள். இதை உங்கள் மனைவியாருக்கும் தெரிவியுங்கள். இவள் உங்கள் மனைவியாருக்கும் உங்களுக்கும் என்றும் உண்மைப் புதல்வியாகவே யிருப்பாள்” என்று சொல்லி என் தகப்பனாரைத் தேற்றியனுப்பினார் மகாத்மா.

அரசியல்-விஷயங்களில் காந்தியடிகளுக்கு எவ்வளவு ஊக்கம் இருந்ததோ, ஏறக்குறைய அவ்வளவு ஊக்கம் தமது நண்பர்களின் குடும்ப விஷயங்களிலும் உண்டென்று தோன்றுகிறது. அரசியலில் ஏற்படும் அபிப்பிராய பேதங்கள் நட்பைப் பாதிக்கும்படி விடுவது மகாத்மாவின் இயல்பன்று.

மகாத்மா என் விஷயத்தில் காட்டிய ஊக்கம், என் மீது கொண்ட அன்பிற்குக் காரணம், நான் அவருடைய நண்பரின் புதல்வி என்பதே. இந்த விஷயத்தைத் தாமே பல முறை விளக்கியிருக்கிறார்.

நான் ஆச்ரமத்தில் இருந்தவரை, ஒரு புதல்வி தன் தந்தையின் அன்பார்ந்த கண்காணிப்பில் இருப்பது போன்ற உணர்ச்சியுடனே இருந்துவந்தேன்.

தமக்கு வந்த பழங்களையெல்லாம் எனக்குத் தந்து உண்ணச் சொல்லுவார். ஒருசமயம் இவருக்கென்று இருந்த தேனையெல்லாம் நானே சாப்பிட்டு விட்டதாகவும் அறிந்துகொண்டேன்.

என்னைப்பற்றியும் கவலை!

வேறொரு சமயம் நான் தரையிலே புஸ்தகத்தை வைத்துக்கொண்டு மண்டியிட்டுக் குனிந்து எழுதுவதைப்

பார்த்துவிட்டு, ஸ்ரீ பஜாஜுக்குச் சொல்லியனுப்பி எனக்கென்று ஒரு சிறு சாய்வு-மேஜை தருவித்துக் கொடுத்தார்.

அன்று காந்திஜி அதைக்கொடுப்பதற்காக என்னை அழைத்துவரச் சொன்னபோது, "நாம் என்ன குற்றம் செய்துவிட்டோமோ?" என்ற திகிலுடன் இரைக்க இரைக்க ஓடோடியும் சென்றேன், மகாத்மா இருந்த மாடி ஹாலுக்கு. சென்று, நடுங்கிக்கொண்டே இவர் முன்பு நின்றேன்.

மகாத்மா என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, "அம்புஜம்! இந்த மேஜையை உனக்காக வரவழைத்திருக்கிறேன். இனிமேல் தரையில் புஸ்தகத்தை வைத்துக் கவிழ்ந்துகொண்டு எழுத முடியாது!" என்றார். அதைக் கேட்டு எனக்கு உண்டான வியப்பிற்கு எல்லை இல்லை.

நான் வர்தாவுக்குச் சென்றது கடுமையான குளிர் காலம். மகாத்மா அப்போது வர்தா மகிளாச்ரமத் தோட்டத்திலுள்ள ஒரு பங்களாவில் வசித்து வந்தார். கீழ் ஹாலில் விநோபாபாவே முதலியவர்கள் இருந்தனர். மேல்மாடி ஹாலில் மகாத்மா, கஸ்தூரிபா, மீராபேன், அம்துல் முதலான சகோதரிகள் இருந்தனர்.

நான் வர்தாவுக்குப்போன புதிசு. அன்று மாலை பலத்த காற்றுமழை. நாங்கள் மகிளாச்ரமக் கட்டடத்தின் மாடியிலுள்ள தாழ்வாரத்தில் ஒண்டிக் கொண்டிருந்தோம். என்னுடன் ஆச்ரமத்துச் சகோதரிகள் சிலரும் இருந்தனர். உட்புற ஹாலில் மஹாத்மா யார்யாருக்கோ பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார்.

இளம் பிராயத்திலிருந்தே மழையென்றால் எனக்கு ஆகாது. ஜலதோஷம் பிடித்துக்கொள்ளும். என் தகப்பனரும், "மழை, மழை!" என்று என்னை வெளியே போக விடமாட்டார். ஈரத்தில் கால்வைத்து நடமாடக் கூடாது என்று வீட்டிலும் வீட்டைச் சுற்றிலும் கல்லுக் கட்டடமாகவே அமைத்திருந்தார்.

அந்த மாலை யிருட்டையும், மழையையும் குளிர்ந்த வாடையையும், வர்தா ஆச்ரமத்தைச் சுற்றியிருந்த சகதியையும் எண்ண எண்ண, எனக்கு உள்ளுக்குள்ளே கொஞ்சம் திகில் உண்டாகிவிட்டது. உடனே வீட்டின் ஞாபகமும், 'அப்பா, அம்மா'வின் ஞாபகமும் வந்துவிட்டன. 'ஹோம்-ஸிக்' என்பார்களே, அந்த நோய்,—வீட்டைப் பற்றிய ஏக்கம்—வந்துவிட்ட தென்றே தோன்றியது. கண்களில் நீர்கூடத் துளித்தது!

இதற்குள் இரவு 7-30-மணி (புதுமணி அல்ல) ஆகிவிட்டது. பாபுவைப் பேட்டி காண வந்தவர்களெல்லாம் போய்விட்டார்கள்.

"லீலாவதி! அம்புஜம்! அந்த மழையில் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டது பாபுவின் குரல். எழுந்து உள்ளே போனோம். அங்கே கஸ்தூரிபா, பிரபாவதி, அம்துல், மீரா அனைவரும் இருந்தனர். 'ஹரிகேன்' விளக்கு ஏற்றிவைத்துக் கொண்டு, நாங்கள் அனைவரும் ஏதேதோ புஸ்தகம் படிக்கவும், நூல் நூற்கவும் தொடங்கி விட்டோம். மகாத்மாவும் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்.

வெளியே, ஊதை-வாடையும் மழையும் அப்படியே அசாத்தியமாக இருந்தும்கூட, உள்ளே "கம்"மென்று கணப்பின் அருகில் இருப்பதுபோன்ற ஓர் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. மனசில் உதித்த கிலி மாயமாய்ப் போய்விட்டது. அந்தக் குளிர்ந்த இரவு அப்பால் சுகமாகவே கழிந்தது.

ஆச்ரம வசதிகள்

மகாத்மா காந்தியின் சுகாதார முறைகளைப்பற்றிய அபிப்பிராயங்கள் யாவரும் அறிந்தனவே. வர்தா ஆச்ரமத் தோட்டம் பெரிது. அதிலே ஒரு கோடியில்தான் கக்கூஸ் தட்டிகள் கட்டியிருக்கும். இரவு நேரங்களிலும் அங்கேதான் போகவேண்டும்.

சென்னையில் நமது வீடுகளிலோ எத்தனையோ கதவுகள், இரவு நேரங்களில் கெட்டித் தாழ்ப்பாள் இடப் பட்டு எவ்வளவோ பந்தோபஸ்தாய் இருக்குமே! வர்தா ஆச்ரமத்தில் எந்தக் கதவுக்கும் தாழ்ப்பாள் கிடையாது.

வாயிலென்ப் பூட்டென்ன
மதிலென்ன வழங்கும்
மனையென்னும் பெயர்க்குரிய
மரபொன்றும் இன்றி,
நின்ற தனியிடம்

என்று "மனோன்மணிய" ஆசிரியர் ஒரு முனிவனுடைய ஆச்ரமததை வர்ணித்திருக்கிறார் அல்லவா? அந்த ஞாபகம் வரத்தான் செய்கிறது, காந்தி ஆச்ரமத்தை இன்று நினைத்துப் பார்க்கும்போதும்.

ஆச்ரம வாசிகளின் பெட்டி பேழைகளும் திறந்தே யிருக்கும். அவர்களுடைய பெட்டியிலோ, உடம்பிலோ ஒரு செம்பால் அடித்த நகையோ, செல்லாக் காசோ கிடையாது.

அவர்களுக்கு உள்ள காசு சொத்து எல்லாம் ஆச்ரமச் சொத்து; ஆச்ரம கஜானாவைச் சேர்ந்தவை. ஆச்ரமமே உண்டி அளித்து அவர்களைக் காக்கும் தாய். அவர்க ளுடைய உடைமைகள் எல்லாம் இரண்டு கதர்த்துணிகள்; போஜனம் செய்வதற்கான சாதாரணத் தட்டு, கிண் ணங்கள்; ஒரு வாளி; நூல் நூற்க ஒரு ராட்டு; படிக்கச் சில புஸ்தகங்கள்; படுக்கவோ ஒரு சாமானியப் படுக்கை —இவ்வளவுதான்.

உறங்கஅவர் பனிப்பாயும்
பூஅணையும் உன்னார்;
உண்ணளவில் பாலமிழ்தும்
ஒன்றாக மதியார்!

என்று அதே "மனோன்மணிய" ஆச்ரம வர்ணனைதான் மறுபடியும் ஞாபகத்திற்கு வருகிறது.

இந்த உடைமைகளுக்கு எந்தத் திருடன் வருவான்? எனவே, நாங்கள் இரவு நேரங்களிலும் எழுந்தால் தோட்டத்துக்குத்தான் போவோம், — ஆம்; அந்தக் கோடியில் உள்ள தோட்டத்துக்குத்தான் போவோம். அச்சம் தோன்றுது.

சென்னைமாநகர வீடுகளில்கூட இரவு நேரத்தில் சற்று ஓசைப் பட்டாலும் நெஞ்சு திடுதிடு என்று அடித்துக் கொள்ளும், ஏதோ ஒரு நிழலைக்கூடத் திருடனே என்று எண்ணத் தொடங்கி விடுவோம்!

ஒரு சமயம் வர்தாவிலே இரவு நேரத்தில் அடுத் தடுத்து நரி ஊளையிட ஆரம்பித்தது. எனக்கு உள்ளுக் குள்ளே பயம். நள்ளிரவில் அந்தத் தோட்டத்துக்கு எப்படி எழுந்து போவது?

"நரி கடிக்குமோ மனுஷ்யாளை?" என்று மட்டும் காந்தி அடிகளை மெள்ளக் கேட்டுத் தெரிந்து கொண் டேன்.

அப்படியிருந்தும் இவரிடம், "இரவு நேரங்களுக் காவது சமீபத்திலேயே வசதி செய்து தரவேணும்" என்று கேட்கத் துணியவில்லை என் நெஞ்சம். ஆனால், என்னைப்போலவே மற்றவர்கள் பயந்ததாகத் தெரிய வில்லை.

ஆச்ரம நியமங்கள்

நான் வந்து பத்துப் பதினைந்து நாளுக்குப் பிறகு ஜானம்மாளும் ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தார். நாங்கள் இருவரும் மகாத்மா கூடவே இருந்து வந்தோம்.-

ஆச்ரம வாசிகளை எழுப்பக் காலை 4 மணிக்கு மணி அடிப்பார்கள். பிறகு 4-30 மணிக்குப் பிரார்த்தனை மணி அடிப்பார்கள். அந்தக் கடுங் குளிரிலும் மகாத்மா இருக்கும் மாடியில், வெட்டவெளியில், மங்கலான தீப ஒளியிலே, பிரார்த்தனை நடக்கும்.

1—3

நாங்கள் எல்லோரும் கம்பளிப் போர்வையால் தலை, காது, உடல், பாதம்வரை சுற்றிப் போர்த்துக்கொண்டு பிரார்த்தனைக்கு உட்காருவோம். எங்கும் அமைதியும் நிச்சப்தமும் குடிகொண்டிருக்க, சுமார் அரைமணி நேரம் காலைப் பிராரத்தனைக்கான பாடல்களை மெதுவாக ஒன்று கூடிச் சொல்லுவோம். பிறகு சற்றுநேரம் மௌனப் பிரார்த்தனை நடக்கும்.

மகாத்மா எழுந்ததும், அந்த மௌனம் கலைந்து அவரவர் வேலைக்குப் பிரிந்து போவோம். காலை 7 மணிக்கு உண்டி : ஒவ்வொருவருக்கும் ஒரு பெரிய டம்ளர் பாலோ, கோதுமைக் கஞ்சியோ கிடைக்கும்.

ஆச்ரமத்து வேலைகளை அங்குள்ள யாவரும் செய்து வந்தனர். சிலருக்குச் சமையலறை வேலை. சிலருக்குக் கட்டடங்களையும் அறைகளையும் பெருக்கிச் சுத்தம் செய்யும் வேலை. பெரிய பெரிய "சக்கி"யில் (யந்திரத்தில்) சிலர் கோதுமைமா அரைப்பார்கள். சிலர் பஞ்சடித்துக் கொட்டை நீக்குவர். சிலர் தோட்ட வேலை செய்வர். சிலர் ஆச்ரமத்து ஆபீஸ் வேலையைக் கவனிப்பார்கள்.

தினசரி எல்லோரும் ஏதேனும் வேலை செய்வது ஆச்ரமத்துக் கட்டாயத் திட்டம். ஆச்ரம வாசிகளுக்கு வேலைத் திட்டம் போடுவது, சமையல்-திட்டம் சொல்வது, மகிலாச்ரம மாணவிகளின் படிப்பு முறையைத் திட்டஞ் செய்வது, அவர்களுடைய குறைபாடுகளுக்குச் செவி சாய்ப்பது, புத்திமதி கூறுவது—இவை போன்ற ஒவ்வொரு சாதாரணச் சிறு காரியம் முதல் நுட்பமான பெரிய அரசியல் விஷயம் வரையில் தினசரி கவனிப்பது, ஆலோசனை கூறுவது — இவையெல்லாம் மகாத்மாவின் அலுவல்கள்.

இவை தவிர, நோயுற்ற ஆச்ரம வாசிகளுக்கு வைத்தியம் செய்வது, கவனித்துப் பணி செய்வது, அந்தப் பொக்கை வாய்ச் சிரிப்பினாலேயே ஆறுதல் அளிப்பது, உத்ஸாகப்படுத்துவது, பணி செய்யத் தூண்டுவது–அந்தப் பார்வையினாலேயே தைரியம் அளிப்பது — இவையும் மகாத்மாவின் அலுவலாகும்.



ஆறுதல் அளிக்கும்
அந்தப் பொக்கை
வாய்ச் சிரிப்பு

(பக்கம் 42)

சூத்திரதாரி

மேலும் இந்தியாவின் பல மூலைகளிலிருந்தும் வந்து குவிந்துகொண்டிருந்த கடிதங்களுக்கு ஒன்று தவருமல் விடை எழுதுவதும், இவருடைய முக்கிய அலுவல்களில் ஒன்று. இவருக்கு இருந்த கடிதப் போக்கு வரத்தின் தன்மை இத்தகையது எனக் கூறமுடியாது.

சில கடிதங்கள், பொது ஸ்தாபனங்களின் நடவடிக்கையைப் பற்றி இவர் அபிப்பிராயம் கேட்பவையாக இருக்கும். சில, குடும்ப சம்பந்தமாய் யோசனை கேட்பவையாக இருக்கும். அரசியல் சம்பந்தமானவை சில. சமூக விஷயங்களைப்பற்றி யிருக்கும் சில. மத விஷயங்களைப் பற்றி அபிப்பிராயம் கேட்கும் கடிதங்களாக இருக்கும் சில. இலக்கிய சம்பந்தமான கடிதங்களும் உண்டு. வெளிநாட்டுக் கடிதங்களுக்கும் குறைவில்லை.

இவற்றையெல்லாம் மகாதேவ தேஸாயியை நேரில் படிக்கச் சொல்லிக் கேட்பார் காந்தியடிகள். தாமே பதில் எழுதுவார். பிறராலும் எழுதுவித்து அனுப்பிவைப்பார். அந்த நிலையில், மகாத்மா காந்தியை வர்தாவிலிருந்து கொண்டே உலகத்தின் ஒரு பகுதியை ஆட்டிவைத்த சூத்திரதாரி என்றே சொல்லத் தோன்றியது.

நல்ல பயிற்சி

மீராபென் போன்ற சில ஆங்கிலச் சகோதரிகள் கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்து முரட்டுக் கதர்த் துணிகளைத் துவைப்பது, அறை கூட்டுவது, பாத்திரம் துலக்குவது, சமைப்பது போன்ற வீட்டு வேலைகளில் தினசரி ஈடுபடுவார்கள். அம்துல் ஸலாம், பிரபாவதி போன்ற இந்தியப் பெண்கள் மகாத்மாவின் பக்கத்தில் இருந்துகொண்டு கடிதப் போக்குவரத்தைக் கவனிப்பார்கள்; அரசியல் - குறிப்புக்களை எழுதுவார்கள்; ஆச்ரம வாசிகளுக்குப் பாடம் கற்பிப்பார்கள். இவையெல்லாம் ஆச்ரமத்திலே எனக்கு முதலில் ஆச்சரியமான காட்சிகளாகவே யிருந்தன.

இருபாலாருள்ளும் காணப்படும் சில குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு இந்த வேலைப் பழக்கம் ஒரு நல்ல முறையாகவே யிருந்தது. குடும்ப வேலை, சமூக வேலை, இரண்டிலும் பெண்கள் தேர்ச்சி பெறுவதற்கும் இது ஒரு நல்ல பயிற்சி.

ஆச்ரமச் சாப்பாடு

சாதம், முரட்டு ரொட்டி, பருப்பு, அரை உப்புப் போட்ட கறிவகை ஒன்று, தயிர்—இவையே காலை 11 மணி உணவு. உறைப்பு, புளிப்பு, தாளிப்பு முதலியன இல்லவேயில்லை.

ஜானம்மாளுக்கு இந்த ஆகாரம் கட்டோடு ஒத்துக் கொள்ளாமலே போய்விட்டது. தனியாக 'மதராஸ் ரஸம்' மட்டும் வைத்துச் சாப்பிட அவருக்குப் பிரத்தியேக அனுமதி கிடைத்தது.

எனக்கும் ஆச்ரமச் சாப்பாடு அவ்வளவாக ஒத்துக் கொள்ளவில்லை. ஆனால் எனக்கு 'கச்சாக் கானு'—அதாவது 'சமைக்கப்படாத உணவு' விதித்தார் மகாத்மா. அப்பொழுது அங்கே பலர் இந்த முறையைத் துவக்கியிருந்தனர். காந்தியடிகளின் உணவுப் பரிசோதனைகளில் ஒன்று இது.

காய்ச்சாத சுத்தமான கோசாலைப் பால் (புளித்துப் போகாமலிருக்கக் குளிர்ந்த ஜலத்தில் வைத்திருக்க வேண்டும்), ஆப்பில், சாத்துக்குடி ஆரஞ்சு முதலான பழவகைகள், சர்க்கரைக்குப் பதில் தேன், கறிவகைகளில் பச்சையாகச் சாப்பிடக்கூடியவை, அதாவது காரெட்டு, காபேஜ், முள்ளங்கி, சீமைத் தக்காளி, பருப்புக் கீரை—இவைதான் எங்கள் ஆகாரம். புளிப்பான பழங்களுக்கு உப்பைத் தொட்டுக் கொள்வது, புளிப்புக்காக எலுமிச்சம் பழம் சேர்ப்பது—இவையும் உண்டு.

பழம், காய் வகைகளை 'பொட்டாஷ் பெர்மாங்கனேட்' என்னும் மருந்து கலந்த நீரிலே முதலில் கழுவிப் பிறகு சுத்த ஜலத்தில் அலம்பி, நன்ருய்க் கடித்து மென்று தின்ன

வேண்டும். இவைகளைச் சாப்பிட அரைமணிக்கு மேல் பிடிக்கும். பச்சைப் பாலில் கொஞ்சம் எலுமிச்சம்பழ ரஸம் பிழிந்து, வெயிலில் வைத்துத் தயிராக உறைத்து அதையும் உண்டு வந்தோம்.

இவ்வித ஆகாரத்தினுல் உடம்புக்கு யாதொரு கெடுதியும் உண்டாகவில்லை. மலச்சிக்கலும் இல்லாம லிருந்தது. ஆனுல் எவ்வளவுதான் சாப்பிட்டாலும் இவை அன்னத்தைப்போல் பசி ஆற்றவில்லை எனக்கு. சென்னைக்கு வந்த பிறகு, அந்த ஆகார நியமம் உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாததால் அதை விட்டுவிட்டுப் பழையபடி மதராஸ் - ரஸத்திற்கும் காப்பிக்கும் திரும்பிவிட்டேன்.

நான் தேறின ஒரு பரீட்சை

இந்த ஆகார நியமத்தில் இருக்கும்போது, ஒரு முறை (தீபாவளி சமயம்) என்தாயார் எனக்கென்று சில தின்பண்டங்களைத் தயாரித்து ஆச்ரமத்திற்கு அனுப்பி யிருந்தார். அந்தப் பார்ஸல், பாபுவின் முன்னிலையில் கொண்டுவந்து திறக்கப்பட்டது. அதில் சில பர்பிகளும் முறுக்கு, சீடைகளும் இருந்தன.

“இவற்றைக் கண்டவுடன் உன் நாக்கில் நீர் ஊறு கிறதா? தின்ன வேணுமென்று அவா உண்டாகிறதா? உன் அம்மா பிரியத்துடன் அனுப்பிய பட்சணமாச்சே!” என்று என்னைக் கேலி செய்தார் பாபு. அதற்கு நான், “அவை வேண்டாம்: தின்ன விருப்பமில்லை!” என்று சொல்லிவிட்டேன்.

“அப்படியானுல், இவைகளை அப்படியே கொண்டு போய் மகிலாச்ரமக் குழந்தைகளுக்குக் கொடுத்துவிடு!” என்ருர். அப்பால் என்னுடன் வந்த பிரபாவதியை அழைத்து, “இவள் ஒரு துண்டுகூட ருசி பார்க்க வில்லையா?” என்று கேட்டார். இல்லையென்று தெரிந்த வுடன் என்னை அழைத்து, “நீ நாவை அடக்கத் தெரிந் தவள்!” என்று பாராட்டினர்.

நாங்கள் செய்தது சொற்பம்

ஜானம்மாளும் நானும் கூடியமட்டும் ஆச்ரம வேலையில் பங்கெடுத்துக் கொள்ள முயன்றோம். ஆனால் சமையல் அறைக்குமட்டும் போகவில்லை, ஆச்ரமத்துப் பெண்களுக்கு இங்கிலிஷ் பாடம் கற்பிப்பது, தோட்டம் கூட்டுவது முதலான வேலைகளையும் செய்துவந்தோம்.

பழக்கமில்லாததால், ஸ்நானம், துணி துவைப்பது, எங்கள் போஜன பாத்திரங்களைச் சுத்திசெய்வது முதலான சொந்த அலுவல்களுக்கே நேரம் போதாமல் இருந்தது. ஆகையால் நாங்கள் செய்த வேலை சொற்பம் என்றே சொல்லவேண்டும்.

காலையிலிருந்து

காலை எட்டு மணிக்குத் தினந்தோறும் துளஸீ ராமாயண பாடம் நடக்கும். வினோபா பாவே தம்புரா சுருதியுடன் ராமாயணப் பாடல்களைப் பாடுவார். நாங்கள் இரண்டாம் முறை அவர்கூடப் பாடுவோம். மகாத்மாவும் மெதுவாக வாய்க்குள் பாடுவார்.

இந்தப் பாடல்களின் ஒலியும், ஆச்ரமப் பெண்கள் காலை வேளையிலே பள்ளியில் பயின்றுவந்த ஹிந்தி சங்கீதத்தின் இன்னிசையும், இன்றும் என் காதில் ஒலிப்பதுண்டு. ஆம்: சிற்சில சமயங்களில் அமைதியான தென்றல் வீசும் காலை வேளைகளிலே அந்த ஒலிகள் அப்படியே அந்தக் காலை இளங்காற்றிலே மிதந்து வருவதுபோலத் தோன்றுவதுண்டு. அப்பொழுதெல்லாம் நான் அந்த ஆச்ரமத்திலேயே இருப்பதைப் போன்ற எண்ணம் உதிக்கும்.

பகல் பன்னிரண்டு மணி தொடங்கி அரைமணி நேரம் வரை மகிலா வித்தியாலய ஹாலில் நூல் நூற்கும் வேள்வி நடக்கும். எல்லாரும் ஒன்றுகூடி, சர்க்கா அல்லது தக்லி வைத்துக்கொண்டு மௌனமாக நூற்றுக் கொண்டிருப்பார்கள்.

நாள்தோறும் இந்த இரண்டு காரியங்களும் பக்தி சிரத்தையுடன், உள்ளும் புறமும் சாந்தம் நிலைபெற வெகு அழகாக நடைபெறும்.

மாலை நியமங்கள்

மாலை அஞ்சுமணிக்கு அதேமாதிரி இராப் போஜனம். இடைவேளையில் சிறுவர் சிறுமிகளுக்கு வாழைப்பழம், சோள பிஸ்கோத்து இவற்றில் ஏதேனும் கொடுப்பார்கள்.

மாலை 7 மணிக்குப் பிரார்த்தனை வெகு அமைதியாக நடைபெறும். கீதா பாடத்திற்குப் பிறகு முடிவில் தம்புரா சுருதியுடன் ஏதேனும் ஒரு பாட்டுப் பாடுவார்கள்.

அத்தகைய பாடல்களில் மகாத்மாவுக்கு மிகவும் பிரியமான பாட்டு, "அந்த ஹரி, பாஞ்சாலியின் துகிலை வளர்த்தவர்; பாண்டவருக்குத் துணை புரிந்தவர்; தம்மைப் பக்தியுடன் துதிப்பவர்களை ஒருநாளும் தங்கள் மானம் இழக்கும்படி விட்டுவிடமாட்டார்!" என்னும் கருத்து அமைந்த குஜராத்திப் பாட்டு.

பிரார்த்தனை முடிந்ததும் பள்ளிக்கூடங்களில் செய்வதுபோல ஆஜர்ப் பட்டி எடுப்பதுண்டு. அப்போது அவரவர் அன்று நூற்ற 'நூல் சிட்ட'த்தின் கணக்கைத் தெரிவிக்கவேண்டும். இதுதான் ஆச்ரம ரிஜிஸ்தர்.

மன்னிக்க மாட்டார்!

ஆச்ரமத்தில் வசிப்போர் எந்த வேலைகளில் தவறினாலும் மகாத்மாவின் மன்னிப்பை எளிதில் பெற்றுவிடக்கூடும், ஆனால் காலை 4-30 மணிப் பிரார்த்தனைக்கு எழுந்திராமலும், தினசரி நூல் நூற்காமலும் இருப்பதை மட்டும் இவர் எளிதில் மன்னிக்கமாட்டார். ஆகையால் இந்த இரண்டு விஷயங்களிலும் வெகு ஜாக்கிரதையுடன் அனைவரும் நடந்துகொள்வார்கள்.

மகாத்மாவின் தினசரியில் ஒரு பகுதி

மகாத்மா, அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து விடுவார். அதுமுதல் இரவு ஒன்பது மணிவரை, கால அட்டவணைப் பிரகாரம் அலுவல்கள் இடைவிடாமல் நடை பெறும். பகல் 12 மணி முதல் 1 மணி வரையில் சற்று இளைப்பாறுவார்.

அதிகாலையில் எழுந்தவுடன் வெந்நீரில் தேனை விட்டு ஒரு டம்ளர் தீர்த்தம் பருகுவார். பிறகு காலை 6 மணிக்கு, காய்ச்சின ஆட்டுப் பால் 3 ஆழாக்கு, மூன்று ஆரஞ்சுப் பழத்தின் சுளை இவற்றைச் சாப்பிடுவார். பகல் 10-30 மணிக்கு உப்பில்லாத சமைத்த கீரைக்கறி, ஆச்ரமத்து ரொட்டி, தேன், தயிர் (ஆட்டுத் தயிர்), பழம் முதலியன சாப்பிடுவார். பகலில் தூங்கி எழுந்தவுடன் மறுபடியும் ஒரு டம்ளர் வெந்நீர். மாலை உணவு : பழம், காய்ச்சின ஆட்டுப்பால் முதலியன.

அந்தக் கடுங்குளிரிலும் திறந்த வெளியிலேதான் படுக்கை. இவருக்காவது கட்டிலுண்டு. கஸ்தூரிபா, மீரா பேன் முதலானவர்களுக்கோ அதுவும் இல்லை. காலையில் எழுந்தால், படுக்கையெல்லாம் பனியால் நனைந்து பிழியும்படி யிருக்கும்.

காலையும் மாலையும் தவருமல் ஒருமணி நேரம் உலாவச் செல்வார் மகாத்மா. இவருடன் கூடப் பிரபல தேசத் தலைவர் முதல் ஆச்ரமக் குழந்தைவரை, அனைவரும் உலாவச் செல்வார்கள். அப்பொழுதுதான் ஒவ்வொரு வருக்கும் காந்திஜியுடன் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

காந்தி நடக்கும் நடையே தனி நடை. அதைப் பின் பற்ற ஆச்ரம வாசிகளாலேதான் முடியும். இவருடைய சாதாரண நடை நம்முடைய ஓட்டம். ஓட முடியாதவர் வழியில் வெகுதூரம் பின்தங்க வேண்டியதுதான்!

கரடு முரடான வயல் வரப்புக்கள் வழியாகத் தடி ஊன்றி நடக்கக்கூடிய — முழத் துண்டு உடுத்திய — ஒரு பொக்கை வாய்த் தாத்தாவைப் பின்பற்றி ஒரு பர்லாங்கு

தூரம்வரை ஆண் பெண், இருபாலர் அடங்கிய கூட்டம் ஒன்று (பித்தர் கூட்டம் என்றுகூடச் சொல்லிவிடலாம்) ஓடுவதென்ருல், அது எங்கும் காணக்கிடையாத காட்சி யல்லவா ?

உபயோகமான தேகாப்பியாசம்

நான் போன சமயம் ஆச்ரமத்துக்குக் கப்பி-ரோட்டு போடவேண்டி யிருந்தது. வயல் - புறங்களில் எதேஷ்ட மாய்ப் பருக்கைக் கற்கள் கிடக்க, வண்டிக்கு இரண்டு மூன்று ரூபாய் விலை கொடுத்துச் கப்பி வாங்குவதா ?

உலாவச் செல்லும்போது கற்கள் பொறுக்கி வர வேணுமென்று உத்தரவிட்டார் மகாத்மா. ஆளுக்கு ஒரு கதர்ப் பை. பாபுவுடன் ஓடிக்கொண்டே கற்களைப் பொறுக்குவதில், "நான், நீ" என்ற போட்டியும் ஆரம் பித்தது.

ஆறடி உயரமுள்ள அந்த 'எல்லைப்புற காந்தி' கான் ஸாஹிபு கூடக் குனிந்து குனிந்து கற்களைப் பொறுக்கினுர் என்ருல், அந்த அற்புதக் காட்சியை என்னென்று வர் ணிப்பது ?

வீட்டுக்குத் திரும்பும்போதுதான் கதர்ப் பை கனத்து விட்டதா, அல்லது கால்கள் தான் திடீர் என்று கனமாகி விட்டனவா ?—என்ற கேள்விகள் பிறக்கும் எங்களுக்குக் குள்ளே.

இப்படிக் கற்கள் பொறுக்கி வந்ததில், இரண்டு வண்டிக் கற்கள் கப்பி - ரோட்டுக்கு இலவசமாய்க் கிடைத்துவிட்டன. ஆச்ரமத்துக் கஜாணுவிலும் அஞ்சு ரூபாய் மிச்சம். எங்கள் சரீரத்திற்குக் கிடைத்த அப்பி யாசத்தைச் சொல்லவும் வேண்டுமா ?

பலனும் ஓய்வும்

நாங்கள் இருந்த அந்த ஒன்றரை மாதம்வரை எங்க ளுக்குச் சற்றும் வீட்டு ஞாபகமே எழவில்லை. ஜெயில் வாஸத்திற்கும் ஆச்ரம வாஸத்திற்கும் சில அம்சங்களில்

பேதமில்லை: எனினும், ஆச்ரம வாஸத்தில் ஏற்பட்ட அமைதி, சந்துஷ்டி, நிர்ப்பயமான சிந்தனை—இவை இனி வேறு எங்கே தேடினுல்தான் கிடைக்கப் போகின்றன?

காந்தியின் மௌன தினத்தில், ஆச்ரமம் எங்கும் மௌனம்—ஒரு தனியான சாந்தம்—நிலவிவிடும். எங்களை யும் அறியாமல் எங்கள் வாய் புதைந்துவிடும், யாருக்கும் உரக்கப் பேச நாவெழாது. நாங்களும் உத்தேசமில்லா மலே மௌன விரதம் அனுஷ்டிப்பவர்போல் ஆகி விடுவோம். தினசரி வேலைகள் யாவும் கிரமமாக நடந்து வந்தும், அன்று யாதொரு வேலையும் இல்லை யென்றே தோன்றும்! இத்தகைய மௌன நிலை உண்மையான ஓய்வல்லவா!

இந்த ஓய்வு, வீட்டிலே பல பணியாளர்கள் சூழ்ந்து உபசரிக்க, மின்சாரப் பங்காவின் கீழே சாய்வான நாற்காலியிலே சாய்ந்து சுக நித்திரை செய்து வந்தாலும் கிட்டுமா? ஒரு மஹானின் மௌன சக்தியாலன்றோ, நாங்கள் அத்தகைய அற்புத ஓய்வை உணரலானோம்?

1934 நவம்பர் 2-ந் தேதி முதல் டிஸம்பர் 16-ந் தேதி வரை நான் வர்தா ஆச்ரமத்திலே தங்கினேன்.

10. மகாத்மாவின் துணைவி

நானும் ஜானம்மாளும் வர்தா ஆச்ரமத்தில் தங்கி யிருந்த காலத்திலே கஸ்தூரிபாவும் அங்கே யிருந் தார். பேரன் பேத்திமார் என்றுல் அவருக்கு உயிர் என்று ஏற்கெனவே சொல்லி யிருக்கிறேன். மொத்தத்தில், குழந்தைகளைக் கண்டாலே ரொம்பப் பிடிக்கும். ஆச்ர மத்துக் குழந்தைகளை யெல்லாம் தம் பேரன் பேத்திகள் போலவே கருதுவார். அவர்களுடைய உணவு விஷயங் களைக் கவனிப்பதும் அவருடைய முக்கிய அலுவல்.

ஆச்ரமத்திலிருந்து வந்த எங்கள் எல்லோருடைய கண்ணும் கருத்தும் சதா மகாத்மாவையே சூழ்ந்து நிற்கும்.

ஆகையால் கஸ்தூரிபா அந்தத் தள்ளாத வயதில் தம் அலுவல்களைத் தாமே கவனித்துக் கொள்வது, அவருக்குக் கஷ்டமாக இருக்குமே—என்பதையும் மறந்துவிடுவோம்.

அவர் யாரையும் தம்முடைய சொந்த வேலைக்காக ஏவமாட்டார். அது மட்டுமா? எங்களுக்கும் உதவிசெய்ய வந்துவிடுவார்.

கஸ்தூரிபாவும் மகாதேவும்

அந்த ஆச்ரமத்தில் மகாதேவ தேஸாய் ஒருவரே உண்மையில் அன்னையின் சுக துக்கங்களை உணர்ந்தவர். கஸ்தூரிபாவும் வாய்க்கு ஒருதரம் மகாதேவின் பெருமையைச் சொல்லாமலிருக்க மாட்டார். அந்த அன்னைக்கு அவர் புத்திர ஸ்தானத்தில் இருந்தார். அந்தோ! அந்த அரும் புதல்வரை இழந்த அன்னையின் மனம் என்ன பாடு பட்டதோ, அன்று அந்தச் சிறைக்குள்ளே?

பதவியும் பொறுப்பும்

மஹான்களின் வாழ்க்கைத் துணைவியாக வாய்க்கப் பெறுவது பெரும் பாக்கியந்தான். ஆனால் அப்பதவியின் பொறுப்பை வகிப்பதென்பது எளிதான காரியமா?

சாதாரணமான ஒரு புருஷனுக்கு மனைவியென்ற நிலையிலேயே எவ்வளவோ புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது; சொந்த அபிலாஷைகளைத் தூரக் கட்டிவைக்க வேண்டியிருக்கிறது; தணிந்து போக வேண்டியிருக்கிறது. காந்தி போன்ற மகான்களோ தமது லட்சியத்தை உலகத்திலே நிலைநாட்டப் பிறந்தவர்கள். அதற்காகத் தம்மையே அர்ப்பணம் செய்வதன்றி, தம் மனைவி மக்களுடைய உடல், பொருள், ஆவிகளையுங்கூடத் தியாகம் செய்யச் சித்தமாயிருப்பவர்கள். பெரும் 'பிடிவாத' குணம் படைத்தவர்கள். உலகப் போக்கை எதிர்த்து, முன் வைத்த காலைப் பின்வாங்காது தீர நெஞ்சுடன் போராடி நிற்பவர்கள்.

மஹான்களின் சித்தம் தம் விஷயத்திலும் தம் மனைவி மக்கள் விஷயத்திலும் வைரத்தைவிட வன்மை வாய்ந்தது, பிறர் விஷயத்தில் பூவைவிட மென்மையானது — என்று சொல்லலாம். அத்தகைய பெரியார் ஒருவரது இல்லறம் யாதொரு இடையூறுமின்றி நல்லறமாக நடை பெறுவதென்றால் லேசான காரியமா?

பதிபக்தி, பணிவு, அடக்கம், சகிப்புத் தன்மை, எல்லோரையும் தம் மக்கள் எனப் பாவிக்கும் தாயுள்ளம், தியாக புத்தி—இவை போன்ற அரும்பெருங் குணங்களை வாழ்க்கைத் துணைவி படைத்திருந்தால்தானே, அந்தக் காரியம் சித்தி பெறலாகும்?

இத்தகைய நற்குணங்கள் அன்னை கஸ்தூரிபாவிடம் மலிந்து காணப்பட்டன. இல்லாவிட்டால், மகாத்மா உண்மையில், ஒரு மகாத்மாவாக இருக்க முடியாது என்றே சொல்லலாம். மகாத்மா காந்தி ஒரு சிறந்த யோகியாகவோ, துறவியாகவோ மட்டும் இருந்திருக்க முடியுமே யன்றி, அடிமை-இந்தியாவுக்கு வழிகாட்டும் ஒரு தீர்க்கதரிசியாக—ஒரு லட்சிய புருஷனாக—இந்தியாவின் ராஜ்ய, சமுதாய, பொருளாதாரத் துறைகளில் இறங்கித் தீவிரமாய்ச் சேவை செய்யும் ஒப்பற்ற கர்ம வீரனாகப் பரிணமித்திருக்க முடியாது.

ஆரம்பத்தில் கடும் பயிற்சி

மகாத்மாவின் இத்தகைய உயர்தர வாழ்க்கையில் இந்த வாழ்க்கைத் துணைவி எவ்வளவு தூரம் ஒத்துழைத்திருக்கிறார்! ஆனால் ஆரம்பத்தில் இந்த ஒத்துழைப்பு, கஸ்தூரிபாவுக்கும் கஷ்டமாய்த்தான் இருந்திருக்க வேண்டும்.

உதாரணமாக, "தோட்டி வேலை மிக இழிவானது; அதைச் செய்பவர் இழிந்த ஜாதியினராக இருப்பவர்!" என்ற தப்பான கொள்கையை மகாத்மா காந்தி மிகவும் வெறுத்து வந்தார். தாம் வசிக்கும் வீட்டையும் ஊரையும் சுத்தமாக வைத்துக் கொள்வது நம் எல்லோருடைய

கடமையாகையால், உயர் குலத்தோரும் அப்பணியை மேற்கொள்ள வேணும் என்பது மகாத்மாவின் கொள்கை.

தென் ஆப்பிரிக்காவில் இவருடைய இல்லத்தில் இவருடன்கூட இருந்தவர்களில் ஒருவர் ஹரிஜன குலத்தில் பிறந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர். இவர் காந்தியடிகளின் குமாஸ்தா. அந்தப் பிரதேசத்து வீடுகளில் பம்பாய்க் கக்கூஸ் கிடையாது. இரவில் படுக்கை யறைகளில் மலஜலச் சட்டி வைப்பது வழக்கம். காந்தியடிகளின் இல்லத்தில் வேலைக்காரர் ஏது? மகாத்மா அல்லது இவரது தர்ம பத்தினி கஸ்தூரிபா தான் அந்தச் சட்டிகளையும் சுத்தம் செய்வது வழக்கம்.

கஸ்தூரிபாவுக்குத் தம் கணவர், குழந்தைகள் இவர்களுடைய சட்டிகளைச் சுத்தம் செய்வதுபோல் அந்த ஹரிஜன குமாஸ்தாவின் சட்டியையும் மனமுவந்து சுத்தி செய்யக் கூடாமல் போயிற்றும். ஒரு சமயம் கண்கள் சிவந்து முத்து முத்தாய்க் கன்னங்களில் நீர் பெருகியோடச் சட்டியும் கையுமாக அவ்வேலையைச் செய்து கொண்டிருந்த கஸ்தூரிபாவை மகாத்மா கண்டு விட்டார்.

"இம்மாதிரி முரண்டுகளுக்கு என் வீட்டில் இடமில்லை. உனக்கு இவ்வேலைகள் பிடிக்காவிட்டால், இந்த வீட்டைவிட்டு வெளியே போய்விடு" என்று கடுமையாகக் கூறினராம். அதற்குக் கஸ்தூரிபா, "எனக்குத் தாய் தந்தையர் இல்லை. உங்கள் வீட்டை விட்டுத் துரத்தினால், நான் வேறு எங்கே போவது?" என்று அழுதுகொண்டே கேட்டாராம்.

அவருடைய அந்தப் பணிவான சொல், காந்தியடிகளின் மனசில் சுறுக்கென்று தைத்தது. தம் தவறு தலை இவர் உணர்ந்துகொண்டார். அதுமுதல் காந்திஜி கஸ்தூரிபாவை அம்மாதிரியான பணிகளைச் செய்யும்படித் தூண்டுவதில்லை. ஆனாலும் கஸ்தூரிபா தாமே மனமுவந்து முன்வந்து அவ் வேலைகளைச் செய்வது சகஜமாகிவிட்டது.

வேறொரு பயிற்சி

எக்காரணத்தினாலும் மாமிச உணவு, மதுபானம் இவை இரண்டும் செய்வது கூடாது என்பது மகாத்மாவின் மற்றொரு கொள்கை. வெகு சிரமப்பட்டு அதை விடாமல் இங்கிலாந்திலும் கைக்கொண்டு வந்தார். ஒரு சமயம் கஸ்தூரிபா பெரிதும் நோய்வாய்ப் பட்டிருந்தார். அப்போது, மாமிச ஆகாரம் கொடுத்தாலன்றி அவர் பிழைக்கமாட்டாரென்று வைத்தியர் கூறிவிட்டாராம். காந்தியடிகளுக்கு அது இஷ்டமில்லை.

கஸ்தூரிபாவுக்கு விஷயம் தெரிந்தது. அந்தத் துர்ப்பலமான நிலைமையிலும் அவர், "இந்த மனித சரீரம் கிடைப்பது அரிது. மாமிசம், மதுபானம் இவைகளை உட்கொண்டு இதை அசுத்தமாக்க நான் விரும்பவில்லை. இறந்தாலும் சரி, இருந்தாலும் சரி; இவ்விரண்டையும் நான் உட்கொள்ளமாட்டேன்!" என்று கூறிவிட்டாராம். மகாத்மாவுக்கு எவ்வளவு உண்மையான ஸஹதர்மிணி அன்னை கஸ்தூரிபா!

சத்தியாக்ரக வித்து

காந்திக்குச் சுய சிகிச்சையில் அபார நம்பிக்கை. சில சமயங்களில் பேர்போன டாக்டர்களின் வைத்தியத்தையும் தோல்வியுறச் செய்திருக்கிறார், தம் களிமண் சிகிச்சையினாலே. ஒரு சமயம் கஸ்தூரிபாவுக்கு இரத்தப் போக்கு அதிகம் உண்டாயிற்றாம். அதை நிறுத்த "உப்பு இல்லாத பத்தியம்தான் சரியான சிகித்ஸை" என்று காந்தியடிகள் தீர்மானித்தார்.

அதைக் கஸ்தூரிபாவிடம் மெள்ளப் பிரஸ்தாபிக்க, "என்னால் அந்தப் பத்தியம் இருக்கமுடியாது!" என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார் அம்மையார்.

ஆனால் இந்தக் கணவரா விடுபவர்? "ஏன் இருக்க முடியாது? இதோ பார். இன்றுமுதல் நான் உப்பை விட்டு விடுகிறேன்!" என்று சபதம் கூறினார். உடனே,

"ஐயோ! எனக்காக நீங்களும் அப்படிச் செய்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளவேண்டாம். நான் உப்பு இல்லாமலே சாப்பிடுகிறேன்!" என்று ஒப்புக் கொண்டாராம் கஸ்தூரிபா.

இம்மாதிரி மகாத்மாவின் பேர்போன சத்தியாக்ரக இயக்கத்தின் ஆரம்பம், முதல் முதல் வீட்டிலேதான் நடந்தது; அந்த இயக்கத்திற்குக் கிடைத்த வெற்றியும் கஸ்தூரிபாவின் பக்தியினுல்தான்—என்று மகாத்மாவே கூறியுள்ளார்.

கஸ்தூரிபாவின் சுதந்திர விருப்பம்

இவைகளைப் படிக்கும் நேயர்கள் அன்னை கஸ்தூரிபாவை 'வாயில்லாப் பூச்சி'—'பசு'—'எல்லாம் சகித்துப் போகும் சாது-சுபாவம் படைத்த ஒரு சாதாரண ஹிந்து ஸ்திரீ'—என்றெல்லாம் எண்ணக்கூடும். ஆனுல் அது முற்றிலும் தவறு.

மகாத்மா தம் சுய சரிதையில் தம் மனைவியைப் பற்றி எழுதும்போது பின்வருமாறு கூறியுள்ளார்: "என் உத்தரவின்றி எங்கும் வெளியே செல்லக்கூடாது—என்று ஒரு ஹிந்து-கணவனுக்கு இருந்த சகஜமான சலுகையோடு நான் என் அதிகாரத்தை என் மனைவி மீது செலுத்த விரும்பினேன். ஆனுல் அவள் நான் ஆட்டி வைக்கும் வெறும் மரப் பாவையாக இருக்க இசையவில்லை. தனக்குரிய சுதந்திரத்தை இழக்க விரும்பினுளில்லை. என் உத்தரவின்றியே கோவில் குளங்களுக்குப் போய் வந்தாள். இதன் காரணமாக எங்களுக்குள் சிற்சில சமயம் மனஸ்தாபங்கள் கூட ஏற்பட்டதுண்டு. சுத்தமான நடத்தையும், குற்றமற்ற மனப்பான்மையுமுடைய சிறுமி ஒருத்தி சுயேச்சையாக உலாவி வருவது தவருகாது என்று பின்னுல் உணர்ந்து கொண்ட நான், அவளைக் கட்டுப்படுத்த முயன்றதற்காக வருந்தினேன்."

தாயன்பு

பதிபக்தியைப்போல், அன்னை கஸ்தூரிபாவின் தாயன்பும் விசேஷமாய்க் குறிப்பிடத் தக்கது. அவரது மூத்த புதல்வர் ஹரிலால் மகமதிய மதத்தைத் தழுவின போது, அன்னை கஸ்தூரிபா விடுத்த அறிக்கை ஹரிலாலின் ஹிருதயத்தை அப்படியே உருக்கிவிட்டது. அந்த அறிக்கையின் பயனாக அவர் ஹிந்து சமயத்திற்குத் திரும்பியது நாடறிந்த செய்தி. அத்தகைய அற்புதம் நிகழ்த்திய தாயன்பு அந்நாளில் பொதுமக்களின் உள்ளத்தையும் பெரிதும் கவர்ந்தது.

வழிகாட்டியாகிறார்

அன்னை கஸ்தூரிபா படித்தவரில்லை என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன். ஆனாலும் அவர் தமக்கு இருக்கும் அனுபவ ஞானத்தைக்கொண்டு பெரிய மேதாவிகள் முன்னிலையிலும் சமயோசிதமாக நடந்து கொள்ளும் சாமர்த்தியம் வாய்ந்தவர்.

தூய கதராடை உடுத்திச் சற்றும் சோம்பலில்லாமல் அவர் ராட்டுக்குமுன் வீற்றிருந்து நூல் நூற்கும் காட்சி, இந்தியப் பெண்மணிகளில் ஒவ்வொருவரும் காணத் தகுந்தது.

பதிபக்திக்கும், தாயன்புக்கும், சோம்பலின்மைக்கும், வீட்டுக் காரியங்களைச் செய்யும் திறமைக்கும், அடக்கமான சரள சுபாவத்திற்கும், ஸ்ரீமதி கஸ்தூரிபா தற்கால இந்திய ஸ்திரீகளுக்கெல்லாம் ஒரு சிறந்த வழிகாட்டியாகிறார்.

அன்னையின் மூன்று குறைகள்

ஒரு சாதாரண ஸ்திரீயாக இருந்தால், சுகபோகம் இல்லை!—என்று முணுமுணுக்கலாம். வைரக் கம்மல் இல்லையே; பட்டுப்புடவை இல்லையே; பெரிய மனை இல்லையே: கைகால் பிடிக்கத் தாதிமார் இல்லையே!—என்றெல்லாம் குறைப்படலாம். வயிற்றில் பிறந்த பிள்ளை

ஒருவனாவது ஐ. ஸி. எஸ். உத்தியோகம், உயர்ந்த பட்டம் பதவி, பெற்றிருக்கிறானா? அதுவும் இல்லையே!—என்றாவது குறைப்படத் தோன்றும்.

அன்னை கஸ்தூரிபா தனக்காகக் குறைப்படவில்லை; தன்வயிற்றில் பிறந்த மக்களுக்காகக் கவலைப்படவில்லை; தன்னுடைய தேசமக்களுக்காகவே பாடுபட்டார்.

நாற்பது கோடி மக்களில் அரைவயிறு - அன்னம் கிடைக்கப் பெறுகிறவர்கள் எத்தனை பேர்? கூரைக் குடிசைகளிலாவது பசிப்பிணி யில்லாமல் வசிப்பவர் எத்தனை பேர்? குடிக்கக் கூழும், உடுக்க உடையும் இன்றிப் பரிதவிக்கும் இந்தியத் தாயின் எண்ணற்ற மக்களை எண்ணி எண்ணிப் பரிதவித்தார்; ஏங்கி ஏங்கிப் பணி செய்தார் கஸ்தூரிபா.

மற்றொரு குறை மனஸிலே. நெடுநாளாகத் தீராத குறை. அது என்ன? வனவிலங்குகளும் சுயேச்சையாகத் திரிகின்றனவே! ஆனால் இந்திய நாட்டின் ஏழைமக்கள் மட்டும் சுதந்திரம் அற்றுக் கிடக்கிறார்களே! வறுமைப் பிணிக்கும் சுதந்திர மின்மை ஒரு முக்கிய காரணமல்லவா? இந்தத் துயரமும் கஸ்தூரிபாவின் உள்ளத்தை வாட்டிக் கொண்டிருந்தது.

தம் கணவருக்காகவே,—அவருடைய சிறை வாழ்வை உன்னியே,—அந்தப் பதிவிரதா சிரோமணி கடைசிவரை வருத்தப்பட்டார் என்று நினைக்கிறவர்களும் இருக்கலாம். ஆனால் கடைசிவரை அவர் மனத்தை வாட்டிய மாபெருங் குறை நாட்டைக் குறித்ததே என்று நிச்சயமாக நான் சொல்லுவேன்.

மூன்றாவதாக ஒரு அலாதிக் குறை. என்ன? நம் அன்னையை அந்தக் காலத்திலே பள்ளிக்கு அனுப்பிப் படிக்கவைக்க வில்லையாம் அவருடைய பெற்றோர். ஆகவே, பள்ளிக் கல்வி கற்கவில்லையாம்.

ஆனால் இது ஒரு பெருங்குறையாகவா காணப்பட்டது நம் அன்னையிடம்? பரம்பரைப் பண்பாடும் கேள்வி-

ஞானமும் நிறைந்த அந்த ஸ்திரீ ரத்தினத்திற்கு,—ஸீதை, ஸாவித்ரிக்கு ஒப்பான ஸதீமணிக்கு,— இது ஒரு குறை யாகுமா ?—என்று கேட்கலாம் வாசகர்கள்.

அவருடைய மஹாத்மாவின் குற்றச்சாட்டு இது. "என் கஸ்தூரிபா படித்தவர் இல்லை !" என்று முதல் முதல் குறைப்பட்டவர் அவர்தான். பின்னால் அன்னை மனத்திலும் அது உறுத்தலாயிற்று.

அதற்குக் காரணம், தன் பெயரைத் தொடர்ந்து 'பி.ஏ., எம். ஏ.' என்ற எழுத்துக்கள் ஜொலிக்கவில்லையே என்பதா ? தன்னை யாவரும் நல்ல படிப்பாளி, கலா பண்டிதை என்று மெச்சவில்லையே என்ற குறை பாடா ? மேடைப் பிரசங்கங்கள் சரமாரியாகப் பொழிய முடியவில்லையே ! — என்ற கவலையா ? அவை யெல்லாம் இல்லை. மஹாத்மாவின் மனைவி, ஸஹதர்மிணி, படித்தவர் இல்லை என்று உலகம் சொல்லவா ? தேச மக்களின் பூர்ண ஸேவைக்குக் கல்வியறிவும் கலை யறிவும் துணை செய்தால், பொன்மலர் மணம் பெற்றது போலிருக்குமே !

"இவை இரண்டையும் நான் போதுமான அளவு பெற்றிருந்தால், இந்திய மக்களுக்கு என் உழைப்பு இன்னும் பன்மடங்கு பயன் பட்டிருக்கும் அல்லவா ?" என்று அடிக்கடி எண்ணினார் நம் அன்னை கஸ்தூரிபா.

வாசகர்களே ! அன்னையின் வாழ்க்கையிலுள்ள மூன்று குறைபாடுகளை உங்கள் காதில் போட்டுவிட்டேன். இனி உங்கள் கடமையைச் சொல்லவும் வேண்டுமா ?

ஒரு கதை ; சிறுவர்களுக்கும் தெரிந்ததுதான். ஒரு ராஜாவின் தாயார் ஒரு சமயம் மாம்பழத்திற்கு ஆசைப்பட்டாராம். மாம்பழம் கிடைக்குமுன்னே அவர் இறந்துவிட்டார். தங்க மாம்பழங்களைச் செய்வித்துத் தானம் செய்தாராம் ராஜா, தம் அன்னையின் ஆத்மா சாந்தி அடையட்டும் என்று.

இந்தக் கதையின் பிற்பகுதி—மூட நம்பிக்கைகளைக் கண்டிக்கும் அந்தப் பகுதி—நமக்கு இங்கே தேவையில்லை. அன்னை கஸ்தூரிபாவின் குறைகளை அந்த ராஜாவைப் போல் தீர்த்துவைக்க வேண்டுமென்றால், அன்னையின் அந்த மனக்குறைகளுக்கு இனி இந்த நாட்டில் இடமில்லாமலே செய்துவிட வேண்டும். அப்போதுதான் அன்னையின் ஆத்மாவுக்குச் சாந்தி ஏற்படும்.

அவர் ஆத்மா சாந்தி அடையவில்லை என்றால், வேறு எவருக்குச் சாந்தி கிடைக்கும்?—என்று கேட்கலாம். இப்பூவுலகில் தம் கடமை முழுதும் செய்து கரை கண்டவர் அந்த அம்மையார் அல்லவா? உண்மைதான். ஆனால் அவருடைய ஆத்மா இந்தியாவின் ஆத்மாவோடு கலந்து விட்டது. இந்தியாவின் ஆத்மா தன் குறைகள் நிறை செய்யப் பெற்றுச் சாந்தி அடைந்தால்தானே, அன்னை கஸ்தூரிபாவின் ஆத்மாவுக்கும் சாந்தி?

இமாலயம் முதல் கன்யாகுமரிவரை அவருடைய தூய வாழ்க்கை நாற்பதுகோடி மக்களின் ஹிருதய ஸிம்மாஸனத்தைக் கோயிலாகக் கொண்டுவிட்டது. அவர் புகழுடம்பு நமக்கிடையே உலாவிக்கொண்டிருக்கிறது. அந்தக் கனிந்த உள்ளம், நம் மனவிழிகளுக்குத் தெளிவுறத் தென்படுகிறது. கங்கையும் காவேரியும் ஓடும்வரை, அவருடைய பெயர் நிலைத்திருக்கும் என்று தோன்றுகிறது, தேச பக்தர்களுக்கு. அதுபோலவே அவர் குறைபாடுகளும் நிலைத்திருக்க வேண்டுமா?

அவை நம்முடைய குறைபாடுகளாகி விட்டன இப்போது. அவற்றை ஒழிப்பது பாரத அன்னையின் மக்களாகிய நம்முடைய கடமையாகும்.

பாரத நாட்டுப் பெண்கள் அனைவரும் போதுமான அளவிற்குக் கல்வியறிவு பெற்றுவிட்டனர் என்று நம் வருங்காலச் சரித்திரம் கூறுமானால், "நான் படிக்கவில்லையே!" என்றிருந்த அந்த அன்னையின் ஏக்கத்தை நீக்கிவிட்டதாக நாம் பெருமை அடையக்கூடும்.

தம் மக்கள் பெறும் பேற்றைத் தாம் பெற்ற பேறு என்று எண்ணி மகிழாத தாயுள்ளம் உண்டோ? தேச சரித்திரத்தில் பொன்னெழுத்தால் பொறிக்கக்கூடிய இந்த நம் கல்விப் பணி பாரத அன்னைக்கு எவ்வளவோ ஆறுதல் அளிப்பதோடு, அந்த அன்னையோடு கலந்து விட்ட அன்னை கஸ்தூரிபாவுக்கும் ஆறுதல் அளிக்கும் என்று நம்புவது மூட நம்பிக்கை ஆகுமா?


11. காந்தி பக்தர்களைச் சந்தித்தது

நாங்கள் (ஸ்ரீ ஜானம்மாவும் நானும்) வர்தா ஆச்ரமத்தில் இருந்தபொழுது மகாத்மாவின் பக்தர்களான பல சகோதர சகோதரிகளை நேரில் கண்டு அவர்களோடு பேசிப் பழகுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர்களில், அரசியல் - துறையிலன்றி மற்றத் துறையிலே எங்கள் மனசைக் கவர்ந்த ஐவரைப் பற்றி இங்கே இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பிரபாவதி பேன்

பிரபாவதி பேன் (பேன்=சகோதரி) ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயண் தர்ம பத்தினி. கணவரின் அரசியல்-கொள்கைகள் மகாத்மாவின் கொள்கைகளோடு முரண்பட்டிருந்தும், இந்தச் சகோதரிக்கு மகாத்மாவிடம் அபார பக்தி உண்டு. சிறு பிராயமுதல் சாபர்மதி ஆச்ரமத்தில் அடிக்கடி வந்து தங்குவது வழக்கமாம். இவர் அடிக்கடி வர்தாவுக்கும் வந்து மகாத்மாவுடன் தங்கியிருப்பார்.

அப்பொழுதெல்லாம் மகாத்மாவுக்குச் செய்யவேண்டிய ஸேவைகளை இவரே செய்து வருவார். கஸ்தூரிபா இல்லாதபோதெல்லாம் இவரே மகாத்மாவின் உணவுப் பொருள்களைத் தயாரிப்பார். காலை 4-30 மணி முதல் இரவு 9 மணி வரை கொஞ்சமும் சோம்பலில்லாமல் பதற்றமின்றி நிதானமாக எல்லா அலுவல்களையும் இவர்



'அம்துல் ஸலாம் ஒரு முஸ்லிம் சகோதரி; மகாத்மாவின் பரம பக்தை'—(பக்கம் 61)—எல்லைப்புறக் காந்தி.



‘பிறந்த நாடு, சொத்து, சுற்றம் யாவற்றையும் துறந்து, இந்திய மக்களுக்குச் சேவை செய்ய மகாத்மாவிடம் வந்து சேர்ந்த’ மீராபேன்—(பக்கம் 63)

செய்து வருவது எங்களுக்கு வியப்பை உண்டாக்கும். ஒரு மூட்டை கதர்த் துணிகளைக் கிணற்றங்கரையில் தோய்ப்பார். மெல்லிய இளைத்த சரீரம். எனினும் வேலைப் பாரம் தெரியாமல் பம்பரமாகச் சுழன்று ஆச்ரமத்தில் தம் அலுவல்களைக் கவனிப்பது இவர் சுபாவம்.

"உங்களுக்கு இவ்வளவு வேலை செய்வது சிறிதும் சிரமமாகத் தென்படவில்லையே. எங்களுடைய ஒரு புடவையையே எங்களால் தோய்த்துக்கொள்ள முடியவில்லையே" என்றேன். அதற்கு இவர், "நான் கிராமத்துப் பெண். கிராமத்திலே பிறந்து கிராமத்திலே வளர்ந்தவள். என் கையைப் பாருங்கள்: இக்கையில் எவ்வளவு பலம் இருக்கிறது!" என்றார். அது கேட்ட எனக்கு, "ஏன்தான் நாமும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தோமில்லை!" என்றிருந்தது.

அம்துல் ஸலாம்

அம்துல் ஸலாம் ஒரு முஸ்லிம் சகோதரி; மகாத்மாவின் பரம பக்தை. ஆச்ரமத்தில் சதா மகாத்மாவின் நிழலில் இருப்பார். குர்-ஆனைப் படிக்கவேண்டிய சமயங்களிலெல்லாம் காந்திஜி இவருடைய உதவியையே நாடுவார்.

சதா நோய்பிடித்த உடம்பு. எல்லோருக்கும் ஏகாதசி மாதம் இரு முறையென்றால், இவருக்கு மாதத்தில் 15 நாள் ஏகாதசிதான். பட்டினி போட்டே உடம்பை வாட்டுவார். அந்தக் கடும் பட்டினி-தினங்களிலும், ஆச்ரமத்தில் தம்முடைய பங்குக்கு உரிய வேலைகளைச் செய்யத் தவறமாட்டார். அவற்றைப் பிறர் செய்வதாக வற்புறுத்தினாலும் விடமாட்டார். அந்த வேலைகளைச் செய்வதில் இவருக்கு ஒரு அலாதிப் பெருமை, ஒரு தனித் திருப்தி.

எப்பேர்ப்பட்ட வேலைகள் தெரியுமா? மிகவும் தாழ்ந்தவை என்று சாதாரணமாய்க் கருதுகிறார்களே, அப்படிப்பட்ட வேலைகள், — மகாத்மா உபயோகிக்கும்

சட்டிகளை, பாத்திரங்களைக் கழுவுவது, அறை கூட்டுவது, ஸ்நானத்திற்குத் தண்ணீர் நிரப்புவது முதலியன. ஆச்ரமத்துக் கக்கூஸ்களைச் சுத்தம் செய்வதும் இவர் மனம் உவந்து செய்துவந்த வேலைகளில் ஒன்று.

ஒரு ஹிந்து ஆச்ரமத்திலே ஒரு ஹிந்து மஹானின் நிழலிலே இந்து ஜனங்களிடையே வசித்து வந்தாலும் இந்த முஸ்லிம் சகோதரி, தம் இஸ்லாம் சமயத்தை மறந்தவரில்லை, அதன் கொள்கைகளைக் கையாளத் தவறியவரில்லை. ஆச்ரமப் பிரார்த்தனையில் கலந்துகொண்டவரானாலும் நமாஸ் படிப்பார். ரம்ஜான் தினங்களில் 'ரோஜா' விரதம் கொள்வார். ஈத் பிறைச்சந்திரனைக் காணாது உணவு கொள்ளார். கோஷா பாராட்டமாட்டாரெனினும், வெளியே செல்லும்போது முஸ்லிம் சகோதரிகளுக்குள்ள ஒரு தனி லஜ்ஜையுடன் தலை முக்காடிட்டு, அடக்கத்துடன் நடப்பார்.

தம் நோயுடன், ஆச்ரமத்திலுள்ள பிற நோயாளிகளுக்கும் பணி செய்வதில் இவருக்கு விசேஷப் பிடித்தம். இந்த முஸ்லிம் சகோதரியின் அருமையான குணங்களை என்னால் மறக்கவே முடியவில்லை.

இவ்விதம், ஆச்ரமத்தில் உள்ள பல மதஸ்தர்களும், தத்தம் மதத்தின் முக்கியமான கோட்பாடுகளைக் கைவிடாது அனுசரித்துவந்தும், பரஸ்பர மதத்துவேஷ மனப்பான்மையில்லாமல், அனைவரும் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்போல, ஒரு இனத்தைச் சேர்ந்தவர்போல, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல, கூடி வசித்து வந்தது, மகாத்மாவிடமுள்ள ஓர் அபூர்வ ஸமரஸ சக்தியை வெளிப்படுத்துகிறதல்லவா? நம் தாய் நாடு முழுவதும் காந்தி ஆச்ரமம்போல் ஆகுமானால்,—ஸர்வ மத ஸஹோதர தர்மமும் ஸர்வஜன ஸஹோதர தர்மமும் ஏற்படுமானால்?

இந்த ஜாதிப்பூசல், சமயத் துவேஷம், ஏழை பணக்கார வித்தியாசம், நிற பேதம், வகுப்புப் பிணக்கு, இவைகளினால் அல்லற்படும் தேசம் கதிமோக்ஷம் அடைவதற்கு இந்த ஆச்ரம வாழ்க்கை ஒரு சிறந்த வழிகாட்டியல்லவா?

மீராபேன்

மகாத்மாவின் ஆங்கில பக்தர்களில் ஒருவரான மீராபேன் என்பவரை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இவருடைய பெயரும் மகத்தான தியாகமும் அகில இந்தியப் பிரசித்தி பெற்றிருப்பதுடன், உலகப் பிரசித்தியும் பெற்றிருக்கின்றன.

இவர் இங்கிலாந்தில் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். பிரிட்டிஷ் கப்பற்படைத் தலைவரான ஓர் ஆங்கில கனவானின் அருமைப் புதல்வி. மிஸ் ஸ்லேட் என்பது இவருடைய பூர்வீகப் பெயர். மிஸ் ஸ்லேட் மீராபேன் ஆன தியாகக் கதை, பழைய ராஜபுத்திரியான மீராபாயி ஸ்ரீ கிருஷ்ண பக்தையான புண்ணிய சரித்திரத்தை ஞாபகப்படுத்துகிறது.

மகாத்மாவைக் கிறிஸ்துவின் அவதாரமாகவே போற்றி இவரிடம் பக்திபூண்டு, தாம் பிறந்த நாடு, சொத்து, சுற்றம் யாவற்றையும் துறந்து, இந்திய மக்களுக்குச் சேவை செய்ய மகாத்மாவிடம் வந்து சேர்ந்தவர். மகாத்மாவின் சிஷ்யைகளில் முதன்மை ஸ்தானம் பெற்றவர். மகாத்மாவின் எல்லாக் கொள்கைகளையும் வழுவாது கடைப்பிடித்தவர்.

நான் வர்தாவுக்குச் சென்றபோது இவர் அங்கே இல்லை. தேக ஆரோக்கியத்திற்காக இங்கிலாந்துக்கு மகாத்மாவால் அனுப்பப்பட்டிருந்தார். ஆகையால் இவருடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்கு அதிகம் கிடைக்கவில்லை. எனினும் இவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் வாய்க்காமலில்லை. நாங்கள் ஊர் திரும்புவதற்குச் சில தினங்களுக்கு முன்பே இவர் இங்கிலாந்திலிருந்து திரும்பிவிட்டார்.

இவர் வரும்போது இவருடன், எல்லைப்புறக் காந்தி கஃபர்க்கானின் ஒரே மகளையும் கூட்டிக் கொண்டு வந்திருந்தார். அந்தப் பெண் இங்கிலாந்திலே ஒரு போர்டிங் ஸ்கூலில் படிப்பிற்காக விடப்பட்டிருந்தாள். அவளுக்குத் தாயாரில்லை. பெயர், மெஹர் தாஜ்.

அவள் ஆங்கிலேயர் முறைப்படி வளர்க்கப்பட்டிருந்தாள், பழக்க வழக்கங்கள் எல்லாம் ஆங்கிலேயர் பழக்க வழக்கங்கள் போலவே யிருந்தன. அவளுக்கு அப்பொழுது வயது பன்னிரண்டு. ஆங்கிலத்தில் அழகாகப் பேசுவாள். ஹிந்தி வராது. அவளுடைய தாய் பாஷயாகிய புஷ்துவில் சில வார்த்தைகள் பேசத் தெரியும்.

அவளை ஆச்ரமத்து நியமங்களில் பழக்குவது மீரா பேனின் பொறுப்பாயிற்று. மூன்றே தினங்களில் மீரா பேன் அந்தப் பெண்ணை முற்றிலும் மாற்றிவிட்டார். கௌனுக்குப் பதில் பாவாடை - தாவணி அணிவித்தார். காலை 4-30-மணிப் பிரார்த்தனைக்கு எழவும், நூல் நூற்கவும், ஆச்ரமத்து உணவுகளையே உண்ணவும் பழக்கினர். ஹிந்தியும் கற்பித்தார். ஆச்ரமத்துச் சமையல் ஒத்துக் கொள்ளாமல் போகவே ஸ்ரீமதி ஜானம்மாள் தயாரித்த உணவை அந்தப் பெண்ணுக்கும் அளிக்கும்படி மகாத்மா உத்தரவிட்டார்.

ஒரு தாயைப்போல் அன்புவைத்து அந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டார் ஸ்ரீமதி மீராபேன். அதன் மூலம் அந்தப் பெண்ணுக்கும், தந்தை க்கான் ஸாஹிபுக்கும் மீரா பேன்மீது விசேஷ மதிப்பு. அந்தப் பெண் ஊருக்குப் போகும்போது, மீராபேனும் தன்னுடன் வரவேணுமென்று வெகுவாகக் கேட்டுக் கொண்டாள். எனினும் ஆச்ரமத்தை விட்டுப்போகச் சம்மதிக்கவில்லை ஸ்ரீ மீராபேன்.

நல்ல உயரமான ஆகிருதி, புஷ்டியான சரீரம்—தூய வெள்ளைக் கதர்ப்புடவை உடுத்தியிருப்பார் குமாரி மீரா பேன். பார்வைக்கு ஒரு இந்து ஸ்திரீபோலவே தோன்றுவார். ஆங்கில மாது என்று சொல்லவே முடியாது. காந்திஜியின் விருப்பப்படி, தலையைப் பூராவும் க்ஷவரம் செய்து கொண்டிருந்தார். ஆச்ரமத்துச் சாப்பாடுதான் உட்கொள்வது—அந்த முரட்டு ரொட்டிதான். வேலைகளோ, அபாரமாகச் செய்வார். நிமிஷ நேரமும் வம்புப் பேச்சில் போக்காமல், ஆச்ரமத்து வேலைகளில் ஈடுபட்

டிருப்பார். மஹாதேவ் தேஸாயி இராதபோது, மகாத்மாவின் கடிதப்போக்கு வரத்துகளைக் கவனித்துக் கொள்வார். ஆச்ரயத்து நியமங்களைக் கடுகளவும் பிசகாமல் பரிபாலித்து வருவார். ஆகையால் இவரைக் கண்டால் எல்லோருக்கும் சற்றுப் பொருமைதான்! ஆனால் எப்பேர்ப்பட்ட வசிகரமான பொருமை! இவருடைய அன்பு, மகாத்மாவிடம் இவருக்குள்ள பக்தி, இவை எல்லோரையும் வசீகரிக்கத்தான் செய்தன.

ராஜகுமாரி அமிர்த கௌர்

நான் வர்தாவில் இருந்தபோதுதான் ராஜகுமாரி அமிர்த கௌர் மகாத்மாவைச் சந்திக்க ஆச்ரமத்திற்கு வந்தார் முதல் தடவையாக.

அமிர்த கௌர் ஒரு ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்; விவாகமாகாதவர். இவர் முன்னோர் இந்துக்களெனினும், சில தலைமுறைகளாகக் கிறிஸ்து மதத்தைத் தழுவியவர்கள். இவர் தந்தையார் தம் அருமை மகளை இங்கிலாந்துக்கு அனுப்பி அங்குள்ள கல்லூரியில் படிக்கவைத்தார். எனவே அமிர்த கௌர் நடையுடை பாவனைகளில், எல்லா விதத்திலும் மேலை நாட்டு நாகரிக ஆசாரங்களைக் கைக்கொண்டார்.

இவர் தமது அந்தஸ்துக்கு ஏற்ற உயர்ந்த பட்டாடைகள், தாதி, பரிசாரகன் முதலிய வைபவங்கள் சூழ வந்தார். இவருடைய மாமா கைலாகு கொடுக்க, துவண்டு விழும் அல்லிக் கொடியென மெல்ல நடந்து, மேல்மாடியில் நாங்கள் இருந்த ஹாலுக்குள் வந்து சேர்ந்தார்.

காந்தியடிகளும் வெகு மரியாதையுடன் வரவேற்றுப் பேசினர். இரண்டு மூன்று நாள் வர்தாவில் தனி ஜாகையில் இருந்துகொண்டு, பிரார்த்தனைகளுக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்.

ஸேவாக்கிராம ஆச்ரமத்திலே இவரை நான் மறுபடி பார்த்தபோதோ, — ஆஹா, என்ன மாறுதல்! அந்த வாழக்கையில் ஒரு புரட்சியே வந்துவிட்டது. சாதாரண

முரட்டுக் கதர்ப் புடவை உடுத்திக்கொண்டு, தாமும் ஆச்ரம வாசிகளில் ஒருவராகிவிட்டார். ஆச்ரமத்துச் சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். வெட்ட வெளியில் மைதானத்திலே மற்ற ஆச்ரம வாசிகள் போல் தரையிலே படுக்கை விரித்துப் படுத்துக்கொண்டும், மற்ற ஆச்ரம நியமங்களுக்கு உட்பட்டும், தூய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். மஹாதேவ தேஸாயியின் அலுவல்களை யும் தாம் மேற்கொண்டு சதா மகாத்மாவின் பக்கத்தி லிருந்து கடிதப்போக்கு வரத்துகளையும் கவனித்து வந்தார்.

முன் பார்த்த அமிர்த கௌருக்கும் இப்போதுள்ள அமிர்த கௌருக்கும் எவ்வளவு வித்தியாசம்! புனர் ஜன்மம் எடுக்காமலே புதிய பிறவி பெற்றுப் புது வாழ்வு வாழும்படி செய்யவல்ல ஸித்தரல்லவா மகாத்மா?

ஜம்னுலால் பஜாஜ்


ஜவாஹர்லால் நேரு காந்தியடிகளுக்குப் பின்னுல் அரசியல் - ஸிம்மாஸனத்துக்கு உரியவர்—என்பது பலரும் அறிந்த விஷயம். மகாத்மாவும் ஜவாஹரை 'மனிதருள் மாணிக்கம்' என்று சொல்லியிருக்கிருர். நேருவைக் காந்தி யடிகளின் ஞான புத்திரர் என்ருல், காலஞ்சென்ற ஸேட் ஜம்னுலால் பஜாஜை மகாத்மாவின் ஸ்வீகார புத்திரர் என்றே சொல்லத் தகும்.

ஆனுல் இதில் ஒரு விநோதம். தகப்பன்தான் பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வதை நாம் சாதாரணமாய்ப் பார்த்திருக்கிருேம். பஜாஜ் விஷயத் திலோ, பிள்ளையே முன்வந்து தகப்பனை ஸ்வீகரித்துக் கொண்ட கதைதான்!

கம்ப ராமாயணத்திலே தசரத சக்ரவர்த்தி, யாகத் தால் நாலு பிள்ளைகளையும், தியாகத்தால் மூன்று பிள்ளை களையும் ஆக மொத்தம் ஏழு பிள்ளைகளையும் பெற்றதாகக் குறித்திருக்கிறது. குகன், சுக்கிரீவன், விபீஷணன் ஆகிய மூவரும் தசரதர் ராமனைக் காட்டுக்கு அனுப்பிய தியாகத் தால் பெற்ற பிள்ளைகளாம். இம் மூன்று பிள்ளைகளிலும்



'முன் பார்த்த அமிர்த கௌருக்கும் இப்போதுள்ள அமிர்த கௌருக்கும் எவ்வளவு வித்தியாசம்! புனர் ஜன்மம் எடுக்காமலே புதிய பிறவி பெற்றுப் புது வாழ்வு வாழும்படி. செய்யவல்ல ஸித்தரல்லவா மகாத்மா?' (பக்கம் 66)



'குஷ்டரோகி...ஹரிஹரநாத பாசுரே சாஸ்திரி...அவருடன் ஸம்ஸ்கிருத நூல்களைப் பற்றிச் சர்ச்சை செய்துகொண்டே தம் கையாலேயே அவருக்கு எண்ணெய் தேய்த்து உடம்பு பிடித்து விடுவார்' [மகாத்மா] (பக்கம் 69–70)

குகன், சுக்கிரீவன் என்ற இருவரையும் ராமனே நேரில் போய்த் தந்தை பெயரால் ஸ்வீகரித்துக்கொண்டான். கடைசிப் பிள்ளையான விபீஷணனே, தானே ராமனுக்கு முன் வந்து, அவனை அண்ணனாகவும் தசரதரைத் தகப்பனாகவும் ஸ்வீகரித்துக் கொண்டான் -- என்பது கம்பன் சொல்லும் கதை.

கம்பனைப் படித்ததில்லை ஸ்ரீமான் பஜாஜ். எனினும் விபீஷணனின் ஸாத்விக உணர்ச்சியோடு ஸ்ரீ பஜாஜ் ஒரு சமயம் மகாத்மா காந்தியின் முன்னிலையில் போய் நின்று கொண்டு, "என்னைத் தங்களுடைய புத்திரனாகக் கொள்ள வேணும்" என்று வேண்டிக் கொண்டாராம். மகாத்மாவும் அதற்கு உடன்படவே, இவரை அப்படியே தமது ஸ்வீகாரத் தந்தை ஆக்கிக்கொண்டுவிட்டார் பஜாஜ். அது முதல் மகாத்மாவின் யோக க்ஷேமம் இந்தப் 'பிள்ளையாண்டானு'டைய பொறுப்பாகிவிட்டது.

ஸ்ரீ பஜாஜின் அழைப்புக்கு இணங்கியே மகாத்மா ஸாபர்மதியை விட்டபிறகு வர்தாவுக்கு வந்து சேர்ந்தார். அது முதல் மகன்வாடியில் பஜாஜின் பங்களாக்களும், தோட்டங்களும், மகிலாச்ரமக் கட்டடங்களும், மகாத்மாவுக்கும் இவருடைய பரிவாரங்களுக்கும் சொந்தமாகி விட்டன. ஏன்? பஜாஜ் தம்பதிகளும் அவர்களுடைய குடும்பமுமே இவருடைய சொத்தாகி விட்டார்கள்!

"அடியார்க்கும் அடியேன்" என்று பெரியோர் சொல்லுவதுண்டல்லவா? ஸ்ரீ பஜாஜும் மகாத்மாவுக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் வேண்டியவராகி விட்டார். அந்தப் பிரபுவின் வரம்பில்லாத வள்ளன்மையினால் அநேக காந்தி ஸ்தாபனங்கள் நடைபெற்று வந்தன. அந்த வள்ளன்மையினால்தான் அந்த ஸ்தாபனங்கள் காந்தி சிஷ்யர்கள் பலருக்கும் அடைக்கலமாகவும் இருந்தன. தென் இந்தியாவரை அந்த வண்மை பரவி விட்டது.

ஸ்ரீ பஜாஜ் அடிக்கடி என்னை நோக்கி அன்புடன் சொல்லியிருக்கிறார்: "நீ மகாத்மாவைத் தரிசிக்க விரும்பும்

போதெல்லாம் இங்கே வந்துவிடு. முன்னாடி ஒரு தந்தி மட்டும் எனக்கு அனுப்பிவிட்டால் போதும். உனக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் நான் செய்து கொடுக்கிறேன். வேணுமானால் நீ என் பங்களாவிலேயே தங்கியிருக்கலாம். என்னுடைய பெண்களான உமாவும் மதாலஸாவும் உன்னுடைய வசதிகளைக் கவனிப்பார்கள்.''

இத்தகைய வண்மைதான் புத்திர பாவத்துடன் ஒரு கிராமத்தை அர்ப்பணம் செய்துவிட்டது மகாத்மாவுக்கு,—இவர் வர்தாவை விட்டுக் கிராமம் செல்ல விரும்பியதும்.

12. ஸேவாக் கிராம நினைவுகள்

இம்முறை மகாத்மா காந்தியின் தரிசனம் ஸேவாக் கிராமத்தில் கிடைத்தது. *ஸ்ரீமதி குமுதினியுடன் பார்க்கப் போயிருந்தேன்.

பழைய நினைவுகள்

மகாத்மா ஒரு சிறு குடிசையில் வசித்து வந்தார். மண் சுவர் எழுப்பிக் கூரை வேய்ந்த குடிசை. மெழுகிய மண் தரை. ராமன் சீதையுடன் பஞ்சவடியில் இதுபோன்ற பர்ணசாலையில்தான் வாஸம் செய்து வந்தான்—என்று ஞாபகப்படுத்திக் கொண்டேன்.

மண் சுவரானாலும் ஒருவித வெள்ளை நிற மண்ணாக இருந்ததால், பளிங்குச் சுவர்போல் வெண்மையாக மழமழப்பாய்ப் பிரகாசித்தது. அக்குடிசையின் உட்புறச் சுவரை அலங்கரித்தது, ஸ்ரீமதி மீராபேன் எழுதிய சித்திர வேலைப்பாடு.

---

* தமிழ் நாட்டிலே பிரசித்தமான பெண் - எழுத்தாளர். 'கொனஷ்டை' என்ற பெயரிலே ஒளிந்துகொண்டு தமிழர்களுக்கு உயர்தர ஹாஸ்ய விருந்துகள் அளித்து வரும் எழுத்தாளரின் புதல்வி.

சுற்றிலும் சில கல்லுக் கட்டடங்களும் இருந்தன. ஆனால், அவை அதிதிகளின் உபயோகத்திற்காகவேயன்றி, மகாத்மாவின் உபயோகத்திற்கு அல்ல.

மகாத்மாவுக்கு அப்பொழுது சற்றும் அவகாசம் இல்லை. அலுவல்கள் அதிகமாக இருந்தன. இஷ்டப்பட்டவர்கள் தனிப்பட்ட நிலையில் ஸத்தியாக்கிரகம் தொடங்கப் போகும் சமயம். நாங்கள் (குமுதினியும் நானும்) இங்கே இரண்டுநாள் தங்கினோம்.

குஷ்டரோகிக்குக் கைங்கரியம்

ஆச்ரமத்தில் அரசியல் சம்பந்தமாக மகாத்மாவுடன் கலந்து ஆலோசிக்க, பல பிரமுகர்கள் வந்து போய்க் கொண்டிருந்தனர். அத்தகைய அலுவல்கள் எவ்வளவு இருப்பினும், மகாத்மா ஆச்ரமத்தைச் சார்ந்த சில அலுவல்களைக் கவனிக்கத் தவறுவதில்லை. இவர் தமது பல அலுவல்களுக் கிடையே, ஒரு குஷ்டரோகியைப் பிரதி தினமும் காலையில் கவனித்துப் பணி செய்துவந்தது எங்கள் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது.

ஆச்ரமத்துக்கு ஒரு பர்லாங்கு தூரத்தில் ஒரு சிறு குடிசையில் அந்தக் குஷ்டரோகி வசித்து வந்தார். அவர் ஒரு மகாராஷ்டிர பிராம்மணர், ஸம்ஸ்கிருத பண்டிதர்: ஹரிஹரனுத பரசுரே சாஸ்திரி என்று பெயர். மகாத்மாவின் சமீபத்தில் வசித்து வந்தால் இவருடைய ஆத்ம சக்தியின் மூலம் தாம் இந்தக் கொடிய நோயின் பாதையிலிருந்து மனச்சாந்தி பெறலாம் என்று எண்ணி அதன் படியே தம் விருப்பத்தைக் கடிதமூலம் மகாத்மாவுக்குத் தெரிவித்தாராம். மகாத்மாவும் அவரைக் குதூஹலத்துடன் ஆச்ரமத்தில் வரவேற்று வேண்டிய வசதிகள் செய்து கொடுத்ததுமல்லாமல் அவருக்குத் தம் கையால் சிகித்ஸை செய்யும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

பிரதி தினமும் காலை எட்டு மணிக்கு மகாத்மா அந்த் நோயாளிக்குச் சிகித்ஸை செய்யப் புறப்படுவார். அவருடன் ஸம்ஸ்கிருத நூல்களைப் பற்றிச் சர்ச்சை செய்து

கொண்டே தம் கையாலேயே அவருக்கு எண்ணெய் தேய்த்து உடம்பு பிடித்து விடுவார். டாக்டர் சுசிலா நாயர், 'பரமாநந்தர்' என்ற ஒரு போலந்து தேசத்துச் சிஷ்யர், இவர்களும் அந்த ரோகிக்குச் சேவை செய்வார்கள். "ஒரு தாயாரைப்போல் இந்தச் சாஸ்திரிக்கு எண்ணெய் தடவித் தொண்டு செய்கிருர் பரமாநந்தர்!" என்று மகாத்மா கூறுவார்.

காந்தியடிளுகடன் நாங்களும் போய் அந்தப் பண்டிதரைக் கண்டுவந்தோம். இங்கே வந்ததில் மிகவும் மனச் சாந்தி உண்டாகி யிருப்பதாகவும், வியாதியும் குணப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னுர். இப்பொழுது அவர் தம் பெயரை ராமாநந்தர் என்று மாற்றி வைத்துக் கொண்டிருக்கிருராம்.

போஜனசாலையில்

நாங்கள் போயிருந்தபோது ஆச்ரமத்திலே ஒரு ஜப்பானியரும் இருந்தார். அவர்தான் ஆச்ரமத்துச் சமையல் அலுவல்களை மேற் பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஹிந்தி முதலான எந்த இந்திய பாஷையும் வராது. கொச்சை ஆங்கிலத்தில், ஒன்றிரண்டு வார்த்தைகள்தான் பேசுவார். மௌனமாகத் தம் அலுவல்களைக் கருத்துடன் கவனித்து வந்தார். நல்ல சிவப்பாக, கட்டை குட்டையாக, வழுக்கைத் தலையும் தானுமாய் வருவார். இடுப்பில் சுத்தமான ஒரு கதர்த் துண்டுமட்டும் கட்டியிருப்பார். அவர் பரிமாற வரும்போது 'ஒரு உயர்குலப் பரிசாரகனே?' என்னும்படியாக இருந்தது அவருடைய தூய தோற்றம்.

அதிகாலையில் நாலு மணிக்கே எழுந்திருந்து ஒரு பெரிய மத்தளத்தை அடித்துக் கொண்டே, நாலு மைல் தூரம் ஆச்ரமத்து எல்லையை ஒரு முறை சுற்றி வருவார். துஷ்டப் பேய் பிசாசுகளை விரட்டுவதற்குப் பௌத்த மதஸ்தர் கையாளும் 'சாங்கிய'மாம் இது. அவருடைய மத நம்பிக்கை ஆனபடியால் மகாத்மா அதற்கு யாதொரு ஆக்ஷேபமும் செய்யவில்லையாம்.

நாங்கள் மகாத்மாவுடன் போஜன சாலைக்குச் சென்ற போது, "இது ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி!" என்றார் மகாத்மா சிரித்துக்கொண்டே. அங்கே கண்ட காட்சியும், "இதுவும் உண்மையோ?" என்று பிரமிக்கச் செய்தது எங்களை. ஆகார விஷயமாக அங்கே ஒவ்வொருவரும் ஒரு நூதன முறையை மேற்கொண்டு பரிசிலனைசெய்து வருவதைக் கண்டோம்.

ஒரு நண்பர் கீரையும் பரங்கிக்காயும் சேர்ந்த கறியையே உணவாகக் கொண்டிருந்தார். பப்பாய்ப் பழமாகவே சாப்பிட்டுக்கொண்டிருந்தார் ஒருவர். வேறொருவர் உப்பில்லாத வெறும் முரட்டு ரொட்டியை மென்று கொண்டிருந்தார். பாலும் பழமுமே உண்பர் சிலர். உப்பில்லாத வேப்பிலைத் துவையல், பச்சை உள்ளிப்பூண்டு, இவற்றை அனைவரும் கொஞ்சம் ருசி பார்ப்பது வழக்கம். எங்கள் தட்டிலும் இவை பரிமாறப்பட்டன.

ஆங்கிலேயர்களது ரொட்டிபோல ஒருவகை ரொட்டி ஆச்ரமத்தில் செய்திருந்தார்கள். அது உண்பதற்கு மிகவும் நன்றாக இருந்தது. அதைச் செய்யும் விதத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு வந்தேன் ஊருக்கு. நம்முடைய இட்டலித் தவலையில் அந்த ரொட்டியைச் சமைத்தேன்: சுமாராக வந்தது. ஆச்ரமத்தில் செய்யும் ரொட்டி போலில்லை. அங்கே செய்யும் ரொட்டி வழிப்பிரயாணத்துக்குக் கொண்டுபோகும் விதமாக இருந்தது. முட்டை, ஈஸ்டு கலவாமலே, புளித்த தயிர் கலந்து ஒருவகை அடுப்பில் ('அவன்' போன்றதில்) சமைத்து வந்தனர். பார்வைக்குக் கடையில் விற்கும் ரொட்டிபோல இல்லா விட்டாலும், ருசியிலும் குணத்திலும் அதைப்போலவே யிருந்தது.

அடிப்படைக் கல்வி நிலயம்

ஸ்ரீ அரிய நாயகம் நடத்திய பேஸிக் ஸ்கூல் (அடிப்படைக் கல்வி நிலயம்) என்ற கல்விச்சாலையைப் பார்வையிட்டோம். அதுவும் கூரைக்குடிசைதான். அதிலே அந்தக் கிராமத்துக் குழந்தைகள் படித்துக் கொண்டிருந்தார்கள்.

மூன்று, நாலு, ஐந்து முதல், எட்டு, ஒன்பது, பத்து வயதுக் குழந்தைகள்வரை அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார்கள். அந்தக் குழந்தைகள் எல்லாம் விளையாட்டுப்போல் தக்லி, சர்க்கா வைத்துக்கொண்டு நூல் நூற்பது, கணக்குப்போடுவது முதலான வேலைகளைக் குதூஹலமாகச் செய்து வருவதைக் கண்டோம். தாங்கள் நூற்ற நூற் சட்டைகளையே அவர்கள் எவ்வளவு பெருமையாக அணிந்துகொண்டிருந்தார்கள்!

ஸேவாக்கிராமத்தின் கதை

மகாத்மா ஸேவாக் கிராமத்திற்கு வந்து சேர்ந்ததை எனக்கு ஒரு கதையாகச் சொன்னார் அங்கே யிருந்த ஒரு நண்பர் :

வர்தாவில் மகாத்மா இருந்தது, அவரைத் தரிசிக்க வந்தவர்களுக்கு மிகவும் சௌகரியமாகத்தான் இருந்தது. ஆகையால் நாளுக்கு நாள் பேட்டி காண வருவோரின் தொகை அதிகரித்துக் கொண்டே போயிற்று. ஜம்னுலாலின் வரையறாத கொடைக்கும்—விருந்தோம்பலுக்கும் கூட—ஒரு வரம்பு வேண்டாமா?

"நான் இங்கே இப்படி நகர வாழ்வு வாழ்ந்து வந்தால், பிறர் தேசத் தொண்டின் நிமித்தம் கிராமம் செல்வதுதான் எப்படி நடைபெறும்? தூரத்தில் ஒரு கிராமத்திலே போய் வசிப்பதுதான் சரி. கிராமப் புனருத்தாரண வேலையில் பிறரைத் தூண்டுவதற்கு அதுதான் சரியான முறை. இந்தப் பேட்டித் தொந்தரவும் குறையும்; ஜம்னுலாலுக்கும் சற்றுச் சிரமம் குறையும்" என்ற எண்ணம் மகாத்மாவின் மனத்திலே ஊறிக்கொண்டிருந்ததாம். மஹாதேவுடனும் ஜம்னுலாலுடனும் இதைப்பற்றிப் பிரஸ்தாபித்தாராம்.

அவர்கள் தங்கள் உயிருக்கும் உயிரான பாபுவை வனவாஸம் செய்ய விடுவார்களா? வர்தாவிலேதான் மகாத்மா இருக்கவேணுமென்று அவர்கள் முடிவு கூறி விட்டார்கள்.

ஒரு நாள் இரவிலே

1936-ஏப்ரல் மாஸத்தில் ஒரு நாள் ராத்திரி சுமார் 7 மணி இருக்கும். பிரார்த்தனை முடிந்தது. கையிலே தடி ஒன்று எடுத்துக்கொண்டார் காந்தி; கதர்ச் சால்வையும் எடுத்துக்கொண்டார். பேசாமல் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தன்னந்தனியே 'விர்' என்று கிளம்பி விட்டார் ஒரு கிராமத்தை நோக்கி.

பஜாஜுக்கும் மஹாதேவுக்கும் செய்தி எட்டியது. ஆனால் அவர்களுக்கு அவரைப் பின் தொடரத் துணிவு இல்லை. மகாத்மா கோபித்துக்கொண்டிருக்கிறார் என்று நினைத்தார்கள். கொஞ்ச தூரம் போய்த் திரும்பி வந்து விடுவார் என்று நம்பினார்கள்; எதிர்பார்த்தார்கள். ராத்திரி யெல்லாம் சிவராத்திரியாக விழித்திருந்தார்கள். மகாத்மா திரும்பி வரவில்லை. இதற்குள் 'சோ' வென்று மழை கொட்டத் தொடங்கிவிட்டது.

கிராமத்துப் பாதையெல்லாம் ஒரே சேறாகிவிட்டது. அந்த இருட்டிலும் மழையிலும் வழியிலுள்ள கஷ்டங்களை யெல்லாம் பாராட்டாமல் அந்தத் தள்ளாத வயதில் அஞ்சு மைல் தூரம் நடந்து சென்றார் மகாத்மா.

நள்ளிரவில் ஒரு கிராமத்திலே ஒரு குடியானவன் குடிசைக்குப் போய்ச் சேர்ந்தார். அவன் கொடுத்த தண்ணீரைப் பருகிவிட்டு அவனுடைய நார்க்கட்டிலில் படுத்துக்கொண்டார். அந்தக் கிராமத்திற்குச் சிவ கிராமம் என்று பெயர்.

சிவ கிராமம் ஸேவாக்கிராமமானது

காலையில் அவரைத் தேடிக்கொண்டு வர்தாவே திரண்டு வந்து விட்டது, அந்தக் கிராமத்திற்கு எனலாம். "ராமன் இருப்பதே அயோத்தி" என்பது மறுபடியும் உண்மையாயிற்று.

அன்று நாங்கள் பார்த்த சிவ கிராமம் அந்தப் பழைய சிவ கிராமமா? குட்டிச் சுவர் நிறைந்த அந்தப் பட்டிக்காடா?

தந்தி தபாலாபீசுகள் என்ன, கப்பி-ரோடென்ன, டெலிஃபோன் வசதி என்ன! கிராமத்துக் குழந்தைகளுக்குப் பாடசாலை, தொழிற்சாலை, கோசாலை—என்று எத்தனைவித வசதிகள்! இந்தக் கிராமம், மற்றக் கிராமங்களுக்கு ஒரு முன்மாதிரி யாகிவிட்டது.

சிவ கிராமம் ஸேவாக் கிராமமான கதையைக் கேட்டதும், நம் நாட்டிலுள்ள கிராமங்க ளெல்லாம் இத்தகைய மாறுதல் அடைந்தால் எவ்வளவு நன்ருக இருக்குமென்று எனக்குத் தோன்றிற்று. ஆனல் நமக்கு இருக்கும் காந்தி ஒருவர்தானே? தீபத்தில் கொளுத்திய தீபம் போலப் பல்லாயிரம் காந்திகளைத் தோற்றுவிக்கும் மந்திர வித்தைதான் தெரியவில்லையே!

13. வயது 74—பட்டினி 21 நாள்

1942-ஆகஸ்டு 9-ந் தேதி மகாத்மா சிறையில் வைக்கப்பட்டதும், 1943-ல் உண்ணுவிரதம் இருந்ததும், உலக மகா யுத்தத்தைக் காட்டிலும் இந்தியாவைப் பாதித்த செய்திகள். இந்த உண்ணுவிரதத்தின்போது இவரை மீண்டும் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது.

சென்னையைக் குலுக்கிய செய்தி

பிப்ரவரி-மீ 11-ம் தேதி வியாழக்கிழமை காலை வழக்கம்போல் காஃபி குடித்துக்கொண்டே 'என்ன புதிய யுத்தச் செய்தி?' என்று பத்திரிகையைப் பிரித்தேன். சிங்கப்பூர் வீழ்ச்சிக்கும் மேலான 'திடுக்கிடும்' செய்தி ஒன்று கிடைத்தது.

காந்தித் தாத்தா உண்ணுவிரதமிருக்க ஆரம்பித்துவிட்டார். வயது 74: பட்டினி 21 நாள்!

அன்று பிட்டுக்கு மண் சுமந்த சுந்தரேசர் முதுகில் விழுந்த அடி, மதுரை வாசிகள் அனைவரையும் குலுக்கி விட்டதாம். அதுபோலச் சென்னை வாசிகளையும் ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது இந்த உபவாஸச் செய்தி.

உள்ளக் கலக்கம்

"காந்தியின் உடல் நிலை மிகவும் மோசமாகிவிட்டது" என்ற செய்தி சனிக்கிழமை மாலைப் பேப்பரில் வந்தது தான் தாமதம்: காட்டுத் தீப்போல் எங்கும் பரவிச் சென்னை மக்களின் உள்ளத்தையும் தீக்க ஆரம்பித்தது. ஓடினோம் ஆலயங்களுக்கு. முற்றுகை போட்டோம் பேப்பர்-ஆஃபிஸ்களை. ரேடியோக்கள் திருப்பிய வண்ண மிருந்தன. பட்டணத்துப் பிரமுகர்கள் வீடுகளைப் பல முறை வலம் வந்தோம். பயன்: கணக்கில்லாத தந்திகளும் லண்டனுக்குக் கேபில்களும். என்ன செய்தும் என்ன? மனம் நிம்மதி அடையவில்லை.

காளராத்திரிதான் அன்று இரவு. பல முறை படுக்கையில் எழுந்து உட்கார்ந்து பிரார்த்தனை செய்து கொண்டோம். உரக்க யாரேனும் பேசினாலும் திடுக்கிட்டு விழித்து 'என்ன? என்ன?' என்று வினவினோம்.

ஒவ்வொருவர் வீட்டிலும் ஏதோ துக்க ஸம்பவம் நிகழ்ந்துவிட்டதுபோன்ற உணர்ச்சி. எதைக் கண்டாலும் வெறுப்பு. ஒரே கவலை—ஒரே ஏக்கம்.

சீதையைத் தேடி ராமன் லங்கைக்குப் போனான். ஒரு மகா ஸமுத்திரம் குறுக்கிட்டது. உடன் வந்த வானர சேனை லங்கைக்குள் புகவேணுமென்று துடித்துக் கொண்டிருந்தது. ராமனோ வினயத்துடன் வழி விடும்படி பிரார்த்தித்துக் கொண்டான் ஸமுத்திர ராஜாவை. அந்த அலைகளின் கோஷங்களுக் கிடையே பிரார்த்தனை காதில் விழவேயில்லை. தர்ப்பையிலே படுத்துப் பிராயோபவேசம் செய்யத் துணிந்தான் புருஷோத்தமன்......

பலாத்காரமின்றிப் பிறரை இணங்கும்படி செய்வதற்குப் பட்டினி கிடப்பது ஒரு புராதன வழக்கம் நம் தேசத்திலே. நமது கோரிக்கை நிறைவேற, நமது பேரவாவை வெளியிட, இது ஒரு முக்கிய சாதனம். பிறர் மனதை இளகச் செய்வதற்கும் ஒரு வழி. ஆத்ம பலத்தைச் சோதிக்கும் புனித விரதமும் இது. பழைய பாவம் பழி தீர்ந்து, புது வாழ்வு வாழ்வதற்கும் ஏற்ற உபாயம். பிறர் பாவம், குறைகள் தீரவும், தக்க பிராயச்சித்தம்.

இத்தகைய உண்ணு விரதத்தை மகாத்மா மேற்கொண்டதும், எங்கள் மனம் பூனாவும் மதராஸுமாக ஊஞ்சலாடிற்று. பூனாவுக்குப் போவதாக முடிவு செய்தேன், ஸ்ரீமதிகள் ராதாபாய் சுப்பராயன், ஜானம்மாளோடு.

புறப்பட்டோம்

சனிக்கிழமை காலை எக்ஸ்பிரஸில். வண்டித்தொடர் வழக்கம்போல்தான் போய்க்கொண்டிருந்தது. ஆனால் எறும்புபோல் ஊர்ந்து சென்றதாகவே எங்கள் உணர்ச்சி. ஸ்டேஷன்களில் யாராவது தெரிந்த ஒருவரைச் சந்தித்தால் மகாத்மாவின் தேக நிலைமையைப் பற்றிக் கேட்க வேணுமென்ற ஆவல். எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டே போனேம். ரயில்களில் ரேடியோ ஏன் இருக்கக்கூடாது?

ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்குப் பூனு ஸ்டேஷன் வர, "அப்பாடி!" என்று ஒரு பெருமூச்சு விட்டோம். மகாத்மாவின் அருமைப் புதல்வர், தென்னுட்டுக்கே மாப்பிள்ளை யெனப் பாராட்டுகிறேமே, தேவதாஸ் காந்தி—அவர் எங்களை அன்புடன் வரவேற்று, மகாத்மாவின் உடல் நிலையைப்பற்றிய கவலையைத் தீர்த்து வைத்தார்.

அரண்மனை வாசலில்?

ராமேச்வரம் சென்றாலும் சனிச்வரன் விடுகிறதா? அன்று மாலைவரை அனுமதிக்காக நாங்கள் காத்துக் கொண்டிருந்தோம்.

சரியாய் 4-30 மணிக்கு ஒரு டாக்ஸியில் அந்த அரண்மனைக்குப் புறப்பட்டோம். திகைக்க வேண்டாம் : ஆகாக்கான் அரண்மனைக்குத்தான். வாசலில் எற்கெனவே பத்துப் பதினைந்து கார்கள் நின்றுகொண்டிருந்தன. சுமார் 60, 70 பேர்—குழந்தைகள் ஸ்திரீகள் உட்பட—அங்கே வெயிலில் காத்துக்கொண்டிருந்தார்கள்.

5-30 மணிக்கு உள்ளே செல்ல அனுமதி கிடைத்தது. முதல் கேட்டைத் தாண்டி உட்செல்ல, முள்ளுக் கம்பிகள் போட்ட மற்றொரு கேட் தென்பட்டது. அங்கும் ஆயுத பாணிகளான சிப்பாய்கள் காவல் புரிந்துகொண்டிருந்தார்கள்.

தரிசனம்

விசாலமான தோட்டத்தின் நடுவில் இருந்த அந்த ஜெயில்-அரண்மனையின் ஒரு மூலையிலே, ஒரு அறையில், கட்டிலில் உடல் முழுதும் தூய வெள்ளைக் கதர் போர்த்துப் படுத்துக்கொண்டிருந்தார் மகாத்மா. 19-வது நாள் உபவாஸம். கால்மாட்டில்போய் நின்றோம். தலையில் 'மண்பட்டி' கட்டியிருந்தது. முகம் மட்டும் தேஜோமயமாய்த் துலங்கிற்று, ஒளிவீசிய கண்களுடன்.

எங்கள் கண்ணுக்குப் படுக்கையில் உடல் இருந்ததாகவே தென்படவில்லை. எங்களைக் கண்டதும் புன்முறுவல் பூத்தார். அந்தத் திருமுகம், அந்த இளநகை, அந்தக் கூர்மையான பார்வை, என்றும்போல் வசீகரமாகவே யிருந்தன.

என்ன என்னவோ, பேசவேணுமென்று நினைத்துக்கொண்டுதான் சென்றோம். ஆனால் இவரை இந்த நிலையில் கண்டதும் தொண்டை அடைத்துக்கொண்டது ; வாய் பேச மறுத்தது. பாதத்தைத் தொட்டு வணங்கினோம்.

கணீரென்ற தெளிவான குரலில் மிகப் பரிவுடன் எங்கள் க்ஷேமலாபங்களை விசாரித்தார் மகாத்மா.

பதிலுக்கு ஏதோ குழறினோம். இவரைப் பேசவேண்டா மென்று வேண்டிக்கொண்டோம். சென்னை மாதர்கள் இவருக்காகப் பிரார்த்தனைகள் செய்து வருவதாகச் சொன்னோம். வந்தனம் தெரிவித்தார். இதற்குள் பேட்டிக்கு உரிய மூன்று நிமிஷங்கள் ஆகிவிட்டனவாம்.

அறையின் வெளியே வந்து அன்னை கஸ்தூரிபாவைத் தரிசித்தோம். அவர் முகத்திலும் ஆபூர்வமான சாந்தம். பொறுமையே உருக்கொண்டது போலத் தோன்றினர். அவரும் ஆர்வத்துடன் எங்கள் சுக துக்கங்களை விசாரித்தார். அவரையும் விட்டுப் பிரிய மனமில்லாமலே வந்து விட்டோம் வெளியே.

கஸ்தூரிபாவின் மாங்கல்ய பலமே காந்திக்கு இம்முறை புத்துயிர் அளித்தது என்பது எங்கள் அபிப்பிராயம்.

14. கதவுகள் அடைபட்டன

ஆகாக்கான் அரண்மனை வாசலின் கனத்த கதவுகள் மார்ச்சு மாதம் 3-ந் தேதி முதல் மறுபடியும் மூடிக்கொண்டன. மகாத்மா மறுபடியும் திரை மறைவிலே போய்விட்டார். நாங்கள் ஊர் வந்து சேர்ந்தோம்.

உடம்புதான் ஊருக்கு வந்து சேர்ந்தது: உள்ளத்தை அரண்மனை என்ற அந்தச் சிறைச்சாலைக்குள்ளே வைத்து விட்டுத்தான் திரும்பினோம்.

ஆகாக்கான் அரண்மனை: அந்தப் பெயரே தேசபக்தர்களைப் பரிகசிப்பது போல் இருக்கிறதல்லவா? காந்தி பக்தர்களுக்கெல்லாம் எவ்வளவு கலவரத்தையும் பயத்தையும் உண்டாக்கிய பெயர்! திடும் திடும் என்று பயங்கரமான செய்திகளை வெளியுலகத்திற்குக் கொடுத்துவந்த பெயர்!


என்ன பெயர்! என்ன பலி!

மஹாதேவ தேஸாயி—மகாத்மாவின் வலது கரம்—இலக்கிய வீரர், கர்ம வீரர்—இந்தியாவின் விடுதலைப் போரின் முன்னணியிலே நின்ற தியாக வீரர்—இத்தகைய மகாதேவ் மறைந்தார் மண்ணுலகில் இருந்து. (1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி) இந்தத் ‘திடும்’ செய்தியை வெளி உலகின்மேல் வீசியெறிந்தது ஆகாக்கான் அரண்மனை.

மற்றொரு நாள் மற்றோரு வெடிகுண்டு வீசியது: மகாத்மாவின் 21-நாள் உண்ணா விரதம் என்ற அந்த அதிர்ச்சியிலே தான் அந்த அரண்மனைக் கதவும் திறந்து விட்டது, காந்தி பக்தர்களுக்காக—அந்தச் சம்பவம் சுபகரமாக முடியும் வரையில்.

அதன்பிறகு, 1944-ம் வருஷம் மார்ச்சு மாதம் பின்னும் துக்ககரமான செய்திகள்: “அன்னை கஸ்தூரிபா படுத்த படுக்கையாக இருக்கிறார்”—“ஹிருதய நோயால் பீடிக்கப் பெற்றிருக்கிறார்”—“அன்னை பிழைப்பது அரிது”—இத்தகைய அறிக்கைகள் வெளிவந்தன, அந்த அரண்மனையிலிருந்து.

எனினும் “அரண்மனை வாசல் திறக்கும்: அன்னை பிழைத்து விடுவார்!” என்று மனப்பால் குடித்தோம். அந்தப் பூதமோ அன்னையையும் அப்படியே விழுங்கி விட்டது! மகா சிவராத்திரி புண்ணிய தினமாகிய அந்த 22-ந் தேதி மாலை 7-35 மணிக்குக் கஸ்தூரிபாவின் ஆவி விடுதலை பெற்றது. மைந்தர் மஹாதேவுடன் அன்னையும் அங்கே சமாதி பெற்றார்.



15. திறவாத கதவும் திறந்தது

"மகாத்மாவுக்கு மலேரியா!" இந்தக் கடைசிக் குண்டு சென்ற எப்ரல் கடைசியில் வெளிப்பட்டது. ஒருமுறை சூடு கண்ட குழந்தை என்ன செய்கிறது—தெரியுமா? நெருப்பு என்றாலே 'பூ! பூ!' என்று விரலை ஊதிக்கொண்டு அழத் தொடங்கிவிடுகிறது. பொது ஜன மனப்பான்மையும் அப்படித்தானே? எங்களுடைய மனநிலை—என்னவோ—அதேமாதிரி இருந்தது.

"இந்த முறை மகாத்மா பிழைப்பது சாத்தியமில்லை." என்றே நினைக்கச்செய்து விட்டது—"தேகநிலை கவலைக்கு இடமாக இருக்கிறது" என்று அன்றுமாலை ரேடியோ சொன்ன செய்தி. யாருக்குத்தான் நித்திரை வரும் அன்றிரவு?

ஆகாக்கான் அரண்மனை: அந்த வாசல் முன்னே கொந்தளிக்கும் அலைகடல்போல் ஜனக்கூட்டம்......திசை இழந்த மரக்கலம்போலத் தத்தளிக்கிறது உள்ளம்... நாட்டின் மூலை முடுக்குகளில் அனுவசியமான கல்லடிகள், கலாட்டாக்கள், வேலை நிறுத்தங்கள்...என்ன பயன்?

துரதிர்ஷ்ட இந்தியாவின் ஜாதகத்திலே ஒரு கடுகளவு சுபிர்த பலன் எங்கிருந்தோ முளைக்கிறது விடி வெள்ளி போலே. கெட்ட கனவுகளெல்லாம் உதய சூரியனைக் கண்ட பனிபோலப் பறந்துவிட்டன. இவ்வருஷம் மே மாதம் ஒருநாள், திறவாத கதவும் திடீரென்று திறந்தது. வெளி உலகுக்கு வந்துவிட்டார் நம் அருமை மகாத்மா. புகழுடல் தாங்கி அல்ல; பூத உடலும் தாங்கியே வந்துவிட்டார். 1942 ஆகஸ்டு 9-ந்-தேதி அதிகாலையில் சிறைசெய்யப் பெற்றவர், 1944 மே 6-ந்-தேதி காலை 8-மணிக்கு விடுதலை பெற்றார்—என்பது உலகம் அறிந்த செய்தி.

"ஓம்" என்று மகாதேவ தேஸாயியின் சமாதிமீதும், "ஹே ராம்" என்று கஸ்தூரிபாவின் சமாதிமீதும் குழந்தை யுள்ளத்துடன் மகாத்மா சிறு கிளிஞ்சில்களைப்

பதியவைத்தாரே, அந்தச் சமாதிகளோடு கூடிய ஆகாக்கான் அரண்மனை,—காந்தியடிகளின் தபோவனம்—காந்தி பக்தர்களுக்கு ஒரு புனித யாத்திரை ஸ்தலமாகி விட்டது; தவக் கோயிலாகிவிட்டது.

* * * *

அவரே புருஷோத்தமர்

"இப்பொழுது உலகத்திலே எவன் குணசாலி? வீரன் எவன்? எவன் தருமம் தெரிந்து தன் கடமையை உணர்ந்தவன்? சத்தியம் தவருதவன்? திட ஸங்கல்ப முடையவன்?" என்று வால்மீகி முனிவர் தம்முடைய காலத்திலே நாரத முனிவரைக் கேட்டாராம். அதற்கு அவர் விடையாக, "அவன் தான் ராமன்; அவனிடம்தான் இந்தக் குணங்கள் எல்லாம் ஒருங்கே அமைந்திருக்கின்றன. அவனே புருஷோத்தமன்" என்று கூறினாராம். அதன் பிறகே வனவாஸம் செய்த ராமனையும், சிறைவாஸம் செய்த சீதையையும் லட்சியமாக வைத்து வால்மீகி மகரிஷி ராமாயணக் கதையை எழுதினார் என்கிறார்கள்.

அந்தப் பழைய காலத்திலே வால்மீகி கேட்ட அதே பழைய கேள்வியை, இன்றும்—ஆம், இந்த யுத்த இருள் சூழ்ந்த தற்கால உலகத்திலும்—நாமும் கேட்டுப் பார்த்தால், ஒரு லட்சிய புருஷனைக் கண்டுகொள்ள முடியாதா? "ஆம், அவர் தான் நமது அன்னை கஸ்தூரிபாவுடன் ஆகாக்கான் அரண்மனையில் நமக்காகவும் நம்முடைய சந்ததிகளுக்காகவும் தவஞ்செய்து விட்டுச் சமீபத்தில் நமக்கிடையே வந்துசேர்ந்தவர். அவரே புருஷோத்தமர்!" என்று காட்டுவதற்கு ஒரு நாரதரா வேண்டும்?

சில கடிதங்கள்

I

அன்னை கஸ்தூரிபா கடிதம் — ஆங்கிலத்தில்

அரக்கோணம்,
9–12–'32

அன்புள்ள சகோதரி,


சென்னையில் தங்கிப் போகாமல் நேராகவே நான் பூனாவுக்குப் போவது குறித்துப் பெரிதும் வருந்துகிறேன். என்னை நீ மன்னிப்பாய் என்று நம்புகிறேன். திருவாங்கூருக்குப் போயிருக்கும் ஸ்ரீமதி ஊர்மிளா தேவி திரும்பிப் போகும்போது நிச்சயமாகச் சென்னையில் தங்கிப் போவார். அப்படிச் செய்வதாக என்னிடம் வாக்களித்திருக்கிறார்.

தெற்கே உள்ள சகோதரிகளும், சகோதரர்களும் இந்தத் தடவை நான் வந்திருந்ததை முன்னிட்டு எவ்வளவோ தயாளமாகவும் பட்சமாகவும் நடந்து கொண்டார்கள். அதற்கு நான் நன்றி பாராட்டுகிறேன். கடவுள் நமக்கெல்லாம் உதவிபுரிவாராக; ஜனங்களுக்குப் பணி செய்யும்படி நமக்கு ஆற்றல் அளிப்பாராக.

உண்மையுள்ள,
கஸ்தூரிபா காந்தி.

பின் குறிப்பு :—தயவு செய்து இந்திய ஸ்திரீகள் சங்கத்தின் சகோதரிகளுக்கும் என்னுடைய வந்தனத்தைத் தெரிவிக்கவும்.

[ஊர்மிளாதேவி — தீனபந்து — சித்தரன்ஜன தாஸரின் ஸகோதரி]. பதிப்பு ஆசிரியர்.



2—2—'34.

காந்தி அடிகள் நூலாசிரியருக்கு எழுதிய 'ஹிந்தி' கடிதம். இதன் மொழி பெயர்ப்பு, 84-ம் பக்கம் III-வது

II

மகாத்மா ஹிந்தியில் எழுதியது

ஸ்ரீ அம்புஜம்,

உனது சிறிய கடிதம் பெற்றதும், ஆனந்தமடைந்தேன். நீண்ட நாட்கள் பிரிந்திருந்த பிறகு உன் கடிதம் கிடைத்தபொழுது, பிரிந்த பெண்ணைச் சந்திப்பதில் தந்தைக்கு ஏற்படும் ஆனந்தம் எனக்குண்டாயிற்று. உன்னிடமிருந்து நான் கடிதம் பெற விரும்புகிறேன். ஏனெனில், உனது துக்கத்தில் நான் பங்கு பெற விரும்புகிறேன். உனக்குத் துக்கம் ஏன்? கீதையை அர்த்தம் தெரிந்து படிக்கிறாயா? இதுவரை படியாவிட்டால் இனியாவது படி. ஆர்னல்டின் மொழிபெயர்ப்பு நன்றாயிருக்கும். எதைப்பற்றி வருத்தம்? எனக்கு எழுதிக்கொண்டிரு.

7-1-'34 பாபுவின் ஆசிர்வாதங்கள்

குறிப்பு:—ஹிந்தியில் உனது கருத்துக்களைச் சரியாக வெளியிட முடியவில்லையென்றால், ஆங்கிலத்தில் எழுது.

III

ஆங்கிலத்தில்

ஸ்ரீ அம்புஜம்,

உன்னுடைய இரண்டு கடிதங்களும் கிடைத்தன. அவகாசம் இல்லாத காரணமாகச் சீக்கிரம் பதில் எழுத முடியவில்லை. உன்னுடைய ஞாபகமோ நித்தம் இருந்து கொண்டிருக்கிறது.

நீ ராமாயணம் படிப்பது ரொம்ப நல்ல காரியம். ஹரிஜன ஸேவை செய்துவருவதும் சரியானதே.

"பீஹார்"க் கஷ்டத்திற்காக ஏதாவது பணம் சேர்த்தாயா? தகப்பனர் ஏதாவது கொடுத்தாரா?

எனக்கு எழுதிக்கொண்டிரு. நான் எழுத்துக்களைத் தெளிவாக எழுத, என்னவோ, முயற்சி செய்கிறேன்.

2-2-'34. பாபுவின் ஆசிர்வாதம்

IV

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

ஹிந்தி யாத்ரா கோஷ்டியில் நீயும், கோமதியும், ஸரஸ்வதியும் இருக்கிறீர்கள் என்ற செய்தியைக் கேட்டு ஆனந்தமடைந்தேன். எனது இரு கடிதங்களும் கிடைத்திருக்குமே. மனம் நிம்மதியாயிருக்கும். சீதோஷ்ணம் உடம்பிற்கு ஒத்திருக்கும். எங்காவது ஓரிடத்தில் சந்திப்போம் என்று எதிர்பார்க்கிறேன். எனக்கு உன் அனுபவங்களையெல்லாம் எழுது.

26-3-'34 } பாட்னா. } பாபுவின் ஆசிர்வாதங்கள்

[கோமதி – பண்டித் ஹரிஹர சர்மாவின் மனைவி.]

[ஸரஸ்வதி என்பது ருக்மிணி லக்ஷ்மிபதியாக இருக்க வேண்டும்.

V

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உனது இரண்டு கடிதங்களும் கிடைத்தன. கடிதம் எழுத எனக்கு மிகவும் குறைந்த அவகாசமே கிட்டுகிறது. அதனால் உன்னுடைய கடிதங்களுக்கு உடனே பதில் எழுதக்கூடவில்லை. ஜுரத்தின் சின்னங்கள் இதற்குள் போயிருக்கவேண்டும். ராமாயணம் கிடைத்த விஷயமாய் எழுதிவிட்டதாக ஞாபகம்......

கவலையை விடு. ஹிந்தியில் பூர்ண யோக்யதை பெறு.

23-6-'34. பாபுவின் ஆசிர்வாதம்

குறிப்பு :—'அம்மா' 'அம்மாள்' இரண்டுக்கும் என்ன வித்தியாசம்! ஹிந்தியில் பார்வதிபாயியை ஹமியாபஹன் என்று கூறுகிறது போலவா ....என்ன சொல்ல?

VI

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உனது கடிதம் கிடைத்தது. இன்று எனது மௌன தினம். நாங்கள் எல்லோரும் கராச்சியில் நதிக்கரையில் உள்ள ஒரு வீட்டில் இருக்கிறோம். நல்ல காற்று வீசுகிறது.

............சாவு ஒரு குறிப்பிட்ட சமயத்தில் வரத் தானே வேண்டும். ஒரு மனிதனுக்கு இந்த உலகில் வேலை இருக்கும்வரை அவன் சாவதில்லை என்னும் கருத்தில் எனக்கு நம்பிக்கை யுண்டு............

உன் உடம்பு இப்பொழுது முன்னிலும் குணமா யிருக்கும். ஹரிஜன ஸேவை, ஹிந்தி, கதர் ஆகிய மூன்று பணிகள் உனக்கு இருக்கின்றன. இவைகளுள் எதனாலும் யாரும் வருந்தக் காரணமில்லை.

9-7-'34,

பாபுவின் ஆசிர்வாதம்

VII

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உனது இரண்டு கடிதங்களும் கிடைத்திருக்கின்றன. என் உபவாஸத்தைப்பற்றிக் கவலை கொள்ளாதே. ஆண்டவன் அதை இடையூறின்றிப் பூர்த்தி செய்விப்பான். இந்த உடல் மூலமாக ஸேவை செய்விக்க அவனுக்கு இஷ்டமுள்ள வரையில் ஒரு தீங்கும் நேரிடாது.

எதற்கு மனம் இடம் தரவில்லையோ அதை நிர்ப்பந்தத்தில் செய்வதால் லாபம் இல்லாதது மட்டு மல்ல, தீங்குண்டு. ஏனெனில் மனமே—मन एव मनुष्याणां कारणं बंधमोक्षयोः—ஆத்மாவின் கட்டிற்கும், விடுதலைக்கும் காரணம் என்று கீதையும் சொல்லுகிறது. எல்லோருடைய அனுபவமும் அதுவே. நீ செய்வதை எனக்கு எழுதத் தவருதே. கடவுள் உனக்கு நிம்மதி அளிக்கட்டும்.

20-7-'34

பாபுவின் ஆசிர்வாதம்

VIII
ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உனது கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. எப்பொழுதும் நான் பதில் எழுத முடிகிறதில்லை. எனக்குத் தெம்பு வந்து கொண்டிருக்கிறது. ஒன்றும் கவலைப்படக் காரணமில்லை.

பா, ராமதாஸை அழைத்துக்கொண்டு ஸாபர்மதிக்குப் போயிருக்கிருள்.

உனது ஹிந்திப் பயிற்சி சரிவர நடைபெறுகிறதாகத் தெரிகிறது.

நீ எல்லாத் துக்கங்களையும் களைந்தெறியவேண்டும். கடவுள் நம்மை எந்த நிலையில் வைத்திருக்கிருரோ, அதை ஏற்றுத் திருப்தியுடன் இருத்தல் நமது கடமையாகும்.

இங்கே வர முடியுமானுல் வா. தற்சமயம் இங்கே தான் நான் இருக்கவேண்டும். ஓம், ஜம்னுலால்ஜியுடன் பம்பாயில் இருக்கிருள்.

3-9-'34 பாபுவின் ஆசிர்வாதங்கள்

[ராம்தாஸ் – காந்தியடிகளின் மூன்ருவது புதல்வர்.]

[ஓம் என்பவர் ஸேட் ஜம்னுலால் பஜாஜின் மூன்ருவது புதல்வி.]

IX

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உனது கடிதம் கிடைத்தது. நான் ஒன்றிரண்டு கடிதங்கள் நிச்சயமாக எழுதியதுண்டு; என் கடிதம் ஒன்றுகூடக் கிடைக்காமல் இருந்திருக்க முடியாது.

சர்மாவின் வியாதியைப்பற்றி கோமதி ஒன்றுமே எழுதவில்லை. ஆனால் காகாவுக்கு ஸத்யநாராயணனுடைய கடிதம் வந்தது. அதிலிருந்து தெரிந்தது. இப்பொழுது முற்றிலும் சௌக்கியமாயிருக்கும்.

ராமாயணத்தைப் பற்றி நீ எழுதியிருப்பது உண்மை.

வர்தாவில் சில தினங்கள் தங்கும்படி வரமுடியுமானால் நல்லது. காங்கிரஸில் சரிதான்: அந்தச் சமயத்தில் நான் யாரையும் நேரில் பார்க்கவும் இயலாது.

17-9-'34 பாபுவின் ஆசிர்வாதங்கள்

[சர்மா என்பவர் பண்டித் ஹரிஹர சர்மா.]

[கோமதி — அவர் மனைவி.]

[காகா என்பவர் ஆசாரிய காகா காலேல்கர்.]

[ஸத்யநாராயணன் — ஹிந்தி பிரசார ஸபை தற்காலக் காரிய தரிசி.]

X

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உனது இரு கடிதங்களும் கிடைத்தன. ஆங்கிலத்தில் அவசியம் எழுது. உனது உபவாஸத்தினால் துக்கம் உண்டாகிறது. உபவாஸம் செய்திருக்கக்கூடாது. தாய் தந்தையருக்கு மிகுந்த கஷ்டமுண்டாகும். அவர்கள் உபவாஸத்தை பலாத்காரம் என்றே நினைப்பார்கள். உனக்கு மிகுந்த நிம்மதி ஏற்பட்டிருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். எனக்குக் கடிதம் எழுதிக்கொண்டிரு.

13-10-'34 பாபுவின் ஆசிர்வாதங்கள்

XI

ஆங்கிலத்தில்

என் அன்பார்ந்த அம்புஜத்துக்கு,

உன் உண்ணா விரதத்துக்கு எதிரிடையாக நான் ஒன்றும் சொல்லாவிட்டாலும், எனக்கு அது அவ்வளவு பிடித்தமாக இல்லை. இருந்தபோதிலும், அதனால் உன் உடம்புக்குத் தீங்கு நேரிடாமலே அந்த விரதம் முடிந்திருக்கும் என்றும், விரத நாட்களிலே ஆத்ம சந்துஷ்டி அடைந்திருப்பாய் என்றும் நம்புகிறேன். உன்னுடைய உண்ணா விரதத்தினால் என்னிடம் வருகிறதற்கான அனுமதி உன் பெற்றோரிடமிருந்து கிடைக்காவிட்டாலும், மனச்சோர்வு அடைந்து அவர்களிடமிருந்து அனுமதி பெறும் முயற்சியை விட்டு விடக்கூடாது. அதற்காகத் திரும்பத் திரும்ப முயலவேண்டும். ஆனால் இனி ஒரு போதும் உண்ணாவிரதம் இருக்கலாகாது. நேர்மையான ஒழுக்கத்தினாலும் பொறுமையோடு நியாயங்களை அவர்களுக்குக் காட்டுவதினாலும், அனுமதி பெறுவதற்குத் தகுதியுள்ளவளாகச் செய்துகொள்வதற்கே ஓயாமல் முயல வேண்டும். திடீரென்று ஏற்பட்ட ஒரு மனக் கிளர்ச்சியினாலே இவ்விடம் வருவதாகத் தீர்மானிக்கவில்லை என்றும், மீறமுடியாத அந்தராத்மாவின் ஆணைக்குக் கீழ்ப்படிந்தே தீர்மானம் செய்தாய் என்றும், ஸ்பஷ்டமாக அவர்களுக்கு விளக்கிக் காட்டுவாயானால், அவர்கள் தெரிந்துகொள்வார்கள். நான் சொல்லுகிறபடி செய்வாய் என்று நம்புகிறேன்.

வர்தா,
14—10—1934

அன்புள்ள
பாபு

XII

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

தந்தையிடமிருந்தும், உன்னிடமிருந்தும் கடிதங்களைப் பெற்று நான் அடைந்த சந்தோஷத்தைச் சொல்ல முடியாது. கடவுள் பெருங்கருணை புரிந்தார். தாய் தந்தையரின் அன்பும், உனது தூய தவமும் வெற்றி பெற்றன. மனிதன் இவ்விதமே கடவுளை அறிகிறான்.

நான் நவம்பர் 12-ந் தேதி வர்தா திரும்புவேன் என்றெண்ணுகிறேன். அப்பொழுது நீ தந்தையுடன் தவறாமல் வா. தாயாரும் வருவாரானால் மிகவும் நல்லது. இடையில் கவலையற்றிரு. ராமநாம ஜபம் செய். இயன்ற ஊழியம் செய்.

15-10-'34 பாபுவின் ஆசிர்வாதங்கள்



XIII

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உனது கடிதம் கிடைத்தது. தந்தையின் கடிதமும் கிடைத்தது. எனக்குச் சிறிதும் கஷ்டம் தரவில்லை. என்னிடம் எதையும் சொல்ல உனக்கு அதிகாரம் இருந்தது, எப்பொழுதும் உண்டு. ஸங்கோசமில்லாமல் என்னிடம் எல்லாம் சொல்லாவிட்டால் நான் எவ்வாறு உதவியளிக்கக்கூடும்?

இனி மனத்தை உறுதியாக்கிக்கொண்டு, முடிந்த ஊழியத்தைச் செய். உனக்காகக் கையினுல் செய்த காகிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. காகிதம் கொஞ்சம் முரடானது, பில் உனக்கு அனுப்பப்படும். இங்கிருந்து பணம் கொடுக்கப்படும். உன் பணம்தான் இங்கே இருக்கிறதல்லவா?

ராமாயணப் பயிற்சி விடாது நடைபெறட்டும்.

எனக்கு எழுதிக்கொண்டிரு. ஜானம்மாளும் எனக்கு எழுதட்டும். இந்தக் கடிதம் படிப்பதும் கஷ்டமாயிருந்ததா என்று எனக்குச் சொல்லு.

தாய் தந்தையரைச் சந்தோஷப்படுத்து.

வர்தா,
21-12-'34.

பாபுவின் ஆசிர்வாதங்கள்

XIV

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உனது கடிதம் கிடைத்தது. உனது விருப்பம் என்ன— நான் ஆங்கிலத்தில் எழுதவா, ஹிந்தியில் எழுதவா ?— என்று தெரிவி. உன் மனம் விரும்பும் பாஷையில் நீ எழுது.

(பஞ்சு) பட்டைகள் தேவையான பொழுது, உங்கள் பக்கங்களிலிருந்து தருவித்துக்கொள். ஆனால் அங்கேயே அடித்துப் பட்டை போடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

உணவினால் வாயு தங்கினால், பாலைத் தள்ளித் தயிர் சேர்த்துக்கொள்............சிறிது சாதம் சாப்பிடு. சமைக் காத கீரையையும் பழத்தையும் நிறுத்த வேண்டாம்.

....

இன்று நாங்கள் எல்லோரும் டெல்லிக்குப் போகிறோம்.

தபால் செலவும், காகிதச் செலவும் மிச்சப்படுவ தற்காக, இதன் பின்புறத்தில் ஜானம்மாளுக்கு எழுது கிறேன்.

வர்தா,
28–12–'34.

பாபுவின் ஆசிர்வாதங்கள்

XV

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

பார்டோலியிலிருந்து சாமான்கள் கிடைத்திருக்கும்.

டெல்லியில் குறைந்தது 20உ வரையில் இருக்க வேண்டியிருக்கும். எனக்கு எழுதிக்கொண்டிரு. என்னுடன் பா, மீராபேன், பெரின்பேன், குர்ஷெத்பேன் — இருக்கிறார்கள். லீலாவதி டெல்லியில்தான் இருக்கிறாள். நல்ல குளிராய் இருக்கிறது. ராம்தாஸ் பம்பாய் போயிருக்கிறான். பிரபாவதி வர்தாவில் இருக்கிறாள். மெஹர்தாஜ் இங்கே இருக்கிறாள். டாக்டர் அன்ஸாரி வீட்டில் தங்கியிருக்கிறாள்.

டெல்லி,
பிர்லா மில்ஸ்,
31-12-'34.

பாபுவின் ஆசிர்வாதங்கள்

பாலுக்குப் பதிலாகத் தயிர் சாப்பிடலாம். கோதுமைக்குப் பதில் அரிசி. பாலின் எடை அதுவே இருக்கட்டும்.

[மீராபேன் — காந்தியடிகளின் ஆங்கில சிஷ்யப் பெண்மணி. இவர் சொந்தப் பெயர் குமாரி ஸ்லேட். மீராபேன் என்ற பெயர் இவருடைய குணாதிசயங்களையும் வேலைகளையும் கவனித்து காந்தியடிகளால் அளிக்கப்பட்டது. பெரின்பேன், குர்ஷெத்பேன் இவர்கள் தாதாபாய் நவரோஜியின் பேத்திப் பெண்கள். இருவரும் பம்பாய் நகரிலும் வெளியிடங்களிலும் அரிய தேசத்தொண்டு செய்து வருகிறார்கள். மெஹர்தாஜ், எல்லைப்புறகாந்தி அப்துல் கஃபர்க்கான் புதல்வி.]

XVI

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உனது கடிதம் கிடைத்தது. தந்தையின் உடம்பைப் பற்றி எனக்குத் தகவல் அனுப்பிக்கொண்டிரு.

நீ அனுப்பிய அரிசி மிகவும் நன்றாயிருந்தது; ஆனால் கொஞ்சம் தீட்டல் அதிகம்; சிறிதும் தீட்டவே கூடாது.

கிருஷ்ணஸ்வாமிக்குப் பெண் அவசியம் பார், ஆனால் இதற்காகக் கவலை ஏன்? கவலைப்படுவதால் பெண் கிடைத்துவிடுமா? முயற்சியினால்தான் கிடைக்கும்.

பிரதிக்ஞையின் சுலோகம் பின்வருமாறு :

अहिंसा, सत्य, अस्तेय, ब्रह्मचर्य असंग्रह
शरीरश्रम, अस्वाद, सर्वत्र भयवर्जना ।
सर्वधर्मी समानत्व स्वदेशी स्पर्शभावना ।
हीं एकादश सेवावीं नम्रत्वे व्रत निश्चये ॥

இதைப் படிக்க முடிகிறதா?

இத்துடன் உள்ள கடிதத்தைத் தந்தையிடம் கொடுக்கவும்.

5—5—'35 பாபுவின் ஆசிர்வாதம்

XVII

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

தந்தை எவ்வளவு சீக்கிரத்தில் மலைவாஸத்திற்குப் போகக்கூடுமோ, அவ்வளவு நல்லது. ஆனால் எவ்வளவு காலம் தங்க வேண்டுமென்பது டாக்டர் தீர்மானிக்க வேண்டிய விஷயம். தந்தை சீக்கிரத்தில் முற்றிலும் சௌக்கியமடைய வேண்டுமென்று நாம் எல்லோரும் வேண்டுவோம்.

கிருஷ்ணஸ்வாமியின் விவாகம் நிச்சயமானது நல்லதே. இந்தச் சம்பந்தம் இருவருக்கும் சுகம் தருவதாக.

இப்பொழுது.........நான் நாளை இங்கிருந்து கிளம்பி ஜூன் 2உ திரும்பி வருவேன்.

வர்தா
20-5-'35 பாபுவின் ஆசிர்வாதங்கள்

XVIII

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உனது கடிதமும், ரூ. 10-ம் கிடைத்தன. எனக்கு, குளிர்ந்த பிரதேசத்திற்குப் போக வேண்டியதில்லை. மேலும், இங்கே எனக்கு வெளிக்கிளம்பவே முடியாதபடி வேலைகள் அவ்வளவு அதிகமாய்க் கிடக்கின்றன.

விரதங்கள் பதினொன்று; இவை தேச ஸேவைக்கு உதவும் கருவிகளாகும்: ஆகவே தேசஸேவை, விரதங்களுள் ஒன்றாக அமைக்கப் பெறவில்லை.

தந்தையைச் சீக்கிரத்தில் மலைவாஸத்திற்கு அழைத்துப் போகவும்.

22—5—'35 பாபுவின் ஆசிர்வாதங்கள்

XIX

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

என் வலது கை இளைப்பாறிக் கொண்டிருக்கிறது. என்றாலும் கடிதங்கள் எழுத வேண்டிய வேலைக்குப் பங்கம் வராமல் எல்லாவற்றையும் காலதாமதமின்றிச் செய்கிறதற்காக டைப் அடிக்கிறவருக்குக் கடிதங்களைச் சொல்லிக்கொண்டே போகிறேன். கிருஷ்ணஸ்வாமிக்கு வைத்தியம் செய்வதை உன் தகப்பனார் தடைசெய்யாத படி, நீயும் உன் அம்மாவும் ஒன்று சேர்ந்து உங்களால் ஆனதையெல்லாம் செய்யவேண்டும். அவனுடைய புண் ஆறி வருகிறது என்று எண்ணுகிறேன். திடகாத்திரர் களுக்குக்கூட இப்படிப்பட்ட சின்னச் சின்ன ஆப்ப ரேஷன்கள் எவ்வளவு தொல்லை என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இந்தப் புண்கள் குணமாக ரொம்பக் காலம் செல்லும்.

குவெட்டா பூகம்ப அதிர்ச்சி நிவாரணத்துக்கு நீ அனுப்பின பணத்தை வைத்துக்கொண்டிருக்கிறேன். சரி யான வேளை வரும்போது அதை உபயோகப்படுத்துவேன். ஹரிஜனக் கிராமக் கிணறுகளுக்காக, உனக்கு ஒழிந்த நேரங்களில் பணம் வசூல் பண்ணப் பிரயத்தனம் செய். முதலிலே உன் அப்பா அம்மாவிடத்திலிருந்து ஆரம்பிக் கலாம். இது சமய நெறிப்படி புண்ணிய கைங்கரியம். இந்தப் புண்ணியத்தை ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தேடிச் சம்பாதிக்கவேணும். இதைப்பற்றி நான் ஹரிஜன் பத்திரிகையில் எழுதியதை எல்லாம் வாசித்திருப்பாயே. இங்கே மழை பெய்தது. உஷ்ணமும் ரொம்பக் குறைந்து விட்டது.

[கிருஷ்ணஸ்வாமி – அம்புஜம்மாள் புதல்வர்.]

வர்தா
25–6–'35 }

அன்புள்ள
பாபு

XX

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

இன்று உனக்கு ஹிந்தியில் கடிதம் எழுதுகிறேன். படிக்க முடிகிறதா, இல்லையா என்று எழுது. வேண்டா மென்றால் ஆங்கிலத்தில் எழுதுகிறேன்.

கிச்சியைக் கவனித்துப் பார்த்துக் கொள்ள நம்மால் என்ன முடியும்? கடவுளால் தான் முடியும்.

தற்சமயம் இங்கே மழையாக இருக்கிறது. கனுவுக்கு ஜுரம், மிகவும் பலஹீனமாயிருக்கிறான். தற்சமயம் ராஜகுமாரி அமிர்த கௌரும், குர்ஷெத்பேனும் இருக்கிறார்கள்; பிரபாவதியும் அம்துல் ஸலாமும் முன்பே உள்ளவர்கள்.

உன் பழங்கள் கிடைத்தன. தேனும் நன்றாயிருந்தது; உனக்குத் தோன்றும் பொழுது பழமும் தேனும் அனுப்பு. இரண்டும் குறைந்த விலையில் இருக்கட்டும்; ஏனென்றால் இங்கே பிரதி தினமும் நிவேதனம் நடைபெறவேண்டியிருக்கிறதல்லவா? என் உணவு: 1-எலுமிச்சம்பழம், 2-கீரை, 3-வர்தா பழம். பழத்தைப் பல தடவை நிறுத்துவதும் உண்டு.

14—8—'35 பாபுவின் ஆசிர்வாதம்

[கிச்சி – கிருஷ்ணஸ்வாமி. கனு – கனு காந்தி, காந்தியடிகளின் பேரன்.]

XXI

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உன் கடிதம் கிடைத்தது. இப்பொழுது ஜுரம் முற்றிலும் போயிருக்கவேண்டும். ஓம் அங்கே தங்கி விட்டாள். அவளை அடிக்கடி சந்திக்கவும். தாய் தந்தையரின் அனுமதி கிடைத்த பிறகே வரவும். ரஸம் செய்யும் முறையைப் படித்தேன். ரஸம் ஜுரம் அடிப்பவர்களுக்கும் கொடுப்பதாகக் கேட்டிருக்கிறேன். ரஸத்தைப்பற்றி அங்கே நாட்டு வைத்தியர்களும் டாக்டர் களும் என்ன சொல்லுகிறார்கள் என்று எழுது.

சென்னையில் ஸோயாபீன் கிடைக்கிறதா ? கிடைக்கிற தானால் விலை என்ன? அங்கே விளைந்ததா, வெளியி லிருந்து வந்ததா ? மாதிரி அனுப்பு.

23—10—'35
மகன்வாடி,
வர்தா

பாபுவின் ஆசிர்வாதங்கள்

XXII

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உன் கடிதம் கிடைத்தது. ஆனந்தம் அடைந்தேன், கிருஷ்ணஸ்வாமி சுகியாவான். மருமகளுக்குத் திருப்தி தானே? உனது உடலும், மனமும் சௌக்யமாயிருக்கும், தாயும் தந்தையும் ஆனந்தத்தில் ஆழ்ந்திருப்பார்கள்.

இங்கே சீதோஷ்ணம் நன்ருயிருக்கிறது. ஸர்தார் நன்ருகத் தினமும் சுற்றுகிருர். எல்லோரும் சௌக்யமா யிருக்கிருர்கள்; நானும் சௌக்யம்.

ஆம், பங்களூரில் மொத்தம் 15 தினங்கள் இருப் போம். 31உ அங்கே போவோம். பங்களூருக்கு ஒன் றிரண்டு தினங்கள் உனக்கு வரமுடிந்தாலும் நன்ரு யிருக்குமே. வர்தா போவதென்ருல் சென்னையிலிருந்து தான் போகவேண்டும்.

கமலா இரண்டு மூன்று தினங்கள் என்னேடு இருக்க விரும்புகிருள். நான் சம்மதம் தெரிவித்துவிட்டேன்.

நந்தி துர்க்கம்
25-5-'36

பாபு

ஆங்கிலத்தில்

மேலே கண்டதை நீ சுளுவாகப் படிக்க முடிந்ததா என்று சொல்லு. அங்கே காலேஜில் ஸ்ரீமதி எஸ்தர் மேனன் இருக்கிருர். முடிந்தால் அவரை என் சார்பில் பார்த்துச் சிநேகம் செய்துகொள். அவர் மிகவும் நல்லவர். அவர் டென்மார்க் தேசத்தவர், மலையாளத்தைச் சேர்ந்த ஸ்ரீ மேனனை மணந்திருக்கிருர்.

XXIII

மஹாதேவ் தேசாயியின் கடிதம் ஹிந்தியில்

வர்தா

26-9-'36

அன்புள்ள சகோதரி,

உன்னுடைய 23-ந் தேதிக் கடிதம் கிடைத்தது. இரண்டு கூடைப் பழங்களும் இன்று வந்து சேர்ந்தன. தென் இந்தியக் கிராமங்களைக் குறித்து நீ சொல்வது எனக்கு மிகவும் ருசிகரமாயிருக்கிறது. இடத்திற்கு இடம் கொஞ்சம் வித்தியாசம் இருக்கக் கூடியதுதான். ஒரு வேளை, கிராமங்களில் எல்லாம் வங்காளத்துக் கிராமங்களே மலேரியா மயம் என்று சொல்லலாம். ஆனால் சில தென் இந்தியக் கிராமங்களில் மலேரியாவே கிடையாது என்று நீ சொல்லுகிறாயே, அது முற்றும் சரிதானா? மலேரியா நமது கிராம வாழ்வின் பிரிக்க முடியாத அம்சமென்று ராஜாஜி என்னிடம் சொன்னாரே!

பியாரேலாலும் க்கான் சாகிபும்தான் இப்போது பாபுவுடன் இருக்கிறார்கள். வேறு இரண்டு தொண்டர்களும் இருக்கிறார்கள். பெயரைச் சொன்னால் உனக்குத் தெரியாது......

க்கான் ஸாஹிபை நான் மறுபடியும் பார்க்கும்போது நீ விசாரித்ததாகச் சொல்லுகிறேன். பாபு இன்னும் பலவீனமாகவே யிருக்கிறார். நீங்கள் எல்லாரும் சௌக்கியம் என்று நம்புகிறேன்.

ஸ்ரீமதி அம்புஜம்மாள்,
அம்ஜத்பாக், லஸ்,
மயிலாப்பூர், மதராஸ்.

உண்மையுள்ள,
மஹாதேவ்

XXIV

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உன் கையினால் துளஸீ ராமாயணம் தமிழில் மொழி பெயர்க்கப்படுகிறது என்பது எனக்கு மிகவும் சந்தோஷமான விஷயமாகும். உனது இந்தப் புண்யம் தரும் முயற்சியினால், தமிழ் மக்கள் துளஸீதாஸருடைய ஒப்பற்ற பிரஸாதத்தின் பயனைப் பெறக்கூடும்.

வர்தா
ஸேவா கிராமம்
13-12-'36

பாபுவின் ஆசிர்வாதம்

பின் குறிப்பு: ஆங்கிலத்தில்

இதற்குமுன் பதில் எழுத இயலவில்லை. எனது செய்தியை நீ எளிதில் படித்துப் புரிந்துகொள்ள முடியும் என்று எதிர்பார்க்கிறேன். பழம் தவறாமல் வந்துகொண்டிருக்கிறது. நான் ஃபெய்ஸ்பூருக்கு 20உ போய் 25உ திரும்புகிறேன்.

வர்தா
ஸேவா கிராமம்
13-12-'36

அன்பு
பாபு

XXV

ஹிந்தியில்

ஸேவாக் கிராமம்
1-3-'37

ஸ்ரீ அம்புஜம்,

உனது கடிதம் கிடைத்தது. இது என்ன, எழுதச் சோம்பிவிட்டுப் பிறகு மன்னிப்பு வேண்டுவதா? முயன்றும், ஒரு காரியம் செய்ய இயலாவிடில்தான், மன்னிப்புக் கேட்டல் சரியாகும். ஆம், 'பீமாரி'னல் எழுத முடிந்திராவிட்டால் அது வேறு விஷயம். தாயார் இப்பொழுது சௌக்கியமாயிருப்பார், ஸம்மேளனத்திற்குச் சென்னை வருவதாக நான் தீர்மானித்திருக்கிறேன், அப்பொழுது சந்திப்போம்.

பாபுவின் ஆசிர்வாதம்

[பீமாரி – நோய்.]

XXVI

ஹிந்தியில்

ஸேவாக் கிராமம்
14-5-'37

ஸ்ரீ அம்புஜம்,

உனது கடிதம் கிடைத்தது, பழங்களும் கிடைத்தன. ரயிலில் யாரோ கொஞ்சம் ஆப்பிளைத் திருடியிருக்கிறார். கூடையை நன்றாகக் கட்டவேண்டும். மறுபடியும் பழம் அனுப்பும்பொழுது எலுமிச்சம்பழம் வைத்து அனுப்பு. இங்கே அவை நல்லதாகக் கிடைப்பதில்லை. வர்தாவில் நல்ல வெய்யில்.

கோமதியைப் பற்றி எழுதிவிட்டேன்.

பாபுவின் ஆசிர்வாதங்கள்

[illegible],

Your letter & fruit have come. Fruit this time has been most welcome because it was needed badly. I can't get good oranges or mosambis in Bombay. And I need them for patients or semi-patients. You may therefore send me such mosambis whenever you can. Our understanding is that they must be reasonably cheap. I suppose I could get almost any fruit if I don't count the cost. But that must not be. I did take the mosambis but I dared not take more than two when there were others in greater need.

I must not say more now.

17 : 7 : 37
Segaon-Wardha

Love
Bapu

காந்தி அடிகள் நூலாசிரியருக்கு
எழுதிய கடிதம்.
இதன் மொழி பெயர்ப்பு 104-ம் பக்கம்

XXVII

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உன் கடிதமும் பழமும் வந்துவிட்டன. பழம் இப்போது மிகவும் சரியான சமயத்திலேதான் வந்து சேர்ந்திருக்கிறது: ஏனென்றால் அது அத்யாவசியமாயிருந்தது. பம்பாயில் நல்லஆரெஞ்சுகளும் மொஸம்பி ஆரெஞ்சுகளும் எனக்குக் கிடைப்பதில்லை. நோயாளிகளுக்காகவும், அரைகுறை நோயாளிகளுக்காகவும் அவை எனக்குத் தேவையாக இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட மொஸம்பிப் பழங்களை இயன்ற போதெல்லாம் நீ எனக்கு அனுப்பி வைக்கலாம். கூடியவரைக்கும் அந்தப் பழங்களின் விலை நயமாயிருக்கவேணும் என்றுதானே நமது எண்ணம். நான் விலையைக் குறித்துக் கவனியாவிட்டால், ஏறக்குறைய எந்தப் பழமும் வாங்கிவிட முடியுமென்றே நினைக்கிறேன். ஆனால் அப்படித்தான் செய்யப்படாதே. நான் மொஸம்பிப் பழங்களைச் சாப்பிடத்தான் செய்தேன்; ஆனால் இரண்டு பழங்களுக்குமேல் சாப்பிடத் துணியவில்லை. என்னை விடத் தேவையானவர்கள் இருக்கிறார்களல்லவா ?

இப்போது நான் இதற்குமேல் அதிகமாய் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை.

ஸேவாக் கிராமம்,
வர்தா,
17-7-'37

அன்பு:
பாபு

XXVIII

ஹிந்தியில்

ஸ்ரீ அம்புஜம்,

உன்னிடமிருந்து பழங்கள் வந்துகொண்டே யிருக்கின்றன. எனக்கு அவகாசம் கிடைக்கவில்லை, அதனால் எழுதவில்லை.

ராமாயணம் என்ன ஆயிற்று? அக்டோபர் முழுவதும் நான் வெளியிலிருப்பேன். ஏதாவது ஒரு சமயம் சில தினங்கள் என்னுடன் இரு.

கமலாவிடமிருந்து எப்பொழுதாவது கடிதங்கள் வருகின்றனவா?

ஸேவாக் கிராமம்
10-9-'38

பாபுவின் ஆசிர்வாதம்

[கமலா — ஸ்ரீ எஸ். அம்புஜம்மாளின் ஒரு சிநேகிதி.]

XXIX

ஹிந்தியில்

ஸேவாக் கிராமம்
4—1—'44

ஸ்ரீ அம்புஜம்,

உனது கடிதமும் புஸ்தகமும் கிடைத்தன. புஸ்தகம் அழகாயிருக்கிறது. ஹிந்தியும், நூல் நூற்றலும் நடைபெறுகின்றன — என்பது நல்ல விஷயம். நீ கவலையை மட்டும் விட்டொழிக்க வேண்டும். எல்லாச் சுகதுக்கங்களையும் ஈச்வரார்ப்பணம் செய்து விடு. ரங்கநாயகி சௌக்கியமா?

பாபுவின் ஆசிர்வாதம்

[ரங்கநாயகி — 'குமுதினி' என்ற பிரசித்திபெற்ற எழுத்தாளர்.]

Printed at the Indian Express Branch Press, Mt. Rd., Madras.